




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI Volume- 3 Issue:204 08-02-2026 ஞாயிற்றுக்கிழமை Free E- Paper ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


# “உலகுக்கான இந்தியாவின் கொடையே தமிழ் மொழி!”

## மலேசியாவில் பிரதமர் மோடி பெருமிதம்




**கோலாலம்பூர், பிப்.8:** மலேசியப் பிரதமர் அன்வர் இப்ராஹிமின் அழைப்பின் பேரில் இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக பிரதமர் நரேந்திர மோடி மலேசியா சென்றுள்ளார். தலைநகர் கோலாலம்பூரில் பிரதமர் மோடியை விமான நிலையத்துக்கே வந்து அன்வர் இப்ராஹிம் வரவேற்றார். இதையடுத்து, பிரதமர் மோடி பங்கேற்க இருந்த சமூக நிகழ்ச்சிக்கு அவரை தனது காரிலேயே அழைத்துச் சென்றார்.

இந்திய வம்சாவளியினர் பெருமளவில் பங்கேற்ற சமூக நிகழ்ச்சியில் உரையாற்றிய அன்வர் இப்ராஹிம், “உங்கள் போராட்டத்தை நான் பின்தொடர்ந்து வருகிறேன். மோடியின் தனிப்பட்ட நண்பராக நான் இருப்பதை பாக்கியமாகக் கருதுகிறேன்” என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, வணக்கம் என்று கூறி அனைவரையும் வரவேற்றார். தொடர்ந்து பேசிய அவர், “இந்தியாவுக்கும் மலேசியாவுக்குமான தொடர்பு இதயப்பூர்வமானது. உலகில் இந்திய வம்சாவளியினர் அதிகம் இருக்கும் இரண்டாவது நாடு மலேசியா. இந்தியாவையும் மலேசியாவையும் இணைக்கும் விஷயங்கள் பல உள்ளன. இங்குள்ள நீங்கள் இரு நாடுகளையும் இணைக்கும் உயிருள்ள பாலமாக இருக்கிறீர்கள். நம் மொழிகளில் நாம் பகிரும் பல வார்த்தைகளில் நாம் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்கிறோம்.

மலேசியாவில் இந்திய இசை மிகவும் பிரபலம் என்று கேள்விப்பட்டேன். மலேசியப் பிரதமர் அன்வர் இப்ராஹிம் மிகச் சிறப்பாக பாடுவார். பல இந்தியர்களுக்கு இது தெரியாது. அவரது பாடல்கள் இந்தியாவில் வைரலாகின. அவருக்கு தமிழ் இசையில் ஆழ்ந்த ஆர்வம் உள்ளது என்பதை அறிந்து நான் மிகழ்ந்தேன். மலேசியாவில் உள்ள நேதாஜி சேவை மையம் மற்றும் நேதாஜி நல அறக்கட்டளையின் முயற்சிகளுக்கு வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். பல நூற்றாண்டுகளாக நீங்கள் இந்திய மரபுகளை பாதுகாத்து வருவது உண்மையிலேயே குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் மனதின் குரல் நிகழ்ச்சியில் உங்கள் பணி குறித்து நான் பேசினேன். மலேசியாவில் 500க்கும் மேற்பட்ட பள்ளிகள் இந்திய மொழிகளில் கல்வி கற்பிக்கின்றன என்பதை கூறினேன். இந்தியாவின் ஒவ்வொரு பகுதியில் இருந்தும் வந்த மக்களும் அவர்களின் வழித்தோன்றல்களும் இங்கே இருக்கிறீர்கள். பண்பாட்டு ஒற்றுமை என்ற நூல் நம்மை வலுவாகப் பிணைக்கிறது. வேற்றுமையில் ஒற்றுமை என்ற நமது புரிதலில்தான் நமது வலிமை அடங்கியுள்ளது.

தமிழ் மொழி, உலகுக்கான இந்தியாவின் கொடை. தமிழ் இலக்கியம் நித்தியமானது, தமிழ் நண்பாடு உலகளாவியது. தமிழர்கள் தங்கள் திறமைகளால் மனித குலத்துக்கு சேவை செய்கின்றனர். நாம் ஒருவருக்கு ஒருவர் வெற்றிகளைக் கொண்டாடுகிறோம். சந்திராயன்-2 திட்டத்தின் வெற்றிக்கு பிரதமர் அன்வர் இப்ராஹிம் தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தபோது நான் மிகவும் நெகிழ்ந்து போனேன். இந்தியாவின் வெற்றி மலேசியாவின் வெற்றி. இது ஆசியாவின் வெற்றி.

இந்தியாவின் யுபிஐ விரைவில் மலேசியாவுக்கு வர இருக்கிறது என்பதை அனைவருடனும் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கு வருகை தருமாறு உங்கள் அனைவரையும் அழைக்கிறேன். கடந்த சில ஆண்டுகளில் இந்தியா உள்கட்டமைப்பு மற்றும் இணைப்பு வசதிகளில் முன் எப்போதும் இல்லாத வளர்ச்சியைக் கண்டுள்ளது. வந்தே பாரத் போன்ற நவீன ரயில்கள் சர்வதேச அளவில் பாராட்டுக்களைப் பெற்று வருகின்றன. நீங்கள் பயணம் செய்து நம்ப முடியாத இந்தியாவை அனுபவிக்குமாறு உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா ஒரு பெரிய மாற்றத்தைக் கண்டுள்ளது. ஒரு காலத்தில் இந்தியா 11வது பெரிய பொருளாதாரமாக இருந்தது. இப்போது, முதல் மூன்று இடங்களை நோக்கி முன்னேறி வருகிறோம். நாம் உலகின் வேகமாக வளரும் முக்கிய பொருளாதாரமாக இருக்கிறோம். இந்தியாவில் தயாரிப்போம் என்பது அப்போதுதான் நடப்பட்ட ஒரு இளம் செடியாக இருந்தது. இப்போது, இந்தியா உலகின் இரண்டாவது பெரிய மொபைல் போன் தயாரிப்பு நாடாக உள்ளது” என தெரிவித்தார். முன்னதாக, 800-க்கும் மேற்பட்ட நடன கலைஞர்கள் ஒன்றிணைந்து நடனமாடினர்

# இந்தியா மீது 25% வரியை ரத்து செய்து அதிபர் கையெழுத்து



**வாஷிங்டன், பிப்.8:** இந்தியா அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்த கூட்டறிக்கையை வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா இந்தியா இடையேயான வர்த்தக ஒப்பந்த கூட்டறிக்கையை இறுதி செய்திருக்கும் இருநாடுகளுக்கான கூட்டறிக்கையை வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது:

இந்தியா மீதான 25 சதவிகித அபராத வரியை ரத்து செய்யும் உத்தரவில் அமெரிக்க அதிபர் டிரம்ப் கையெழுத்திட்டார்.

இந்தியா மீண்டும் ரஷ்யாவிடமிருந்து எண்ணெய்யை வாங்கினால் கடுமையான வரிகள் விதிக்கப்படும் என்றும், அமெரிக்காவிடம் எண்ணெய் வாங்க ஒப்புக்கொண்டது. இதனால் இந்த ஒப்பந்தம் கையெழுத்தான தாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் உத்தவின் மூலம் இந்தியா மீது இருந்த வரி தற்போது 18 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்கியதால் கூடுதலாக விதிக்கப்பட்ட 25% வரி ரத்து செய்யப்படுவதாகவும், இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் குறித்து இந்தியா - அமெரிக்கா கூட்டறிக்கைவெளியிட்டுள்ளது.

டிரம்ப் உத்தரவுக்கு நன்றி தெரிவித்து பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

பிரதமர் மோடி நன்றி

இரு நாடுகளுக்கு இடையேயான ஒப்பந்தத்தின் அர்ப்பணிப்புக்காக அமெரிக்க அதிபர் டிரம்ப்க்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கு இடையேயான நம்பிக்கையையும், ஆழமான பங்களிப்பையும் பிரதிபலிக்கிறது.

# விக்கிரவாண்டி தொகுதியில் விஜய் போட்டி?

**சென்னை, பிப்.8:** வரும் தமிழக சட்டசபை தேர்தலில் விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் போட்டியிடத் திட்டமிட்டிருப்பதாக தெரிகிறது.

முதல் முறையாக சட்டமன்ற தேர்தலை விஜய்யின் கட்சி சந்திக்கிறது. 234 தொகுதிகளிலும் களம் இறங்கும் அந்தக் கட்சியின் முதல்வர் வேட்பாளராக நடிகர் விஜய் முன்னிறுத்தப்பட்டுள்ளார்.

“ஆட்சியைப் பிடித்தே தீருவோம்” என்ற நம்பிக்கையோடு தேர்தலை சந்திக்கும் கட்சியின் ஒவ்வொரு தொகுதியிலும் போட்டியிடத் தகுதியான வேட்பாளர் தேர்வு விரைவில் நடைபெற உள்ளது. இந்நிலையில் விஜய் போட்டியிடப் போகும் தொகுதி பற்றியும் ஆலோசித்து வருகிறார்கள்.

இந்தத் தொகுதியில் உள்ள வி.சாலையில் தான் கட்சியின் முதல் அரசியல் மாநாடு நடந்தது. விக்கிரவாண்டியில் போட்டியிட்டால் தனது தொகுதியில் பிரசாரம் செய்வதோடு மாநிலத்தின் இதரப் பகுதிகளுக்கும் எளிதாக பிரசாரம் செய்ய சென்று வரலாம் என்று அவர் கருதுவதாகத் தெரிகிறது.

# திமுகவை எந்த கொம்பனாலும் தொட்டுப்பார்க்க முடியாது; முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



**விருதுநகர், பிப்.8:** தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் நடைபெற வாய்ப்பு உள்ளது. தேர்தலுக்கு இன்னும் ஓரிரு மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன.

பிரசாரம், பொதுக்கூட்டம், கூட்டணி, தொகுதி பங்கீடு, நலத்திட்டப்பணிகள், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை என பல்வேறு நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில், திமுக தென்மண்டல இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் விருதுநகரில் இன்று நடைபெற்று வருகிறது. இந்த கூட்டத்தில் திமுக தலைவரும், முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின் கூறியதாவது,

விருதுநகர் என்றாலே பெருந்தலைவர் காமராஜர்தான் நினைவுக்கு வருவார். விருதுநகரில் மாநாடு நடத்தினால் அடுத்த தேர்தலில் திமுக வெற்றிபெறுவது உறுதி.

இளைஞரணியை தொடங்கியபோது விருதுநகரில் எனது காலடித்தடம் பதியாத இடமே கிடையாது.

நம்பிக்கையாக இருக்கும் உங்களை பார்க்கும்போது எனது நம்பிக்கைக்குமே உற்சாகம் வருகிறது.

விருதுநகரில் 2004ல் தென்மண்டல மாநாடு நடத்தினோம். தேர்தலில் 40க்கு 40ல் வெற்றிபெற்றோம். 2019ல் பரப்புரையை தொடங்கி வெற்றிபெற்றோம்.

திமுக மாநாடு வாரம் வாரம் நடக்கக்கூடியதாக மாறிவிட்டது. இம்மாதம் மட்டும் 5 மாநாடு நடக்க உள்ளது.

7வது முறையாக திமுக ஆட்சிமைக்கும். தேர்தலில் மெத்தனமாக இருக்கக்கூடாது. இன்னும் பல நூற்றாண்டுகள் ஆனாலும் திமுகவை எந்த கொம்பனாலும் தொட்டுப்பார்க்க முடியாது.

தமிழுக்கு பல்வேறு கால கட்டங்களில் ஆபத்து வந்தபோது போராடி தந்துள்ளோம். இன்றைக்கும் இந்தியை திணிக்கும் ஆபத்து தலைக்குமேல் கத்திபோல் தொங்கிக்கொண்டிருக்கிறது.

சாதனைகளில் தமிழ்நாட்டிற்கு நிகர் தமிழ்நாடுதான். அனைத்து துறையிலும் நம்பர் 1 மாநிலமாக இருந்தாலும் பட்ஜெட்டில் தமிழ்நாட்டில் ஒன்றும் கொடுக்கவில்லை.

எடப்பாடி பழனிசாமி என்.டி.ஏ. பழனிசாமியாக மாறிவிட்டார். நானும் ரவுடிதான் என்பதுபோல் நான் தான் கூட்டணிக்கு தலைமை என எடப்பாடி பழனிசாமி புலம்பிக்கொண்டிருக்கிறார். தனக்கு பதவி கொடுத்தவர்களேயே எடப்பாடி பழனிசாமி கட்சியை விட்டு நீக்கினார்.

தேர்தலில் அதிமுக மிகப்பெரிய தோல்வியை அடையப்போகிறது என்றார்.

## இன்றைய பஞ்சாங்கம்

08.02.2026 தை 25
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.35

**திதி:**
இன்று அதிகாலை 5.13 வரை சஷ்டி பின்பு சப்தமி .

**நட்சத்திரம்:**
இன்று அதிகாலை 4.53 வரை சித்திரை பின்பு சுவாதி

**யோகம் :**
இன்று அதிகாலை 2.04 வரை சூலம் பின்பு கண்டம்

**கரணம் :**
இன்று அதிகாலை 5.13 வரை வணிசை பின்பு மாலை 6.09 வரை பத்திரை பின்பு பவம்.

**அமிர்தாதி யோகம் :**
இன்று அதிகாலை 4.53 வரை யோகம் சரியில்லை பின்பு காலை 6.34 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

**சந்திராஷ்டமம்**
இன்று அதிகாலை 4.53 வரை பூரட்டாதி பின்பு உத்திரட்டாதி.

**நல்ல நேரம்**
காலை 7.30 – 8.30.
மாலை 3.30 – 4.30

**இராகு காலம்**
மாலை 4.30 – 6.00.

**எமகண்டம்**
பிற்பகல் 12.00 – 1.30.

**குளிகை**
பிற்பகல் 3.00 – 4.30.

இன்று சுபமுகூர்த்த நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட் பிப்.17 தாக்கல்: சபாநாயகர் அறிவிப்பு



**சென்னை, பிப்.8:** தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட் பிப்.17-ம் தேதி தாக்கல் செய்யப்படும் என சபாநாயகர் அப்பாவு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் சபாநாயகர் அப்பாவு கூறியதாவது: தமிழக சட்டப்பேரவை விதி எண் 26/1-ன் கீழ் தமிழக அரசின் சட்டப்பேரவை கூட்டத் தொடர் வரும் 17-ம் தேதி காலை 9:30 மணிக்கு சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் கூடுகிறது. அன்றைய தினம் 2026- 27 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்கிறார்.

சட்டப்பேரவை விவாதங்களை முழுமையாக நேரலை செய்வது குறித்து சட்டப்பேரவை அலுவல் ஆய்வு குழு முடிவு செய்யும். இவ்வாறு அப்பாவு கூறினார்.








## திருக்குறள் குறள்-524

**சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்**



சுற்றத்தாரால் சுற்றப்படும்படியாக அவர்களைத் தழுவி அன்பாக வாழ்தல் ஒருவன் செல்வத்தைப் பெற்றதனால் பெற்ற பயனாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



வெற்றி வேண்டும் என்றால் நீ விரும்பியதை செய் மகிழ்ச்சி வேண்டும் என்றால் பிறர் விரும்புவதை செய்

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு




தூத்துக்குடி லூர்தம்மாள்புரம் புனித லூர்து அன்னை ஆலய திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

## அதிமுக தேர்தல் வாக்குறுதி துண்டுபிரசுரம்



அம்பாசமுத்திரத்தில் அதிமுக எம்எல்ஏ இசக்கி சுப்பையா, அதிமுக தேர்தல் வாக்குறுதி துண்டுபிரசுரம் வழங்கி வாக்கு சேகரித்தார்.

## தை மாதம் 4-ஆம் வெள்ளியை முன்னிட்டு ஸ்ரீஐஸ்வர்ய மகா கௌரி பூஜை, ஸ்ரீ லலிதாம்பிகை பூஜை, ஊஞ்சல் உற்சவம் சிறப்பு வழிபாடு



**பொள்ளாச்சி, பிப்.08:**
பொள்ளாச்சி ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தை மாதம் 4- ஆம் வெள்ளிக்கிழமையை முன்னிட்டு மூலவர், உற்சவர்க்கும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, ஸ்ரீ ஐஸ்வர்ய மகா கௌரி பூஜை, ஸ்ரீ லலிதாம்பிகை பூஜை,ஊஞ்சல் உற்சவத்தில் பெண்கள் அனைவரும் பாட்டுக்கள் பாடி, ஆரத்திகள் காண்பித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜைகளில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசு



திருவண்ணாமலை அம்மாபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு திமுக எம்எல்ஏ, பெ.சு.தி.சரவணன் பரிசு வழங்கினார்.

## திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் வெற்றி பெற்ற மயிலாடுதுறை மகாலெட்சுமி நர்சரி பிரைமரி பள்ளி குழந்தைகளுக்கு பாராட்டுவிழா



**மயிலாடுதுறை,பிப்.08 :**
தமிழ்நாடு தனியார் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகளின் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் மயிலாடுதுறை மாவட்ட அளவில் பள்ளிக் குழந்தைகளுக்கு திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி சீர்காழி அருகே உள்ள பூம்புகார் மேலையூர் ஸ்ரீ முத்தையா நர்சரி பள்ளியில் நடைபெற்றது.

45 பள்ளிக் குழந்தைகள் வகுப்பு வாரியாக நடைபெற்ற போட்டிகளில் மயிலாடுதுறை மகாலெட்சுமி நர்சரி பள்ளி குழந்தைகள் சிறப்பாக பங்கேற்று இரண்டாம் வகுப்பு மாணவி செல்வி ஏ.வி.சாய் இனியாள் மாவட்ட அளவில் மூன்றாவது பரிசையும் ( 175 குறள்).மற்றும் ஐந்தாவது வகுப்பு மாணவி செல்வி வி.திலகரத்ணா இரண்டாவது பரிசு ( 209 குறள் ) தட்டிச்சென்றனர்.

இவர்களது திறமையை பாராட்டி மாயூரம் லயன்ஸ் சங்கம் சார்பில் பள்ளி வளாகத்தில் பாராட்டுவிழா நடைபெற்றது.

இவ்விழாவில் பள்ளி தாளாளர் ஹேமா வீரமணி வரவேற்க, லயன்ஸ் மாவட்ட தலைவர் வி.சிவசங்கரன் தலைமை தாங்க லயன் கே.பத்பனாபன் பரிசுகள் வழங்க லயன் கவிஞர் எஸ். இராதாகிருஷ்ணன்சிறப்புரை ஆற்றினார் .

மாயூரம் லயன்ஸ் சங்க பொருளாளர் லயன் கே.இளங்கோவன் நன்றி கூறினார். பள்ளி குழந்தைகள் அவர்களது புகைப்படத்துடன் கூடிய ஷீல்ட் வழங்கப்பட்டது. பரிசு பெற்ற குழந்தைகள் இருவருக்கும் திருக்குறள் வித்தகி என்ற பட்டம் அளிக்கப்பட்டது. விழாவில் லயன்ஸ் சங்க உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## எரமலூர் ஸ்ரீசுந்தரவல்லி தாயாருக்கு விஷேச பூஜைகள்..!



**வந்தவாசி, பிப் .08:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த எரமலூர் ஸ்ரீசுந்தரவல்லி தாயார் சமேத ஸ்ரீசுந்தர வரதராஜ பெருமாள் கோவிலில் தை கடைசி வெள்ளிக்கிழமை முன்னிட்டு மூல மூர்த்திகளுக்கு பால், தயிர், சந்தனம், இளநீர் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. பிறகு உற்சவ மூர்த்திகள் கிளி மாலைகள் அணிந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். பிறகு ஊஞ்சல் தாலாட்டு வைபவம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

**பா. சீனிவாசன்,
வந்தவாசி.**

## புதிய வழித்தடத்தில் பேருந்து சேவை



நாகை கேதாரிமங்கலத்தில் நேற்று புதிய வழித்தடத்தில் பேருந்து சேவையை மீன்வளர்ச்சி கழகத் தலைவர் கவுதமன் துவக்கி வைத்தார்.

## நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கார்த்திகா பிரசாரம்



கீழ்வேலூரில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கார்த்திகா பிரசாரம் துவக்கினார்.

## காங்கிரசார் ஆர்ப்பாட்டம்



சீர்காழியில் மக்களவைத் தலைவரை கண்டித்து காங்கிரசார் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## இரண்டு நாள் தேசிய கருத்தரங்கம்



ஆரணி டாக்டர் எம்ஜிஆர் பல்கலைக்கழகத்தில் பொறியியல் தொழில் நுட்பத் துறை மற்றும் அறிவியல் துறை சார்பில் இரண்டு நாள் தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது.

## மாணவிகள் மரக்கன்று நட்டனர்



திருநெல்வேலி ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாமில் நாரணம்மாள்புரத்தில் மாணவிகள் மரக்கன்று நட்டனர்.

## அரசு உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு பணி மேம்பாட்டு ஊதியம் வழங்கக் கோரி சாலை மறியல் போராட்டம்



மதுரையில் அரசு உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு பணி மேம்பாட்டு ஊதியம் வழங்கக் கோரி, நேற்று ஏயூடி, மூட்டா சார்பில், சாலை மறியல் போராட்டம் நடந்தது. இதில் 270 பேரை போலீஸார் கைது செய்தனர்.

## செய்யாறில் அ.தி.மு.க. சார்பில் தெரு முனைப் பிரச்சாரக் கூட்டம் !




**செய்யாறு, பிப். 08:**
திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு நகரக் கழகம் அ.தி.மு.க., சார்பில் தெரு முனைப் பிரச்சாரக் கூட்டம் செய்யாறு நகர செயலாளர் வெங்கடேசன் ஏற்பாட்டில் நடந்தது.

இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக திருவண்ணாமலை வடக்கு மாவட்ட செயலாளர் தூசி மோகன் மற்றும் முன்னாள் அமைச்சரும் கழக அமைப்பு செயலாளருமான முக்கூர் சுப்பிரமணியன் ஆகியோர் தலைமைத் தாங்கினர். கழக பேச்சாளர் புதூர் மணி அ.தி.மு.க.வின் முதற்கட்ட தேர்தல் வாக்குறுதிகள் குறித்து விளக்கிப் பேசினார்.

அ.தி.மு.க., ஆட்சி காலத்தில் கொண்டு வந்த அனைத்து திட்டங்களும் திமுக அரசு நிறுத்திவிட்டது. வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் முதலமைச்சராக்க வேண்டும் எனறு பொதுமக்களிடம் எடுத்துக் கூறினர்.

இந்த நிகழ்ச்சியில் நகர செயலாளர் வெங்கடேசன், நகர அவைத் தலைவர் ஜனார்த்தனன், மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் ரவிச்சந்திரன், மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் அருணகிரி, இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் அருண், மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற துணை செயலாளர் இளையராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## மாதாகோட்டையில் ஜல்லிக்கட்டு : 35 பேர் காயம்

தஞ்சாவூர், பிப்.8:

தஞ்சாவூர் மாவட்டம் மாதா கோட்டையில் லூர்து மாதா ஜல்லிக் கட்டு பேரவை சார்பில், புதன்கிழமை நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் 35 பேர் காயமடைந்தனர். ஜல்லிக்கட்டுப் போட்டிக்கு முன்பு தஞ்சாவூர் கோட்டாட்சியர் ப.நித்யா தலைமையில் உறுதி மொழி ஏற்கும் நிகழ்ச்சி நடை பெற்றது. இதைத்தொடர்ந்து, வாடி வாசலில் இருந்து தஞ்சாவூர், புதுக் கோட்டை, திருச்சி, மதுரை, அரியலூர், பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து 700 காளைகள் ஒவ்வொன்றாக வாடிவாசலில் இருந்து அவிழ்த்து விடப்பட்டன. காளைகளைப் பிடிக்க மொத்தம் 400 வீரர்கள் 8 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு களமிறக்கப்பட்டனர். காளைகளை அடக்கியவர்களை வெற்றி பெற்ற வர்களாக அறிவித்து, அவர்களுக்கு சைக்கிள், டைனிங் டேபிள், சில்வர் பாத்திரம் உள்ளிட்டவை பரிசுகளாக வழங்கப்பட்டன. மாடுகள் பிடிபட வில்லை என்றால், மாட்டின் உரிமை யாளருக்கு பரிசு அளிக்கப்பட்டது. இப்போட்டியில் மாடுபிடி வீரர்கள், மாட்டின் உரிமையாளர்கள், பார்வை யாளர்கள் உள்பட மொத்தம் 35 பேர் காயமடைந்தனர். பலத்த காயமடைந்த 17 பேர் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

## பெரம்பலூரில் 10 ஆவது புத்தகத் திருவிழா

பெரம்பலூர், பிப்.8:

பெரம்பலூர் மாவட்ட நிர்வாகமும், பெரம்பலூர் மக்கள் பண்பாட்டு மன்றமும் இணைந்து நடத்தவுள்ள 10 ஆவது புத்தகத் திருவிழா, பிப்.27 முதல் மார்ச் 8 வரை புதிய பேருந்துநிலையம் எதிரில் நடைபெற உள்ளது. இப்புத்தக திருவிழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட பதிப்பகத்தாரின் அரங்குகள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட தலைப்புகளிலான ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் இடம்பெற உள்ளன. புத்தக வாசிப்பு நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் இன்றியமையாததாகும். நம் குழந்தைகளுக்கு புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திட வேண்டும். அனைவரின் வீட்டிலும் நூலகம் இருப்பது நம் வாழ்வை நாமே செம்மைப்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பாக அமையும். கடந்த 9 ஆண்டுகளாக பெரம்பலூர் மாவட்டத்தில் வெகு விமர்சையாக நடத்தப்பட்ட புத்தகத் திருவிழா, இந்த ஆண்டும் சிறப்பாக நடத்தப்படவுள்ளது. 10 ஆவது புத்தகத் திருவிழாவில் தலைசிறந்த பேச்சாளர்கள், இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் பங்குபெற உள்ளனர். பொதுமக்கள், சிறுவர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் பயனடையுமாறு பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் ந.மிருணாளினி தெரிவித்துள்ளார்.

## மீனவர் குடும்ப இளைஞர்களுக்கு இலவசப் பயிற்சி

தஞ்சாவூர், பிப்.8:

தஞ்சாவூர் மாவட்ட மீனவ இளைஞர்களுக்கு, தமிழக கடலோர பாதுகாப்பு குழுமத்தால் இலவசமாக பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. தமிழக மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு கடற்படை, கடலோர பாதுகாப்புப் படை, தமிழக காவல்துறை, ஊர்க்காவல் படையில் பணியில் சேர்வதற்கு 90 நாட்கள் பயிற்சி அளித்து, சிறப்பு வகுப்புகளை தமிழக கடலோர பாதுகாப்பு குழுமம் நடத்தி வருகிறது. பட்டுக்கோட்டை கடலோர பாதுகாப்புக் குழும ஆய்வாளர் மஞ்சுளா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 27 கடலோர கிராமங்களில் உள்ள பன்னிரண்டாம் வகுப்பு படித்த கணிதம் மற்றும் இயற்பியல் பாடத்தில் 50 விழுக்காடு மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு, தமிழக அரசால் இந்த இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த பயிற்சிக் காலத்தில் தங்குமிடம், உணவு, மாதம் ஆயிரம் ரூபாய் உதவி தொகை வழங்கப்படுகிறது. விண்ணப்பத்தை பிப்.15 ஆம் தேதிக்குள் அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பங்களை அதிராம்பட்டினம் மற்றும் சேதுபாவாசத்திரம் கடற்கரை காவல் நிலையத்தை அணுகி பெற்றுக் கொள்ளலாம்" எனக் கூறப்பட்டுள்ளது.

## வகுப்பறை கட்டடம் திறப்பு

பாபநாசம், பிப்.8:

தஞ்சாவூர் மாவட்டம் சாலியமங்கலம் அருகே ராராமுத்திரைக் கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ.1 கோடியில் புதிதாக கட்டப்பட்ட 6 வகுப்பறை கட்டத்தை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தார். பள்ளியில் நடந்த இதற்கான நிகழ்ச்சியில் அம்மாப்பேட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் குமார், ராராமுத்திரைக் கோட்டை முன்னாள் ஊராட்சித் தலைவர் சோழன், பள்ளி தலைமை ஆசிரியர் கேத்ரின் நிர்மலா உட்பட பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

# நல்ல பழக்கங்கள் தேர்வுகளை எதிர்கொள்ள உதவும்: பள்ளி மாணவர்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி அறிவுரை





சென்னை, பிப்.8:

நல்ல பழக்கங்கள், கடினமான தேர்வுகளை எதிர்கொள்ள உதவும் என்று ஆளுநர் ஆர் .என் .ரவி கூறினார். பள்ளி மாணவர்களிடம் மன அழுத்தம் இல்லாத சூழலை உருவாக்க பிரதமர் மோடி தலைமையில் 'தேர்வு வீரர்கள்' என்ற இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த இயக்கம் சார்பில் 'பரிக்ஷா பே சர்ச்சா' என்ற நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இதன் படி, திருவள்ளூர் மாவட்டம் திருவேற்காடு பகுதியில் உள்ள ஆர்எம்கே பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆளுநர் ஆர் .என் .ரவி சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று, 1,500-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடினார்.

அப்போது ஆளுநர் பேசியதாவது: மாணவ, மாணவிகள் அதிகாலையில் எழுந்து, உடற்பயிற்சி, யோகா செய்ய வேண்டும். தினமும் கடினமான பாடங்களைப் படிக்க வேண்டும். நல்ல பழக்கங்கள், கடினமான தேர்வுகளை எதிர்கொள்ள உதவியாக இருக்கும். வினாத்தாளை வாங்கியதும், தெரியாத கேள்விகளைப் பார்த்து பதற்றப்படக் கூடாது. நாம் நினைத்தது நடைபெறாவிட்டல், அதை தோல்வியாக கருதக் கூடாது. சிறு பின்னடைவாக கருத வேண்டும்.

மீண்டும் முயற்சி செய்து, நினைத்ததை முடிக்கவேண்டும். சாதனையாளர்களின் சுயசரிதையைப் படித்து, அதை ஊக்கமாக எடுத்துக் கொள்ளுங்கள்.இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து, தேர்வை தைரியமாக எதிர்கொள்வது குறித்து பிரதமர் மோடி எழுதிய 'தேர்வு வீரர்கள்' என்ற புத்தகத்தை, மாணவ, மாணவிகளுக்கு ஆளுநர் ஆர் .என் .ரவி வழங்கினார்.

# பிப்.8- திருவாரூரில் புத்தகத் திருவிழா துவக்கம்

திருவாரூர், பிப்.8:




திருவாரூர் மாவட்ட நிர்வாகம், பொது நூலக இயக்ககம் மற்றும் பபாசி இணைந்து நடத்தும் 4 ஆவது புத்தகக் காட்சித் திருவிழா, பிப்.8 ஆம் தேதி துவங்கி பிப்.17 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

கடந்த 3 ஆண்டுகளாக திருவாரூர் புதிய பேருந்து நிலையம் அருகே புத்தகத் திருவிழா நடைபெற்ற நிலையில், இந்த ஆண்டு திருவாரூர் அருகே பவித்திரமாணிக்கத்தில் அமைந்துள்ள மங்கள் வரதர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர். பி. ராஜா, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி, நாகை மற்றும் தஞ்சாவூர் மக்களவை உறுப்பினர்கள், திருவாரூர், நன்னிலம் மற்றும் திருத்துறைப்பூண்டி சட்டப்பேரவை உறுப்பினர்கள், தாட்கோ தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்க உள்ளனர். இதுதவிர, தமிழ்நாட்டின் சிறப்பு வாய்ந்த பேச்சாளர்கள் கவிஞர் மனுஷ்யபுத்திரன், எழுத்தாளர் பவா செல்லதுரை, புலவர் மா.ராமலிங்கம், எஸ். ராமகிருஷ்ணன், பாவலர் அறிவுமதி, கவிதா ஜவஹர் மற்றும் புலவர் சண்முகவடிவேல் உள்ளிட்டோர் கருத்துரை ஆற்றுகின்றனர். மேலும், தினசரி பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. திருவாரூர் மாவட்டத்தில் நடைபெறும் இப்புத்தகக் கண்காட்சியில் 50-க்கும் மேற்பட்ட புத்தக அரங்குகளும், 10-க்கும் மேற்பட்ட உணவு அரங்குகளும் அமைக்கப்பட உள்ளன. இதற்கான ஏற்பாடுகளை விழாக் குழுவினர் செய்து வருகின்றனர்.

# பிப்.9- தொழிற் பழகுநர் சேர்க்கை முகாம்

திருச்சி, பிப்.8:

திறன் மேம்பாடு, தொழில் முனைவு அமைச்சரகம் மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சித்துறை சார்பில், சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களில் தொழிற் பழகுநர்களை நியமனம் செய்வதை ஊக்குவிக்கும் விதமாக திருச்சி மாவட்டத்தில் தொழிற்பழகுநர் சேர்க்கை முகாம் பிப்.9 (திங்கட்கிழமை) காலை 10 மணி அளவில் திருச்சி மாவட்ட திறன் பயிற்சி அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இந்த சேர்க்கை முகாமில், இதுவரை தொழிற்பழகுநர் பயிற்சி (அப்ரண்டிஸ்) பெறாதவர்கள் மற்றும் 2020-21, 2021-22, 2023-24, 2024-25 ஆகிய வருடங்களில் தேர்ச்சி பெற்ற அரசு மற்றும் தனியார் ஐ.டி.ஐ பயிற்சியாளர்கள், 8 ஆம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 10,12 ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது தோல்வியடைந்த இளைஞர்கள் (இருபாலரும்) அனைவரும் கலந்து கொள்ளலாம். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள சிறு மற்றும் குறு நிறுவனங்கள் பங்கேற்கும் இந்த முகாம் மூலம் சுமார் 500-க்கும் மேற்பட்ட தொழிற்பழகுநர்கள் இடங்கள் நிரப்பப்பட உள்ளன. இந்த பயிற்சியின் போது உதவித்தொகை மாதம் ரூ.9,600 முதல் ரூ.13,000 வரை நிறுவனத்தாரால் வழங்கப்படும். தொழிற்பழகுநர் சட்டம் 1961-ன் படி, இந்த நிறுவனங்களில் சேர்ந்து ஓராண்டு தொழிற்பழகுநர் பயிற்சி பெறுபவர்களுக்கு ஒன்றிய அரசின் தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் வழங்கப்படும். எனவே, மாணவர்கள் இந்த சேர்க்கை முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் இது தொடர்பான விவரங்களை அறிய திருவெறும்பூரில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் உள்ள மாவட்ட திறன் பயிற்சி அலுவலகத்தை நேரிலோ அல்லது 9865866972, 9443644967 என்ற அலைபேசி எண்ணிலோ அல்லது 0431-2553314 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் வே.சரவணன் தெரிவித்துள்ளார்.

# சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு செவிலியர்கள் மேலாண்மைக்கான விருது

சிதம்பரம், பிப்.8:



சர்வதேச மருத்துவ பயனாளிகள் பாதுகாப்பு சங்க கருத்தாய்வில் மகப்பேறு மருத்துவத்தில் செவிலியர்கள் மேலாண்மைக்கான சிறந்து விருது சிதம்பரம் காமராஜர் அரசு மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கடந்த ஆண்டு தமிழகஅரசால் சிறந்த மகப்பேறு மருத்துவர் விருது பெற்ற சிதம்பரம் காமராஜர் அரசு மருத்துவமனை மருத்துவர் டாக்டர் கே.ராகுல் ஆனந்து செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் நடைபெற்ற சர்வதேச மருத்துவ பயணாளிகள் பாதுகாப்பு சங்கத்தின்கருத்தரங்கில் 29 நாடுகளில் இருந்து 800 மருத்துவமனைகள் பங்கேற்றன. இந்த நாடுகளில் மருத்துவத்துறையில் நடைபெற்ற மிகச்சிறப்பான சிகிச்சைகள் குறித்து கருத்தாய்வு செய்தனர்.

மகப்பேறு மருத்துவத்தில் செவிலியர்கள்மேலாண்மை என்ற தலைப்பிலான கருத்தாய்வில் அரசு மருத்துவமனையான சிதம்பரம் காமராஜர் அரசு மருத்துவமனையை தேர்வு செய்து சிறந்து விருது வழங்கியுள்ளனர். இந்த விருதை சூடான் நாட்டைச் சேர்ந்த சுகாதாரத்துறை அமைச்சரிடமிருந்து செவிலியர் புஷ்பலதா பெரியநாயகம், அறுவை அரங்க செவிலியர் புவனேஸ்வரி லோகநாதன் ஆகியோர் பெற்றனார்.

பிரசவத்திற்கு பிறகு ஏற்படுகிற ரத்தப்போக்கு மகப்பேறு மரணங்களுக்கான முதன்மையான காரணமாக உள்ளது. சிதம்பரம் அரசு மருத்துவமனையில் 4 ஆயிரத்திற்கு மேற்பட்ட பிரசவங்கள் நடைபெற்றாலும் கடந்த 6 ஆண்டுகளுக்கு மேலாக ரத்தப்போக்கினால் மரணங்கள் ஏற்படவில்லை.

இதற்கு முழு முதல் காரணமாகவும், முதுகெலும்பாகவும் உள்ளவர்கள் செவிலியர்கள்தான். மருத்துவர்களாகி நாங்கள் பல்வேறு பணியில் இருந்தாலும், பிரசவத்திற்கு வரும் மகளிர்களை உன்னிப்பாக கவனித்து ரத்தம்போவது தொடங்கும் போதே கண்டறிந்து அதற்கான சிகிச்சை அளிப்பதால் மரணங்கள் தவிர்க்கப்படுகிறது.

தமிழக முதல்வர் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் ஆகியோர் வழிகாட்டுதல்படி தேசிய சுகாதார திட்ட இயக்குநர் மருத்துவமனையை ஆய்வு செய்து ரூ.1.50 கோடி மதிப்பிலான உயரிய மருத்துவ உபகரணங்களை வழங்கி இந்த சேவை தொடர ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

இந்த விருதினை செவலியர்கள் சமூகத்திற்காகவும், மருத்துவமனையில் பயன் பெற்ற தாய்மார்களுக்கும் அர்ப்பணிக்கிறோம் என மகப்பேறு மருத்துவர் கே.ராகுல் ஆனந்து தெரிவித்தார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### ஆரோக்கியம் காக்கும் கற்றாழை!

*கற்றாழை உச்சி முதல் உள்ளங்கால்வரை உள்ள அத்தனை உறுப்புகளுக்கும் உகந்த ஒரு மூலிகை ஆகும்.

*கற்றாழைக்குக் கன்னி, குமரி என்ற பெயர்களும் உண்டு. கற்றாழையில் சிறு கற்றாழை, பெரும் கற்றாழை, செங்கற்றாழை, பேய்க்கற்றாழை, கருங்கற்றாழை, வரிக்கற்றாழை எனப் பல வகை உண்டு. இவற்றில் சோற்றுக்கற்றாழை மட்டுமே மருத்துவப் பயன்பாட்டில் உள்ளது.

*கற்றாழையில் இயற்கை சத்துக்களான வைட்டமின்கள், தாதுக்கள், அமினோ அமிலங்கள் ஏராளமாக உள்ளன. மேலும், மிக அரிய தாதுகளான செலினியம், குரோமியம் ஆகியவையும் இதில் அடங்கியுள்ளன. இது உடலை குளிர்ச்சியாக வைத்துக்கொள்ள உதவுகிறது.

*அழகுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் தயாரிக்கப் பெரிதும் பயன்படும் இவற்றின் உள்ளே இருக்கும் சதைப் பகுதியான ஜெல்லை எடுத்து, அதைத் தண்ணீரில் ஏழு முதல் பத்து தடவை நன்றாகக் கழுவி பின் பயன்படுத்த வேண்டும்.

*சூரிய ஒளியுடன் கலந்து வரக்கூடிய கடுமையான வெப்பத்தை ஏற்படுத்தும் காமா மற்றும் எக்ஸ்ரே கதிர் வீச்சுகளின் பாதிப்பிலிருந்து கற்றாழை ஜெல் சருமத்தைக் காக்கும் தன்மை உடையது. அத்துடன் சருமத்தின் நிறத்தையும் மேம்படுத்தும்.

*கற்றாழை ஜூஸ் நிறைய நோய்களுக்கு நிவாரணம் தரக்கூடியது. தினமும் காலை வேளையில் வெறும் வயிற்றில் இந்த ஜூஸைக் குடித்துவந்தால் உடலில் உள்ள நச்சுகள் முழுமையாக வெளியேற்றப்படும். இதனால் உடலில் மெட்டபாலிசம் அதிகரித்து, உடல் எடை வேகமாகக் குறையத் தொடங்கும்.

*மூலக்கோளாறால் பாதிக்கப்படுபவர்களுக்கு கற்றாழை நல்ல மருந்து. இதன் சதைப் பகுதியை நன்றாகக் கழுவி, அதனுடன் இரண்டு கைப்பிடி முருங்கைப்பூ சேர்த்து அரைத்து, அதனுடன் சிறிது வெண்ணெய் சேர்த்து, ஒரு தேக்கரண்டி அளவுக்கு தினமும் காலையில் ஒரு வாரம் வரை சாப்பிட்டுவந்தால், மூலத் தொந்தரவில் இருந்து நிவாரணம் கிடைக்கும். இதைச் சாப்பிடும்போது உப்பு, காரம் சேர்க்கக் கூடாது. *கற்றாழையின் ஜெல்லை தினமும் வெண்படைகளின்மீது பூசி வந்தால் நாளடைவில் குணமாகும். *குழந்தை பெற்ற பெண்களுக்கு தோள்பட்டை, தொடை, வயிறு, மார்பு போன்ற பகுதிகளில் வரிவரியாகத் தழும்புகள் ஏற்படும். இதைப் போக்க தினமும் இதன் சதையை எடுத்துத் தடவி, அரை மணி நேரம் கழித்துக் குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும். இதைத் தொடர்ந்து செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

*பாத வெடிப்புக்கு இரவில் படுக்கும்முன் கற்றாழை ஜெல்லை தடவி வர, பாத வெடிப்பு குணமாகும்.

### சர்க்கரை நோயை ஆரம்பத்திலே குணப்படுத்த...

சர்க்கரை நோயின் ஆரம்பக் கட்டத்திலேயே நோயாளிகள் சித்த மருத்துவத்துக்கு வந்தால் சித்த மருந்துகள் மூலமே ரத்தச் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தி படிப்படியாகக் குணமாக்கிவிடலாம். நோயின் பிடியிலிருந்து முழுமையாக விடுபடலாம். ஆனால், பெரும்பாலான நோயாளி கள் பல வருடங்களாக அலோபதி சிகிச்சை எடுத்துக்கொண்டு அதன் பின்னரே சித்த மருந்துகளை நாடிவருகின்றனர். அப்படி வருபவர்கள் ஓரிரு மாதங்களில் குணம் காணும் வாய்ப்பு குறைவே. அலோபதி மருந்துகளுக்குப் பழகிய உடலைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் மீட்டு, சித்த மருந்துகளின் செயல்பாட்டுக்குக் கொண்டுவர இயலும்.

இப்படிப் பல ஆண்டுகளாக அலோபதி சிகிச்சை எடுத்துக்கொண்டு அதன் பின்னர் வரும் நீரிழிவு நோயாளிகளுக்கு ஒருங்கிணைந்த சிகிச்சையை வலியுறுத்துகிறோம். அதாவது அவர்கள் ஏற்கெனவே எடுத்துக்கொண்டிருக்கும் ஆங்கில மருந்துகளை நிறுத்திவிடாமல் தொடர்ந்து எடுத்துக்கொள்ளச் சொல்வதோடு எங்களது சித்த மருந்துகளையும் அவற்றுடன் சேர்த்து எடுத்துக்கொள்ளச் சொல்கிறோம்.

ஆறு மாதங்கள் ஆன பிறகு ரத்தப் பரிசோதனை (HBA1C) எடுத்துக்கொள்ள பரிந்துரைப்போம். அதன் மூலம் முந்தைய மூன்று மாதங்களில் ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு வெகுவாகக் குறைந்திருப்பது தெரியவரும். சித்த மருந்துகள் செயலாற்றத் தொடங்கிவிட்டன என்பது உறுதியாகும். பரிசோதனை முடிவுகளை அலோபதி மருத்துவரிடம் காட்டி, எடுத்துக்கொண்டிருக்கும் அலோபதி மருந்துகளைக் குறைத்துக்கொள்ள பரிந்துரைக்கிறோம்.

## தனியார் உணவகங்களில் உணவின் தரம் ஆய்வு

பெரம்பலூர், பிப்.8:

பெரம்பலூர்மாவட்டம்வேப்பந்தட்டை கிராமத்தில், அண்மையில் நடைபெற்ற திருமண நிகழ்வில், தனியார் உணவகத்தில் இருந்து ஆர்டர் செய்யப்பட்டு அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

இதில் சிலருக்கு வாந்தி மற்றும் மயக்கம் ஏற்பட்டதாக செய்தி வெளியானது. இதனையடுத்து, பெரம்பலூரில் இயங்கிவரும் பிரபல சைவமற்றும் அசைவ உணவகங்களில் சமைக்கப்படும் உணவின் தரம், உணவுக்கூடம், சமையல் பொருட்கள் வைப்பறை உள்ளிட்ட இடங்களை மாவட்ட ஆட்சியர் மிருணாளினி திடீர் ஆய்வு மேற்கொண்டார். சமையலுக்கு தரமான எண்ணெய் பயன்படுத்தப்படுகிறதா, பாத்திரங்கள் சுடுநீரில் முறையாக கழுவப்படுகிறதா. சமையலறை மற்றும் உணவகம் சுகாதாரமாக பராமரிக்கப்படுகிறதா, உணவகங்களை நம்பி வரும் உங்கள் வாடிக்கையாளர்களுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படுத்தாத வகையில் உணவுப்பொருட்கள் தரமானதாக இருக்க வேண்டும் என்றும், சமையலுக்கு தரமான எண்ணெய் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் உணவக மேலாளர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், உணவகம் மற்றும் உணவுப்பொருட்கள் குறித்த குறைபாடுகளை உணவு பாதுகாப்புத் துறைக்கு 94440 42322 என்ற எண்ணில் தெரிவிக்கலாம்என்றதகவலை அனைத்து உணவகங்களிலும் வைக்க வேண்டும் என உத்தரவிட்டார். ஆய்வின்போது மாவட்ட உணவுப்பொருள் வழங்கல் அலுவலர் சக்திவேல், மாவட்ட உணவு பாதுகாப்புத்திட்ட நியமன அலுவலர் மரு.சுகந்தன், உணவு பாதுகாப்பு துறை அலுவலர் விக்னேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

## 10, 12 ஆம் வகுப்பு செய்முறைத் தேர்வுகள்

சென்னை, பிப்.8:

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மாநில பாடத் திட்டத்தின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு, பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 வகுப்புகளுக்கான பொதுத் தேர்வு கள் மார்ச் 2 ஆம் தேதி தொடங்கும் என பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது. பிளஸ் 2 வகுப்பிற்கு மார்ச் 2 ஆம் தேதி தொடங்கி மார்ச் 26 வரையும், பிளஸ் 1 வகுப்பிற்கு மார்ச் 3 ஆம் தேதி தொடங்கி, மார்ச் 27 வரையும், பத்தாம் வகுப்பிற்கு மார்ச் 11 ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 6 ஆம் தேதி வரையும் நடைபெறவுள்ளன. தேர்வு எழுத தகுதியுள்ளவர்களுக்கான ஹால் டிக்கெட்டுகளும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளதாக தேர்வுத் துறை தெரிவித்துள்ளது. பிப்ரவரி மாதத்தில் செய்முறைத் தேர்வுகள் நடத்தி முடிக்க வேண்டும் என்பதால், பிளஸ் 2 வகுப்புக்கு பிப்.9 முதல் 14 ஆம் தேதி வரையும், பிளஸ் 1 வகுப்புக்கு பிப்.16 முதல் 21 ஆம் தேதி வரையும், பத்தாம் வகுப்புக்கு பிப்.23 முதல் 28 ஆம் தேதி வரையும் செய்முறைத் தேர்வுகள் நடைபெறும் என்று அனைத்து பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப் பட்டுள்ளது. செய்முறைத் தேர்வுகளை நடத்துவதற்காக ஒரு கல்வி மாவட்டத்துக்கு ஒன்று அல்லது இரண்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

# மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் 15-ந்தேதி மகா சிவராத்திரி விழா



மதுரை, பிப்.8:

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் மகா சிவராத்திரி விழா வருகிற 15-ந் தேதி இரவு 10 மணி முதல் மறுநாள் (16-ந் தேதி) காலை வரை நடக்கிறது. இதையொட்டி மீனாட்சி அம்மன் கோவிலில் இரவு 4 கால பூஜைகள் நடைபெறுகின்றன.

அதன்படி மீனாட்சி அம்மன் சன்னதியில் முதல் கால பூஜை இரவு 10 மணிக்கு தொடங்கி 10.40 மணி வரையிலும், 2-ம் கால பூஜை 11 மணிக்கு தொடங்கி 11.40 மணி வரையிலும், 3-ம் கால பூஜை 12 மணிக்கு தொடங்கி 12.40 மணி வரையிலும், 4-ம் கால பூஜை நள்ளிரவு 1 மணிக்கு தொடங்கி 1.40 மணி வரையிலும் நடைபெறும்.

அதே போன்று சுவாமி சன்னதியில் முதல் கால பூஜை இரவு 11 மணிக்கு தொடங்கி 11.45 மணி வரையிலும், 2-ம் கால பூஜை இரவு 12 மணிக்கு தொடங்கி 12.45 மணி வரையிலும், 3-ம் கால பூஜை நள்ளிரவு 1 மணிக்கு தொடங்கி 1.45 மணி வரையிலும், 4-ம் கால பூஜை 2 மணிக்கு தொடங்கி 2.45 மணி வரையிலும் நடைபெறும்.

அதை தொடர்ந்து அதிகாலை 3 மணிக்கு அர்த்த ஜாம பூஜையும், 4 மணிக்கு பள்ளியறை பூஜையும், 5 மணிக்கு திருவனந்தல் பூஜையும் நடைபெற உள்ளது.

இரவு முழுவதும் தரிசனம்

அதே போன்று மீனாட்சி அம்மன் கோவிலை சேர்ந்த பழைய சொக்கநாதர் கோவில், தெப்பக்குளம் முக்தீசுவரர் கோவில், செல்லூர் திருவாப்புடையார் கோவில் உள்ளிட்ட உபகோவில்களில் இரவு முழுவதும் அபிஷேக, அலங்கார பூஜைகள் நடைபெறும் என்று கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மேலும் அன்று இரவு முழுவதும் நடைபெறும் 4 கால பூஜை அபிஷேகத்திற்கு தேவையான பால், தயிர், இளநீர், பன்னீர், பழவகைகள், தேன், மஞ்சள் பொடி, எண்ணெய், நெய் மற்றும் இதர அபிஷேக பொருட்களை 15-ந் தேதி மாலைக்குள் மீனாட்சி கோவில் உள்துறை அலுவலகத்திலும், அந்த உபகோவில்களிலும் பக்தர்கள் ஒப்படைக்கலாம். சிவராத்திரி விழாவையொட்டி மீனாட்சி அம்மன் கோவில் மற்றும் அதன் உபகோவில்களில் இரவு முழுவதும் பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# திருவொற்றியூர் அகத்தீஸ்வரர் கோவில் கும்பாபிஷேகம்





திருவொற்றியூர், பிப்.8:

திருவொற்றியூர் தியாக ராஜ சாமி உடனுறை வடிவுடையம்மன் கோவில் சன்னதி தெருவில் வடக்கு திசை நோக்கி வீற்றிருக்கும் அகத்தீஸ்வரர் அகிலாண்டேஸ்வரி கோவில் கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது. கடந்த 2-ந் தேதி கணபதி பூஜையுடன் தொடங்கிய கும்பாபிஷேக விழாவில் 4 கால யாக சாலை பூஜைகள், ஹோமங்கள், பூர்ணாஹுதி உள்ளிட்டவை நடைபெற்றன.

யாகசாலை பூஜைகள் நேற்று காலை நிறைவடைந்ததும் யாகசாலையில் இருந்து புனிதநீர் கலசத்தை எடுத்து வந்து கோபுர கலசங்களுக்கும், பின்னர் மூலவர் அகத்தீஸ்வரர் அகிலாண்டேஸ்வரிக்கும் மகா கும்பாபிஷேகம், அபிஷேகம், தீபாராதனை நடந்தது. பின்னர் பக்தர்கள் மீது புனிதநீர் தெளிக்கப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# சீனிவாசமங்காபுரம் கல்யாண வெங்கடேஸ்வரர் கோவிலில் பிரம்மோற்சவ விழா

திருப்பதி, பிப்.8:

திருப்பதியை அடுத்த சீனிவாசமங்காபுரத்தில் உள்ள கல்யாண வெங்கடேஸ்வரர் கோவிலில் நாளை மறுநாள் (8-2-2026) வருடாந்திர பிரம்மோற்சவ விழா தொடங்குகிறது. வருகிற 16-ந்தேதி வரை 9 நாட்கள் பிரம்மோற்சவ விழா கோலாகலமாக நடக்கிறது. முதல் நாளான 8-ந்தேதி காலை 8.15 மணியில் இருந்து 8.35 மணிவரை கும்ப லக்னத்தில் கொடியேற்றம் நடைபெறுகிறது. விழா நாட்களில் தினமும் வாகன சேவை நடைபெறுகிறது.

முதல் நாளில் இரவு பெரிய சேஷ வாகன வீதி உலா நடக்கிறது. 9-ந்தேதி காலை சிறிய சேஷ வாகன வீதிஉலா, இரவு ஹம்ச வாகன வீதிஉலா, 10-ந்தேதி காலை சிம்ம வாகன வீதிஉலா, இரவு முத்துப்பந்தல் வாகன வீதிஉலா, 11-ந்தேதி காலை கல்ப விருட்ச வாகன வீதிஉலா, இரவு சர்வ பூபால வாகன வீதிஉலா, 12-ந்தேதி காலை பல்லக்கு உற்சவம் (மோகினி அவதாரம்), இரவு கருட வாகன வீதிஉலா நடைபெறுகிறது.

சக்கரத்தாழ்வார் தீர்த்தவாரி

13-ந்தேதி காலை ஹனுமந்த வாகன வீதிஉலா, மதியம் 2 மணியில் இருந்து மாலை 3 மணிவரை வசந்தோற்சவம், மாலை 4 மணியில் இருந்து 5 மணிவரை தங்கத்தேரோட்டம், இரவு கஜ வாகன வீதிஉலா, 14-ந்தேதி காலை சூரிய பிரபை வாகன வீதிஉலா, இரவு சந்திர பிரபை வாகன வீதிஉலா. 15-ந்தேதி காலை தேரோட்டம், இரவு குதிரை வாகன வீதிஉலா நடைபெறுகிறது.

16-ந்தேதி காலை 9.55 மணியில் இருந்து 10.15 மணிவரை சக்கர ஸ்நானம் எனப்படும் சக்கரத்தாழ்வார் தீர்த்தவாரி நிகழ்ச்சி, மாலை 6 மணியில் இருந்து இரவு 7 மணிக்குள் கொடியிறக்கம் நிகழ்ச்சி நடக்கிறது. இதோடு வருடாந்திர பிரம்மோற்சவ விழா நிறைவடைகிறது.

வாகன சேவைகள் தினமும் காலை 8 மணியில் இருந்து 9 மணி வரையிலும், இரவு 7 மணியில் இருந்து 8 மணி வரையிலும் நடக்கின்றன.

பிரம்மோற்சவ விழாவையொட்டி இந்து தர்ம பிரசார பரிஷத் சார்பில் வாகன சேவைகளின்போது தினமும் கோலாட்ட நடனங்கள் மற்றும் பஜனை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். அன்னமாச்சாரியா திட்டக் கலைஞர்கள் அன்னமாச்சாரியார் சங்கீர்த்தனங்களை வழங்குவார்கள்.




## பிப்.12 அகில இந்திய வேலை நிறுத்தம்: அனைத்து சாலைப் பணியாளர்கள் சங்கம் பங்கேற்பு

பெரம்பலூர், பிப்.8:

தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை சாலைப் பணியாளர் சங்கத்தின் மாவட்ட பொதுக்குழு கூட்டம் பெரம்பலூரில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் பெ. ராஜ்குமார் தலைமை வகித்தார். மாவட்டத் துணைத் தலைவர் ப. சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார். மாநில செயற்குழு உறுப்பினர் அ. பெருமாள்சாமி வரவேற்புரையாற்றினார். கோரிக்கைகள் குறித்து மாவட்டச் செயலாளர் சி.சுப்ரமணியன் விளக்க உரையாற்றினார். மாநிலச் செயலாளர் ப. ரவி நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் க. மார்கண்டன் நன்றி தெரிவித்தார். நிகழ்வில், மாவட்ட நிர்வாகிகள், முன்னணி ஊழியர்கள், சாலைப் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பொதுக்குழுவில், பிப்.8 அன்று சென்னையில் நடைபெறும் ஜாக்டோ-ஜியோ நன்றி அறிவிப்பு மாநாட்டில், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து சாலைப் பணியாளர்களும் பங்கேற்பது. பிப்.12-ல் நடைபெறும் அகில இந்திய வேலை நிறுத்தத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து சாலைப் பணியாளர்களும் முழுமையாக ஈடுபடுவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சுற்றுலாப் பயணிகளுக்காக கீழடியில் செல்பி பாயிண்ட்

சிவகங்கை, பிப்.8:

சிவகங்கை மாவட்டம் கீழடியில் ரூ.22 கோடி செலவில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு சுற்றுலா பயணிகள் செல்பி எடுக்க வசதியாக "கீழடி நம் தாய்மடி" என்ற வாசகத்துடன் தென்னங்கன்றை இணைத்து செல்பி பாயிண்ட் மையத்தை தொல்லியல் துறையினர் உருவாக்கியுள்ளனர். தொல்பொருள் அருங்காட்சியகத்திற்கு தினமும் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் காட்சிப் பொருட்களை ஆர்வமுடன் பார்வையிட்டு வருகின்றனர். குறிப்பாக காளை புடைப்பு சிற்பம் மற்றும் சுடுமண் பானைகள் முன்பு நின்று செல்பி எடுப்பது பார்வையாளர்களின் விருப்பமாக உள்ளது. அதேபோல், திறந்த வெளி அருங்காட்சியகத்திலும் பார்வையாளர்கள் நினைவாக புகைப்படங்கள் எடுக்க வசதி செய்யும் வகையில் செல்பி பாயிண்ட் அமைக்கப்பட்டுள்ளதாக தொல்லியல் துறை தெரிவித்துள்ளது.

## வரத்து அதிகரிப்பால் தக்காளி விலை வீழ்ச்சி

சின்னாளப்பட்டி பிப்.8:

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் பகுதியில் சுமார் 5 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமாக தக்காளி பயிரிடப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக தொடர்ந்து குறைந்த வண்ணம் உள்ளன. தற்போது பெட்டியின் விலை 150 ரூபாய் க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடுமையான விலை வீழ்ச்சியால் தக்காளி பயிரிட்ட விவசாயிகள் மிகுந்த கவலை அடைந்துள்ளனர் .

# உங்களை வேவு பார்க்கும் 3 செயலிகள்: 'இலவசம்' என்று ஆசைப்பட்டு ஆபத்தை விலைக்கு வாங்காதீர்கள்...

இந்த நவீன காலத்தில் வங்கிப் பரிவர்த்தனைகள் முதல் தனிப்பட்ட புகைப்படங்கள் வரை அனைத்தையும் நாம் நமது ஸ்மார்ட்போனில் தான் சேமித்து வைத்திருக்கிறோம். நமது தரவுகள் மிகவும் பாதுகாப்பாக இருப்பதாக நாம் நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மை நிலைமை அதற்கு நேர்மாறாக உள்ளது. நாம் அன்றாடம் பயன்படுத்தும் சில சாதாரண செயலிகள், நமக்குத் தெரியாமலேயே நம்மைப் பற்றிய அத்தனை தகவல்களையும் சேகரித்து மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்கின்றன.




நம்முடைய இருப்பிடம், நாம் இணையத்தில் எதைத் தேடுகிறோம், யாரோடு பேசுகிறோம் போன்ற அனைத்துத் தகவல்களும் திருடப்படுகின்றன. அப்படிப்பட்ட ஆபத்தான செயலிகள் எவை என்பதையும், அதிலிருந்து நம்மை எப்படிக் காத்துக்கொள்வது என்பதையும் பார்க்கலாம் வாங்க.

1. இலவச VPN!

இணையத்தில் தங்கள் அடையாளத்தை மறைப்பதற்காகவும், பாதுகாப்பிற்காகவும் பலரும் விபிஎன் (VPN) செயலிகளைப் பயன்படுத்துகிறார்கள். இதில் கட்டணம் செலுத்தாமல் கிடைக்கும் இலவச விபிஎன் செயலிகள் மிகவும் ஆபத்தானவை. வேலிக்கு ஓணான் சாட்சி என்பது போல, பாதுகாப்பிற்காக நாம் பயன்படுத்தும் இந்தச் செயலிகளே நம்மை உளவு பார்க்கின்றன.

நாம் எந்த இணையதளத்திற்குச் செல்கிறோம், எதைப் பதிவிறக்கம் செய்கிறோம் என்பதை இவை கண்காணிக்கின்றன. இந்தத் தரவுகளைத் திரட்டி விளம்பர நிறுவனங்களுக்கு விற்பதன் மூலமே இவை வருமானம் ஈட்டுகின்றன. எனவே இலவசம் என்ற பெயரில் உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையை நீங்கள் விற்கிறீர்கள் என்பதை உணர வேண்டும்.

2. தேவையற்ற செயலிகள்!

இப்போது வரும் எல்லா ஸ்மார்ட்போன்களிலும் டார்ச்லைட் வசதி மற்றும் போனைச் சுத்தம் செய்யும் வசதிகள் இயல்பாகவே கொடுக்கப்பட்டுள்ளன. இருந்தாலும் பலர் தனியாக டார்ச்லைட் செயலிகளையும், கிளீனிங் செயலிகளையும் பதிவிறக்கம் செய்கிறார்கள். ஒரு சாதாரண டார்ச்லைட் எரிவதற்கு உங்கள் போனில் உள்ள காண்டாக்ட்ஸ் அல்லது நீங்கள் இருக்கும் இருப்பிடத்தின் தகவல் எதற்கு என்று எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா. இது போன்ற செயலிகள் போனைச் சுத்தம் செய்வதாகச் சொல்லிக்கொண்டு, பின்னணியில் உங்கள் பழக்கவழக்கங்களைக் கண்காணித்துத் தரவுகளைத் திருடுவதையே முக்கிய வேலையாகச் செய்கின்றன.



3. பியூட்டி கேமரா!

சமூக வலைத்தளங்களில் தங்கள் புகைப்படங்களை அழகாகக் காட்ட வேண்டும் என்பதற்காகப் பலர் விதவிதமான பியூட்டி கேமராக்களையும், போட்டோ எடிட்டிங் செயலிகளையும் பயன்படுத்துகிறார்கள். இந்தச் செயலிகள் உங்கள் முகத்தை ஸ்கேன் செய்து அந்தத் தகவல்களைத் தங்கள் சர்வர்களில் சேமிக்கின்றன. இந்த முக அடையாளத் தரவுகள் தவறானவர்களின் கைகளில் கிடைத்தால், அது உங்களின் டிஜிட்டல் அடையாளத்திற்கே மிகப்பெரிய சிக்கலை உண்டாக்கும். இந்தத் தரவுகள் எப்போது அழிக்கப்படும் என்பதற்கான எந்த உத்தரவாதமும் கிடையாது. உங்கள் போனில் உள்ள செட்டிங்ஸ் பகுதிக்குச் சென்று, எந்தெந்தச் செயலிகள் என்னென்ன அனுமதிகளைப் பெற்றிருக்கின்றன என்பதைச் சோதித்துப் பார்ப்பது அவசியமாகும். உதாரணத்திற்கு ஒரு கால்குலேட்டர் செயலிக்கு உங்கள் கேமராவை இயக்கும் அனுமதி தேவையில்லை. இப்படித் தேவைக்கதிகமான அனுமதிகளைக் கேட்கும் செயலிகளை உடனே நீக்குவது நல்லது. புதிதாக ஒரு செயலியைப் பதிவிறக்கம் செய்வதற்கு முன்பு, அதன் விதிமுறைகளை முழுமையாகப் படித்துப் பார்ப்பது புத்திசாலித்தனம்.

தொழில்நுட்பம் நம் வாழ்க்கையை எளிதாக்குவதற்காக உருவாக்கப்பட்டதே தவிர, நம்மை அடிமைப்படுத்துவதற்காக அல்ல. விழிப்புணர்வுடன் இருந்தால் மட்டுமே நம்முடைய தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாக்க முடியும்.

# யார் தான் கேட்பது?




நகரப் பகுதிக்குள் இருப்பதால், அந்த ரேசன் கடைக்கு மட்டும் பொருட்கள் வாங்க எப்போதும் கூட்டமாகவே இருக்கும். சமீப காலமாக இந்த ரேசன் கடையில் வேலை செய்யும் பணியாளர் காலதாமதமாகவே வந்து கடையை திறப்பது வழக்கமாகிவிட்டது .
அன்றும் அப்படியே காலை மணி 10-30 ஆகியும் கடை திறக்கப்படாமலேயே பூட்டியே இருந்தது. ரேசன் பொருட்களை எடுத்துக் கொடுக்கும் பணியாளர் கூட நேரத்தோடு வந்து விட்டார்.
ரேசன் பொருட்கள் வாங்குவதற்கு பத்து பனிரெண்டு பேர் கடை வாசலில் காத்து நின்றனர்.
அப்போது அங்கிருந்த ஒருவர் இந்த ஆளுக்கு இதே வேலையாப் போச்சு!
ரேசன் வாங்குற நம்மளையெல்லாம் பிச்சைக்காரனா நினைக்கிறாரு போல... அவர் இஷ்டத்துக்கு கடையை திறக்கறதும், முன்கூட்டியே மூடிட்டு போறதுமா இருக்காரு! யாரும் கேள்வி கேட்காததனால அலட்சியமா நடந்துகிறாரு...!
இன்னைக்கு நானே இதுக்கொரு முடிவு கட்டுறேன் என்று குரலை உயர்த்திப் பேசினார்.
இன்னொருவர் எனக்கு பொங்கலுக்கு புடவை, வேட்டியே கொடுக்கல... எல்லா குடும்ப அட்டைக்கும் புடவை வேட்டி கொடுப்போம்னு அரசாங்கம் சொன்னுது...
ஆனா இங்க மட்டும் எனக்கு புடவை வேட்டியே கொடுக்கல.... வரட்டும்..
இன்னைக்கு இதை கேட்டுட வேண்டியதுதான் என்று புலம்பினார்.
ஆமாம்... ஆமாம் எனக்கு புடவை, வேட்டி கொடுத்துட்டதா என் போனுக்கு மெசேஜ் வந்துது...
எனக்கு புடவை வேட்டி கொடுக்காமலேயே எப்படி மெசேஜ் அனுப்பலாம்...!
எதை எடுத்தாலும் ஊழலாவே இருக்கு!
அரசாங்கம் மக்களுக்கு நல்லது செய்யனும்னு நினைச்சாலும் அதிகாரிங்க செய்யவுட மாட்டாங்க போல தெரியுது! என்றார்.

இல்ல...இல்ல...இதைப் பத்தி கலெக்டர் கிட்ட நேரடியா புகார் செய்ய வேண்டியதுதான்...
வாயை மூடிட்டு இருந்தா எதுவும் இங்க நடக்காது போல தெரியுது என்று ஆவேசமாகப் பேசினார்.
வாங்குற பொருள் எல்லாமும் எடை கம்மியாவே இருக்கு!
இப்படியெல்லாம் எடையை குறைச்சு கொடுத்து சம்பாதிச்சிட்டு போறதுக்கு எப்படித்தான் மனசு வருதுன்னு தெரியல... என்று கட்டம் போட்ட சட்டைக்காரர் சொன்னதைக் கேட்டு வெள்ளைச் சட்டைக்காரர், ஆண்டவன்னு ஒருத்தன் இருக்கான்... இதுக்கெல்லாம் சரியான தண்டனையைக் கொடுப்பான் என்று சத்தமாகப் பேசினார்.
அரசியல்வாதிங்ககிட்ட இதைப் பத்தி சொன்னாலும், இலவசமாத் தானே கொடுக்கறாங்க...
கிடைக்கிறதை வாங்கி கிட்டு போக வேண்டியதுதான்.. என்று சொல்றாங்க.. என்றபடி அந்த நபர் இருமினார்.
அரசாங்கத்துல வேலை செய்யறவங்க வச்சது தான் சட்டமா போயிடுச்சு!
இதையெல்லாம் தட்டிக் கேட்கறதுக்கு இளைஞர்கள்தான் வரனும்...
எங்க அது நடக்கும்!
அவங்கதான் நடிகருங்கள தோள்ல தூக்கி வச்சுகிட்டு ஆடுறாங்கல... என்று சொல்லிக் கொண்டே அந்த நபர் தலையில் அடித்துக் கொண்டார்..
எது எப்படி இருந்தாலும் இன்னைக்கு இந்த ரேசன் கடை பிரச்சினையை நேரில கேட்டுட வேண்டியதுதான் என்றபடி வெற்றிலைப் பாக்கை மென்றவாறு நின்றார் அந்த முண்டாசு கட்டியிருந்தவர்.
சரியாக மணி 10-35 இருக்கும். இரு சக்கர வாகனத்தில் ஆடம்பரமாக வந்து இறங்கினார் அந்த ரேசன் கடையில் பில் போடும் வேலைப் பார்க்கும் பணியாளர் பரமசிவம்.
தான் ஓட்டிவந்த வாகனத்தை கடையின் பக்கத்தில் நிறுத்தி வைத்துவிட்டு, தனது கைப்பையில் இருந்து கடை சாவியை எடுத்து அங்கு நின்றிருந்த உதவியாளரிடம் கொடுத்தார்.
உதவியாளர் வேகமாக ஓடிச் சென்று கடையை திறந்து வைத்தார்.
பில் போடுபவர் தனது இருக்கையில் அமர்ந்து தனது பணியை துவக்கினார்.
கடைதிறப்பதற்கு முன்பாக ரேசன் கடையில் நடக்கும் குறைகளைப் பேசியவர்கள், அனைவரும் தனக்கான ரேசன் பொருட்களை வாங்குவதற்கு தயாராக அமைதியாக வரிசையில் நின்றனர்......!



தமிழ்ச் செம்மல்
**-நன்னிலம் இளங்கோவன்.**

# வால்மீகி !!



செல்வம் பெயரில் மட்டும் தான், தினப்படி சோத்துக்கே வழியில்லை. எந்த வேலையும் சரியாக கிடைக்கவில்லை.
தன்னுடைய குடும்பம் பட்டினியால் வாடுவதை அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை.
எப்போதாவது கூலி வேலை கிடைக்கும். கூலி வேலைக்கு சென்றாலும் சரியாக சம்பளம் கிடைப்பதில்லை. அதனால் குடும்பம் நடத்த அவனால் முடியவில்லை. கண்ணில் பட்ட உணவுப் பொருள்களை திருட ஆரம்பித்தான்.
கொஞ்சம் கொஞ்சமாக கோவில் உண்டியலை உடைத்து அதில் உள்ள பணத்தை பொருளையும் மற்றும் எங்கெல்லாம் பணம் கிடைக்கிறதோ அங்கெல்லாம் திருடினான்.
நாளடைவில் திருட்டை தொழிலாகவே மாற்றிக் கொண்டான் இப்பொழுது குடும்பம் மூன்று வேலையும் சாப்பிட்டு சந்தோஷமாக மாறியது .ஆனால் சில நாட்களுக்குப்பிறகு அது நடக்க முடியாமல் போனது."பல நாள் திருடன் ஒருநாள் சிறையில் "என்ற பழமொழிக்கு ஏற்ப ஒரு நாள் கோவில் உண்டியலில் திருடும்போது கையும், களவுமாக மாட்டிக் கொண்டான். சிறைக்கு சென்றான் .தண்டனை முடிந்து இன்று தான் விடுதலை ஆகிறான்.
சிறையில் அவன் வேலை செய்ததற்கான கூலியாக சில ஆயிரங்கள் அவனிடம் கொடுத்தார்கள். கையில் பணத்துடன் வெளியே வந்து பார்த்தான். இதுநாள் வரை அவனது குடும்பத்தார் சிறையில் வந்து அவனைப் பார்க்கவே இல்லை .அதை நினைத்துக் கொண்டே இன்றாவது யாரேனும் வந்திருப்பார்களோ? என்று நினைத்தபடி வெளியே வந்தான். இன்றும் யாரும் வரவில்லை .கனத்த இதயத்துடன் சொந்த ஊருக்கு சென்றான்.
ஆனால் அவன் இருந்த வீடு பூட்டி இருந்தது. பக்கத்தில் உள்ளவர்களிடம் அவன் குடும்பத்தை பற்றி விசாரித்தான்.
ஒருவரும் சரியாக பதில் சொல்லவில்லை.
குடும்பத்தில் உள்ளவர்கள் எங்கே சென்றார்கள்? என்று யாருக்கும் தெரியவில்லை .அவன் என்ன செய்வது ?என்று தெரியாமல் ஊருக்கு வெளியே இருக்கும் கோவிலுக்கு வந்தான்.
சாமியை கும்பிட்டான். அங்கு மரத்தடியில் ஒரு துறவி படுத்திருந்தார். இவனும் அவர் அருகில் சென்று படுத்துக்கொண்டான். துறவி ,யாரப்பா நீ? ஊருக்கு புதுசா ?என்று கேட்டார் .அதற்கு செல்வம் நடந்த கதைகளை கூறினான்.
அதைக்கேட்ட துறவி என்னப்பா இது உன்னோட கதை வால்மீகி முனிவர் கதை போல் உள்ளது என்று கூறினார். செல்வம் உடனே வால்மீகியா, யாரது? என்று கேட்டான். வால்மீகி முனிவரை உனக்குத் தெரியாதா? என்று கேட்டார்.
தெரியாது, எனக்கு அவரைப் பற்றி சொல்லுங்கள் என்றான் ரத்னாகர் என்ற கொள்ளைக்காரர் காட்டில் வசித்து வந்தான் .காட்டின் வழியாக செல்லும் பயணிகளை வழிமறித்து, அவர்களிடம் உள்ள பணம் ,பொருள், நகைகள் என எல்லாவற்றையும் கொள்ளை அடித்து குடும்பம் நடத்தி வந்தான் .ஒரு நாள் நாரதர் அந்த காட்டின் வழியே சென்றார். அவன் அவரிடம் கொள்ளை அடிப்பதற்காக வந்து முன்னே நின்று மிரட்டினான். நாரதர் என்னிடம் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால், நீ செய்வது பாவம் இல்லையா? என்று ரத்னாகரை கேட்டார் .நான் என் குடும்பத்திற்காக இந்த பணத்தை செலவு செய்கிறேன் என்றார்.
உடனே ,நாரதர் நீ செய்யும் பாவத்திலும் அவர்களுக்கு பங்கு உண்டா என கேட்டார்? அதற்கு ரத்னாகர் அவர் மனைவியிடம், பாவத்திலும் உங்களுக்கு பங்கு உண்டு தானே என்றார் அவன் மனைவியோ நீ செய்யும் புண்ணியத்தில் மட்டும் தான் எங்களுக்கு பங்கு உண்டு ,ஆனால் பாவத்தில் எங்களுக்கு பங்கு இல்லை என கூறிவிட்டார்.
அப்பொழுதுதான் ரத்னாகருக்கு ஞானம் பிறந்தது .உடனே நாரதரிடம் இந்த பாவத்தை போக்க என்ன பரிகாரம் செய்ய வேண்டும் ?என கேட்டார் .அதற்கு நாரதர் ராம நாமத்தை ஜெபிக்க வேண்டும் என்று சொன்னார்.
ரத்னாகருக்கு இராமா என்று சொல்ல முடியவில்லை அதற்கு நாரதர் நீ எல்லோரையும் என்ன செய்தாய் என்று கேட்டார் ? "மாரா" என்று கூறினான். மாரா என்றால் கொல்வது என்று பொருள் .அதையே கூறு என்றார் .மாரா என்று திரும்பத் திரும்ப கூறச் சொன்னார் அப்படி கூறும் போது "மாரா "என்பது" ராமா" என்று மாறியது.
அப்படியே ஒரு மரத்தடியில் கண்ணை மூடி இறைவனை பக்தியுடன் ராமா ராமா என்று கூறி நீண்ட நாட்கள் கடுமையாக தவம் செய்தார். அவரைச் சுற்றி எறும்புகள் புற்றுக் கட்டியது .எறும்பு புற்றுக்கு சமஸ்கிருதத்தில் "வால்மீகா"என்று பொருள். அதனால் தான் அவருக்கு வால்மீகி என்று பின்னர் அழைக்கப்பட்டது.
நீண்ட கால தவத்திற்கு பிறகு ஞானம் பெற்றார் .பிறகு ராமாயணத்தை சமஸ்கிருதத்தில் முதலில் எழுதியவரும் இவரே ஆவார். இவரை "ஆதி கவி "என்றும் கூறுவார்கள் .என்று துறவி செல்வத்திடம் கூறினார்.
செல்வமும் தன்னுடைய பாவங்களை போக்க எல்லா கோவில்களுக்கும் சென்று இறைவனை வேண்டி அங்குள்ள ஏழை எளியவர்களுக்கு என் கையில் உள்ள பணத்தையும் அவர்களுக்கு தானமாக கொடுத்து உதவி செய்து புண்ணியத்தை தேடிக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பிவிட்டார்.



**எம்.எல்.பிரபா**
ஆதம்பாக்கம், சென்னை.

# காலம் மறந்த பொக்கிஷங்கள் !!

▪A.s.Govinda rajan

## குச்சி விளையாட்டு...!!



எத்தனை பேர் விளையாடலாம்?
இரண்டு நபர் முதல் விளையாடலாம்.

விளையாட தேவையானது :
ஒரே அளவில் 10 குச்சிகள்.
சற்று நீளமான குச்சி ஒன்று.

எப்படி விளையாடுவது?
விளக்குமாறில் உள்ள சீவக்குச்சிகளை ஒரே அளவில் 10 குச்சிகளை எடுத்துக்கொள்ளவும். அதன்பின் இக்குச்சிகளைவிட சற்று நீளமுள்ள குச்சி ஒன்றை எடுத்துக்கொள்ளவும். இந்த 11 குச்சியையும் ஒரு சேர பிடித்து அவற்றை நிலத்தில் ஒரே வீச்சில் எறிய வேண்டும். அல்லது உள்ளங்கையால் உருட்டியும் போடலாம்.



பின் கீழே விழுந்துகிடக்கும் குச்சிகளை ஒவ்வொன்றாக அலுங்காமல் எடுக்க வேண்டும்.
அலுங்காமல் எடுத்த குச்சிகள் வெற்றிப்புள்ளிகளாக எடுத்துக்கொள்ளப்படும்.
அப்படி குச்சி எடுக்கும்போது அலுங்கினால் ஆட்டம் கைமாறும்.
அடுத்தவர் அந்த ஆட்டத்தை தொடர்வார்.
இதில் பெரிய குச்சியை எடுத்தால் 10 புள்ளிகள் கிடைக்கும்.
இவ்வாறு புள்ளிகள் கணக்கிடப்பட்டு கூட்டிக்கொள்ள வேண்டும். இதில் யார் அதிக புள்ளிகள் பெற்றாரோ அவரே வெற்றியாளர் ஆவார்.

விளையாட்டின் பயன்கள் :
இவ்விளையாட்டு பொறுமையை வெளிப்படுத்தும்.
விரல் நடுக்கத்தை குறைக்கும்.



# காதல் வாரம் மற்றும் காதலர் தினம்

பிப்ரவரி 7ஆம் தேதி முதல் 14ஆம் தேதி வரை காதலர் வாரம் எனப்படும் வாலண்டைன் வாரமாக அனுசரிக்கப்படுகிறது.
அதில் பிப்ரவரி 14, வாலண்டைன் தினம் எனப்படும் காதலர் தினம். ஒவ்வொரு நாளுக்கும் சிறப்புப் பெயர் உண்டு.
பிப்ரவரி 7 ரோஜா தினம். காதலின் ஆழத்தை வெளிப்படுத்தும் சிவப்பு நிற ரோஜாப் பூக்கள், பூங்கொத்துகள் பரிமாறிக் கொள்வார்கள்.
பிப்ரவரி 8 காதலை வெளிப்படுத்தும் நாள். நேசித்தவரிடம் வெளிப்படையாக, காதலை எடுத்துச் சொல்லும் நாள்.
பிப்ரவரி 9 - சாக்லெட் தினம். அன்பின் அடையாளமான சாக்லெட்டை பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளும் நாள்.
பிப்ரவரி 10 பொம்மைக் கரடி தினம். இளம் பெண்களுக்குப் பிடித்த பொம்மையாக டெட்டி பேர் கருதப்படுகிறது. இன்றைய நாளில் காதலிக்குப் பிடித்தமான வண்ண பொம்மை கரடியைப் பரிசளிப்பார்கள்.
பிப்ரவரி 11 வாக்குறுதி நாள். எந்த நிலையிலும் நாங்கள் பிரியமாட்டோம்




என்று காதலர்கள் உறுதி மொழி எடுத்துக் கொள்வார்கள்.
பிப்ரவரி 12 அணைப்பு நாள். அன்பை வெளிப்படும் விதமாக காதலர்கள் தழுவிக் கொள்ளும் நாள்.
பிப்ரவரி 13 முத்த தினம் காதலர்கள் முத்தம் பரிமாறிக் கொள்வதின் மூலம் ஆசையை வெளிப்படுத்தும் நாள்.
பிப்ரவரி 14: காதலர் தினம். தரமான நேரத்தை ஒன்றாக அனுபவிப்பதின் மூலம், தம்பதிகள் மற்றும் காதலர்கள் இடையே பிணைப்பை வலுப்படுத்திக் கொள்ளும் நாள்.
ஒரு கேள்வி எழலாம். ஏன் பிப்ரவர் 14, வாலண்டைன் தினம் என்ற பெயர் பெற்றது .இந்த நாள் தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணம் என்ன?
கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் ரோம் நாட்டில் பேகன் மதம் பிரதான மதமாக இருந்தது. ரோம் அரசர் க்ளாடியஸ் பேகன் மதத்தைச் சேர்ந்தவர். அவர் ரோமானியப் படை வீரர்கள் திருமணம் புரிந்து கொள்ளாமல், தங்கள் வாழ்க்கையை நாட்டிற்கு அர்ப்பணம் செய்ய வேண்டும் என்று சட்டமியற்றினார்.
அப்போது, ரோம் நகரில் செயிண்ட் வாலண்டைன் என்ற கத்தோலிக்கப் பாதிரியார் வசித்து வந்தார். மக்கள் பலர் அவர் மூலமாக கிறித்துவ மதத்திற்கு மாறிக் கொண்டிருந்தனர். பாதிரியார் வாலண்டைன், படை வீர்ர்களுக்கு இரகசியமாக கிறிஸ்துவ முறைப்படி திருமணம் செய்து வந்தார். அவர் ஆட்சிக்கு எதிராக சதி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பாதிரியாருக்கு, சிறை அதிகாரியின் மகள் மீது காதல் ஏற்பட்டது. பாதிரியாரின் மரண தண்டனை, 270ஆம் வருடம், பிப்ரவரி 14 அன்று நிறைவேற்றப்பட்டது. இறப்பதற்கு முன்னால், சிறை அதிகாரியின் மகளுக்கு எழுதிய காதல் கடிதத்தில் உன்னுடைய வாலண்டைன் என்று கையொப்பம் இட்டிருந்தார்.
இது நடந்து 200 ஆண்டுகளுக்குப் பிறகு, பிப்ரவரி 14ஆம் தேதி செயின்ட் வாலண்டைன் தினம் என்று அறிவிக்கப்பட்டது. உலகில் 50க்கும் மேற்பட்ட நாடுகளில் வாலண்டைன் தினம் கொண்டாடப்படுகிறது.



**கே.என்.சுவாமிநாதன்**
சென்னை

## தினம் ஒரு தலைவர்கள்

# சர் சேத்தூர் சங்கரன் நாயர் வரலாறு

சர் சேத்தூர் சங்கரன் நாயர் CIE (11 ஜூலை 1857 - 24 ஏப்ரல் 1934) ஒரு இந்திய வழக்கறிஞரும் அரசியல்வாதியும் ஆவார், அவர் 1906 முதல் 1910 வரை சென்னையின் தலைமை வழக்கறிஞராகவும் , 1910 முதல் 1915 வரை சென்னை உயர்நீதிமன்றத்தில் உயர் நீதிபதியாகவும், 1915 முதல் 1919 வரை வைஸ்ராயின் நிர்வாகக் குழுவின் உறுப்பினராக இந்தியா முழுவதும் கல்வி அமைச்சராகவும் பணியாற்றினார்.
1897 இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் , மேலும் மைலாப்பூர் குழுவை எதிர்த்து எழும்பூர் பிரிவை வழிநடத்தினார்

வி.சி.கோபால்ரத்னத்தின் கூற்றுப்படி , அவர் சி.ஆர். பட்டாபிராம ஐயர் , எம்.ஓ.பார்த்தசாரதி ஐயங்கார் , வி.கிருஷ்ணசாமி ஐயர் , பி.ஆர்.சுந்தரம் ஐயர் மற்றும் சர் வி.சி.தேசிகாச்சாரியார் ஆகியோருடன் சேர்ந்து மெட்ராஸ் பார் தலைவராகவும் , சர் வி.பாஷ்யம் ஐயங்கார் மற்றும் சர் எஸ்.சுப்பிரமணிய ஐயர் ஆகியோருக்குப் பின்னால் இருந்தவராகவும் இருந்தார்.
அவர் காந்தி மற்றும் அராஜகம் (1922) எழுதினார்.

ஆரம்பகால வாழ்க்கை மற்றும் கல்வி
சேத்தூர் சங்கரன் நாயர் 1857 ஆம் ஆண்டு ஜூலை 11 ஆம் தேதி பாலக்காடு மாவட்டம் மங்காராவில் மம்மயில் குடும்பத்தைச் சேர்ந்த பார்வதி அம்மா சேத்தூர் மற்றும் மம்மயில் ராமுண்ணி பணிக்கர் ஆகியோருக்கு மகனாக சேத்தூர் என்ற குடும்பத்தில் பிறந்தார். சங்கரன் நாயர் தனது குடும்பப் பெயர் சேட்டூர் , தாய்வழி வாரிசு மூலம் பெற்றார்.

அவரது தந்தை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் தாசில்தாராகப் பணியாற்றினார் . அவரது ஆரம்பக் கல்வி வீட்டிலேயே பாரம்பரிய பாணியில் தொடங்கி, கோழிக்கோட்டில் உள்ள மாகாணப் பள்ளியில் கலைத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெறும் வரை மலபாரில் உள்ள பள்ளிகளில் தொடர்ந்தது . பின்னர் அவர் சென்னை பிரசிடென்சி கல்லூரியில் சேர்ந்தார். 1877 ஆம் ஆண்டில் அவர் தனது கலைப் பட்டம் பெற்றார், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு சென்னை சட்டக் கல்லூரியில் சட்டப் பட்டம் பெற்றார்.

தொழில்
நாயர் 1880 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகத் தொடங்கினார். 1884 ஆம் ஆண்டு, சென்னை அரசு அவரை மலபார் மாவட்ட விசாரணைக் குழுவின் உறுப்பினராக நியமித்தது . 1908 வரை, அவர் அரசாங்கத்தின் தலைமை வழக்கறிஞராகவும் , அவ்வப்போது தற்காலிக நீதிபதியாகவும் இருந்தார். 1908 ஆம் ஆண்டு, அவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் நிரந்தர நீதிபதியாக ஆனார் மற்றும் 1915 வரை அந்தப் பதவியில் இருந்தார். கலெக்டர் ஆஷே கொலை வழக்கை விசாரித்த அமர்வில் , அப்போது சென்னை தலைமை நீதிபதியாக இருந்த சி.ஏ. வைட்டுடன் ஒரு சிறப்பு வழக்காக அவர் ஒரு பகுதியாக இருந்தார்.
அவரது மிகவும் பிரபலமான தீர்ப்பில், அவர் இந்து மதத்திற்கு மாறுவதை ஆதரித்தார், மேலும் அத்தகைய மதம் மாறியவர்கள் புறக்கணிக்கப்பட்டவர்கள் அல்ல என்று தீர்ப்பளித்தார். அவர் சென்னை மதிப்பாய்வு மற்றும் சென்னை சட்ட இதழை நிறுவி திருத்தினார்.

இதற்கிடையில், 1902 ஆம் ஆண்டில், வைஸ்ராய் லார்ட் கர்சன் அவரை ராலே பல்கலைக்கழக ஆணையத்தின் செயலாளராக நியமித்தார். அவரது சேவைகளை அங்கீகரிக்கும் விதமாக, 1904 ஆம் ஆண்டில் மன்னர்-பேரரசரால் இந்தியப் பேரரசின் துணைவராக நியமிக்கப்பட்டார் , மேலும் 1912 இல் அவருக்கு நைட் பட்டம் வழங்கப்பட்டது. 1915 ஆம் ஆண்டில் கல்வித் துறையின் பொறுப்புடன் வைஸ்ராய் கவுன்சிலில் உறுப்பினரானார் .
உறுப்பினராக, அவர் 1919 ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் குறித்த அறிக்கைகளில் இரண்டு கருத்து வேறுபாடுகளை எழுதினார், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் பல்வேறு குறைபாடுகளை சுட்டிக்காட்டி சீர்திருத்தங்களை பரிந்துரைத்தார். பிரிட்டிஷ் அரசாங்கம் அவரது பெரும்பாலான பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டது.

"நாட்டை ஆள வேண்டுமென்றால், ஜாலியன் வாலாபாக்கில் அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட வேண்டும், எந்த ஒரு சிவில் அதிகாரியும் எந்த நேரத்திலும் இராணுவத்தை வரவழைத்து, இருவரும் சேர்ந்து ஜாலியன் வாலாபாக்கில் நடந்தது போல் மக்களைக் கொன்று குவிக்க வேண்டும் என்றால், இந்த நாடு வாழத் தகுதியற்றது" - சி. சங்கரன் நாயர்
இந்தப் புத்தகம் பஞ்சாபின் லெப்டினன்ட் கவர்னரான சர் மைக்கேல் ஓ’ட்வயரை படுகொலையில் பங்கு வகித்ததற்காகக் கண்டனம் செய்தது, இது 1924 இல் நாயருக்கு எதிராக அவதூறு வழக்குத் தொடர வழிவகுத்தது. இராணுவச் சட்டம் விதிக்கப்படுவதற்கு முன்பு சிவில் அரசாங்கம் செய்த அட்டூழியங்களுக்கு ஓ’ட்வயர் மீது பயங்கரவாதக் குற்றம் சாட்டினார், அவரைப் பொறுப்பேற்கச் செய்தார்.

விசாரணையில் சாட்சியங்கள் பற்றிய செய்திகள் தி டைம்ஸ் இதழில் தினமும் வெளியிடப்பட்டன.
தோல்வியடைந்த போதிலும், அட்டூழியங்களை பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்கத்தை இந்த வழக்கு அடைந்ததாக நாயரின் குடும்பத்தினர் கூறுகின்றனர். தி கேஸ் தட் ஷூக் தி எம்பயர் என்ற புத்தகத்தை தனது மனைவி புஷ்பாவுடன் இணைந்து எழுதிய நாயரின் கொள்ளுப் பேரன் ரகு பலாட், இந்த வழக்கு "சுதந்திர இயக்கத்திற்கு ஒரு கொந்தளிப்பை" ஏற்படுத்த உதவியது என்று கூறுகிறார்.



சங்கரன் நாயர், அக்கால நாயர் பிரபுத்துவத்தின் தாய்வழி மரபுகளின்படி, இளம் வயதிலேயே பாலட் குன்ஹிமலு அம்மா அல்லது பார்வதி அம்மாவை மணந்தார். 1926 ஆம் ஆண்டு இன்றைய உத்தரகண்டில் உள்ள புனித பத்ரிநாத் கோவிலுக்கு யாத்திரை மேற்கொண்டபோது, அவர் அவருக்கு முன்னதாகவே இறந்தார் . இந்த தம்பதியருக்கு ஆறு குழந்தைகள் இருந்தனர்.

அவர்களின் மூத்த மகள் பார்வதி அம்மா (பின்னர் லேடி மாதவன் நாயர்) தனது உறவினரான சர் சி. மாதவன் நாயரை மணந்தார் , அவர் ஒரு சட்ட வல்லுநரும் பிரிவி கவுன்சிலின் நீதிபதியுமானவர். அவர்கள் சென்னையில் லின்வுட் என்று அழைக்கப்படும் ஒரு பெரிய தோட்டத்தில் வசித்து வந்தனர். இந்த சொத்துக்குள், இப்போது லேடி மாதவன் நாயர் காலனி/மகாலிங்கபுரம் என்று அழைக்கப்படும் பகுதியில், ஐயப்பன்-குருவாயூரப்பன் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ளது, இந்த நிலம் லேடி மாதவன் நாயரால் நன்கொடையாக வழங்கப்பட்டது. லின்வுட் அவென்யூ - வீட்டின் பெயர்களையும், சர் மற்றும் லேடி நாயரின் குழந்தைகளின் பெயர்களையும் கொண்ட பல சாலைகள் இன்னும் உள்ளன - பாலட் நாராயணி அம்மா சாலை, பாலட் சங்கரன் நாயர் சாலை, பாலட் மாதவன் நாயர் சாலை.
இளைய மகள் சரஸ்வதி அம்மா, அல்லது அனுஜி, புகழ்பெற்ற ராஜதந்திரி கே.பி. எஸ். மேனனை மணந்தார் . கே.பி.எஸ். மேனன் என்றும் அழைக்கப்படும் அவர்களின் மகன் மற்றும் பேரன் சிவசங்கர் மேனன் ஆகியோரும் வெளியுறவு செயலாளராக பணியாற்றிய இராஜதந்திரிகளாக இருந்தனர் . சிவசங்கர் மேனன் இந்தியாவின் 4வது தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும் பணியாற்றினார் .
அவர்களின் ஒரே மகன் ஆர்.எம். பலட்டும் ஒரு குறிப்பிடத்தக்க அரசியல்வாதியாக இருந்தார். ஒரு மகள் எம்.ஏ. கேண்டெத்துக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார்.
அவர்களின் மகன், லெப்டினன்ட் ஜெனரல் குன்ஹிராமன் பாலட் கேண்டெத், 1971 ஆம் ஆண்டு இந்திய-பாகிஸ்தான் போரின் போது மேற்கு இராணுவத் தளபதியாகவும் , கோவாவின் விடுதலை வீரராகவும் இருந்தார் . கேண்டெத்தின் மருமகனும், சர் சங்கரன் நாயரின் கொள்ளுப் பேரனுமான அனில் மேனன் , ஒரு நாசா விண்வெளி வீரர். மற்றொரு மகள் எம். கோவிந்தன் நாயருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார்.
மற்றொரு மகள் டி.கே. மேனனை மணந்தார். சங்கரன் நாயரின் பேரன் மருமகன் வி.எம்.எம். நாயர் , 2021 இல் இறந்தபோது இந்தியாவில் எஞ்சியிருந்த மூத்த ஐ.சி. எஸ் அதிகாரி ஆவார். அவரது பேரன் மருமகன் (மருமகள் அம்முகுட்டி அம்மாவின் மகன்) கே.கே. செத்தூர் , ஒரு ஐ.சி.எஸ் அதிகாரி, அவர் ஜப்பானுக்கான இந்தியாவின் முதல் தூதராகவும் பணியாற்றினார். அரசியல்வாதி மற்றும் சோசலிஸ்ட் ஜெயா ஜெட்லியின் தந்தை இவர், அவரது கணவர் அசோக் ஜெட்லி ஜம்மு-காஷ்மீரின் தலைமைச் செயலாளராக இருந்தார். ஜெயாவின் மகள் அதிதி முன்னாள் கிரிக்கெட் வீரர் அஜய் ஜடேஜாவை மணந்தார் . சங்கரன் நாயரின் மற்றொரு பேரன் மகன் பி.பி. நாராயணன் (சேத்தூர் நாராயணன் நாயரின் மகன்), மலேசியாவில் ஒரு புகழ்பெற்ற உலக தொழிற்சங்கவாதி மற்றும் தலைவர் (மொரைஸ் 1984, அறிமுகப் பக்கங்கள்).

தமிழ்நாடு இ பேப்பர்.காம்


# கோடிக்கணக்கில் சம்பளம் வாங்கும்போது சந்தோஷம் இல்லை - அனிருத்

தமிழ் சினிமாவின் தற்போது முன்னணி இசையமைப்பாளர்களில் முதன்மையானவராக வலம் வருபவர் அனிருத். அவரின் இசை இன்றி பெரிய ஹீரோக்களின் படங்கள் வருவதே இல்லை என்ற அளவுக்கு வெற்றிகரமான இசையமைப்பாளராக போட்டியின்றி திகழ்கிறார் அனிருத்.

இந்நிலையில் அண்மையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட அனிருத், சிறுவயது நினைவை பகிர்ந்து, பணம் சம்பாதிப்பது குறித்து மனம் திறந்துள்ளார்.நிகழ்வில் பேசிய அவர், சிறிய வயதில் திருமண நிகழ்ச்சிகளுக்கு வாசிக்க செல்லும்போது 500 ரூபாய் சம்பளமாக கொடுத்திருக்கிறார்கள். அப்போது இனம் புரியாத ஒரு சந்தோஷம் எனக்குள் ஏற்படும். சில நிகழ்வுகளில் சம்பளம் தராமல் வெறும் வெற்றிலை, பாக்கு மட்டும் கொடுத்து நன்றி சொல்லி அனுப்பி விடுவார்கள்.




இப்போது கோடிகளில் சம்பளம் கிடைக்கிறது. ஆனால் முன்பு இருந்த சந்தோஷம் இப்போது இல்லை. என்னதான் வேலையில் பரபரப்பாக இருந்தாலும் அந்த சிறுவயது சந்தோஷத்தை மட்டும் மறக்கவே முடியாது" என்று தெரிவித்தார்.

விஜய் டிவியில் ஒளிபரப்பான ஆஹா கல்யாணம் சீரியல் மூலம் ரசிகர்கள் மத்தியில் பிரபலமானவர் நடிகை காயத்ரி ஸ்ரீ. இவர் இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் ஒருவர். தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை தொடர்ந்து இன்ஸ்டா பக்கத்தில் பதிவு செய்து வருகிறார்.

இந்த நிலையில், தற்போது வரலாற்று படங்களில் வரும் கதாபாத்திரம் போல உடை அணிந்து போட்டோஷூட் நடத்தியுள்ளார். நடிகை காயத்ரி ஸ்ரீ வெளியிட்டுள்ள லேட்டஸ்ட் போட்டோஷூட் இதோ:



# OTT- யில் வெளியாகும் தலைவர் தம்பி தலைமையில்...



நடிகர் ஜீவாவின் 45 ஆவது படமாக 'தலைவர் தம்பி தலைமையில்' உருவானது. இப்படத்தை 'Falimy' படத்தை இயக்கி புகழ்பெற்ற இயக்குனர் நிதிஷ் சகாதேவ் இயக்கி இருந்தார். ராவண கோட்டம் படத்தை தயாரித்த கண்ணன் ரவி இப்படத்தை தயாரித்துள்ளார்.

தம்பி ராமையா, இளவரசு, பிராதனா நாதன், ஜென்சன் திவாகர் உள்ளிட்ட பலரும் நடித்துள்ள இப்படத்திற்கு விஷ்ணு விஜய் இசையமைத்துள்ளார். இப்படம் கடந்த மாதம் 15-ந்தேதி திரையரங்குகளில் வெளியாகி மாபெரும் வசூல் குவித்தது. பொங்கலையொட்டி வெளியான, சிவகார்த்திகேயனின் 'பராசக்தி', கார்த்தியின் 'வா வாத்தியார்' படங்களை பின்னுக்குத் தள்ளி ஜீவாவின் 'தலைவர் தம்பி தலைமையில்' படம் ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது.

இந்த நிலையில், அரசியல் கலந்த நகைச்சுவை படமான 'தலைவர் தம்பி தலைமையில்' படம் ஓ.டி. டி. தளத்தில் வெளியாவது குறித்த அறிவிப்பை படக்குழு அறிவித்துள்ளது. அதன்படி, 'தலைவர் தம்பி தலைமையில்' படம் வருகிற 12-ந்தேதி முதல் நெட் ஃபிளிக்ஸ் ஓ.டி.டி. தளத்தில் கண்டு மகிழலாம்.

# கார் ரேஸர் அஜித்தை சந்தித்த நடிகர் சிவகார்த்திகேயன்!



அபுதாபி ரேஸிங் களத்தில் திரைப்பிரபலங்கள் பலரும் அஜித்தை நேரில் சந்தித்து வருகின்றனர்.

அனிருத், ஜி.வி.பிரகாஷ், நடிகைகள் நயன்தாரா, ஸ்ரீலீலா ஆகியோர் அஜித்தை நேரில் சென்று சந்தித்தனர்

நடிகர் அஜித் குமார் திரைப்படங்களை தாண்டி கார் ரேஸிங் மீது காதல் கொண்டு பல சர்வதேச போட்டிகளில் அண்மைக் காலமாக கலந்துகொண்டு வருகிறார். ஸ்பெயின் மற்றும் அபுதாபி ஆகிய இடங்களில் நடைபெற்ற ரேஸிங் போட்டிகளில் அவர் பங்கேற்று கவனம் ஈர்த்து வருகிறார். அபுதாபி ரேஸிங் களத்தில் திரைப்பிரபலங்கள் பலரும் அஜித்தை நேரில் சந்தித்து வருகின்றனர்.

அந்த வகையில், சமீபத்தில் இசையமைப்பாளர் அனிருத், ஜி.வி.பிரகாஷ், நடிகைகள் நயன்தாரா, ஸ்ரீலீலா ஆகியோர் அஜித்தை நேரில் சென்று சந்தித்தனர்

இதை தொடர்ந்து, அஜித்தை அபுதாபி யாஸ் மரினா சர்க்யூட்டில் நடிகர் சிவகார்த்திகேயன் நேரில் சந்தித்துள்ளார். இந்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாக பரவி வருகின்றன.

# எம்.என்.ராஜம், எஸ்.பி.முத்துராமனுக்கு கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது அறிவிப்பு





2024-ம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுக்கு பழம்பெரும் நடிகை எம்.என்.ராஜம் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

2025-ம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுக்கு திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்து ராமன் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்.

தமிழ்நாடு அரசு சார்பில் வெளியிடப்பட் டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:-

தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கும் வாழ்நாள் சாதனையாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது வழங்கப்படும் என சட்டசபையில் கடந்த 2022-ம் ஆண்டு ஏப்ரல் 27-ந்தேதியன்று செய்தித்துறை அமைச்சரால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, 2024-ம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுக்கு பழம்பெரும் நடிகை எம்.என். ராஜம் தேர்வு செய்யப்பட்டுள்ளார். தமிழ் திரையுலகின் பழம்பெரும் நடிகைகளில் ஒருவரான நடிகை எம்.என். ராஜம் அவர்கள், சிறு வயதிலேயே நாடகங்களில் நடிக்கத் தொடங்கி, 1949-ல் குழந்தை நட்சத்திரமாக திரைப்படங்களில் அறிமுகமான இவர், 1950 மற்றும் 1960களில் முன்னணி நாயகியாக விளங்கினார். 200-க்கும் மேற்பட்ட தமிழ் திரைப்படங்களில் நடித்த இவர், பின்னர் தாயார், மாமியார் போன்ற பல்வேறு துணை வேடங்களிலும் சிறப்பாக நடித்து மக்கள் மனங்களில் நீங்கா இடம் பிடித்தவர்.

2025-ம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுக்கு திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்து ராமன் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். தமிழ்த் திரைப்படத் துறையின் மூத்த இயக்குநர்களில் ஒருவராவார். 1935 ஏப் ரல் 7-ந்தேதி காரைக்குடியில் பிறந்த இவர், 1960-ல் களத்தூர் கண்ணம்மா படத்தில் உதவி இயக்குநராகத் தொடங்கி, பின்னர் 1970 முதல் 1990 வரை தமிழ் சினிமா வில் மிகவும் வெற்றிகரமான வணிக இயக்குநராக உயர்ந்தார். 70-க்கும் மேற்பட்ட தமிழ்ப்படங்களை இயக்கியுள்ளார்.

தமிழ் திரைப்படத்துறைக்கு அளித்த பங்களிப்புகளுக்காக பல விருதுகளைப் பெற்றுள்ளார். எளிமை, நேர்மை, பணிவு ஆகியவற்றுக்கு பெயர் பெற்ற இவர், தமிழ் சினிமாவின் வணிக வெற்றியை தீர்மானித்த மிக முக்கிய இயக்குநர்களில் ஒருவராக வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகளுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ள எம்.என்.ராஜம், எஸ்.பி. முத்துராமன் ஆகிய இருவருக்கும் ரொக்கப் பரிசாக தலா ரூ.10 லட்சமும், நினைவுப் பரிசும் முதலமைச்சரால் வழங்கப்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி - நடிகர் தனுஷ் முதல் முறையாக D55 படத்திற்காக கூட்டணி அமைத்துள்ளனர். இப்படத்தில் மலையாள சூப்பர்ஸ்டார் மம்மூட்டி நடிக்கிறார். மேலும் சாய் பல்லவி, ஸ்ரீலீலா நடிக்கிறார்கள். இளம் சென்சேஷனல் இசையமைப்பாளர் சாய் அப்யங்கர் இப்படத்திற்கு இசையமைக்கிறார். பிரம்மாண்டமாக உருவாகவிருக்கும் இப்படத்திற்கான பூஜை நேற்று நடைபெற்றது. படத்தின் பூஜையில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் தற்போது வெளியாகியுள்ளன.





# ஜி.வி.பிரகாஷின் 'லக்கி' படத்தின் டிரெய்லர் வெளியானது



நடிகரும், இசையமைப்பாளருமான ஜி.வி.பிரகாஷின் நடிப்பில் நேரடியாக ஓ.டி.டி. தளத்தில் வெளியாக உள்ள படம் 'லக்கி தி சூப்பர் ஸ்டார்' . இப்படம் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் வருகிற 20-ந்தேதி முதல் ஜியோ ஹாட்ஸ்டாரில் வெளியாக உள்ளது. கந்தசாமி மற்றும் புஷ்பா கந்தசாமி தயாரித்துள்ள இப்படத்தில் அனஸ்வரா ராஜன், மேக்னா சுமேஷ், தேவதர்ஷினி, இளங்கோ குமரவேல், உதய் மகேஷ் உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர். இந்த நிலையில், உதய் மகேஷ் இயக்கத்தில் உருவாகி உள்ள 'லக்கி தி சூப்பர் ஸ்டார்' படத்தின் டிரெய்லர் வெளியாகி உள்ளது. அந்த டிரெய்லரில் மாயமான நாய் குட்டியான லக்கி அரசியல்வாதிகளிடம் சிக்கிக்கொள்ள அதனை கதாநாயகன் மீட்பதே கதைக்கருவாக அமைக்கப்பட்டுள்ளது.

# கண்ணீர் விட்டு அழுத விஜய் பட நடிகை



'பத்ரி', 'ரோஜாக்கூட்டம்', 'சில்லுனு ஒரு காதல்' போன்ற படங்களில் நடித்தவர் பூமிகா. தெலுங்கு, இந்தி படங்களிலும் நடித்துள்ளார்.

தற்போது அக்கா, அண்ணி வேடங்களில் நடித்து வரும் பூமிகா 'யுபோரியா' என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார். ஐதராபாத்தில் நடந்த இதன் பட விழாவில் பூமிகா பங்கேற்று பேசும்போது ஒரு கட்டத்தில் உணர்ச்சிவசப்பட்டார்.

"இந்த படத்தில் நடிக்கத் தொடங்கியது முதல் என்னால் நிம்மதியாக தூங்கமுடியவில்லை. நள்ளிரவில் தூக்கம் வராமல் அவதிப்படுகிறேன்" என்று பேசிக்கொண்டே தேம்பி தேம்பி அழ தொடங்கிவிட்டார். இதையடுத்து நிகழ்ச்சி தொகுப்பாளர்கள் சமாதானப்படுத்த அமைதியானார். இது நிகழ்ச்சியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

'யுபோரியா' படம் சிறுமிகள்- பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள் சம்பந்தப்பட்ட உண்மை சம்பவங்களை கொண்டு எடுக்கப்பட்ட படமாகும். குணசேகர் இயக்கியுள்ள இப்படத்தில் பூமிகா, சாரா அர்ஜூன், பிருத்வி உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடத்துள்ளனர். இப்படம் நேற்று திரையரங்குகளில் வெளியானதை அடுத்து படவிழா நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.



தமிழில் குழந்தை நட்சத்திரமாக பல படங்க்ளில் நடித்த சாரா அர்ஜுன் தற்போது ஹீரோயினாக படங்கள் நடிக்க தொடங்கி இருக்கிறார்.

ஹிந்தியில் அவர் ரன்வீர் உடன் நடித்த துரந்தர் படம் 1000 கோடிக்கும் மேல் வசூலித்து சாதனை படைத்திருக்கிறது. ஓடிடியிலும் தற்போது இந்த படம் வெளியாகி வைரல் ஆகி உள்ளது.

தற்போது சாரா அர்ஜுன் சேலையில் அழகாக போஸ் கொடுத்து இருக்கும் புகைப்படங்களை வெளியிட்டு இருக்கிறார். இதோ பாருங்க.

# '4 Windows' டீசரை வெளியிட்டார் நடிகர் ஜீவா!




இயக்குனர் நரேந்திர மூர்த்தியின் க்ரைம் த்ரில்லர் படமான '4 விண்டோஸ்' படத்தின் டீசர் வெளியாகி உள்ளது. இளையராஜா சேகர் தயாரித்துள்ள இப்படத்தில் வெற்றி, சத்யராஜ் , சின்னி ஜெயந்த், எம்.எஸ்.பாஸ்கர், கோவை சரளா, பிராத்தனா ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

மேலும் கூல் சுரேஷ், சச்சு, சேது, மாறன், சரண், வையாபுரி, டிஎம் கார்த்திக், ஶ்ரீநிக்தா, அய்ரா கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். படத்திற்கு ஜெரார்ட் பெலிக்ஸ் இசையமைத்துள்ளார். பாடல் வரிகளை கு. கார்த்திக் எழுதியுள்ளார். என்.எஸ். உதய குமார் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

டீசரை நடிகர் ஜீவா வெளியிட்டுள்ளார். டீசரை பார்க்கும்போது ஒரே இரவில் நடக்கும் நிகழ்வுகளைச் சுற்றியே சுழல்கிறது என்ற தோற்றத்தை அளிக்கிறது.

# Ghooskhor Pandat படக்குழுவினர் மீது FIR பதிய உத்தரவிட்ட உ.பி முதல்வர்





பகுஜன் சமாஜ் தலைவர் மாயாவதி இந்தத் தொடருக்குத் தடை விதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியில் நடிகர் மனோஜ் பாஜ்பாய் நடிப்பில் 'கூஸ்கோர் பண்டட்' (Ghooskhor Pandat) என்ற படம் உருவாகி உள்ளது.

நீரஜ் பாண்டே இயக்கத்தில் உருவாகி உள்ள இப்படம் குறித்த அறிவிப்பை நெட்பிளிக்ஸ் நிறுவனம் அண்மையில் வெளியிட்டதும் தலைப்புக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது.

கூஸ்கோர் என்றால் லஞ்சம் வாங்குபவர், பண்டட் என்பது பிரமாணரை குறிக்கும் சொல். எனவே படத்தின் தலைப்பு சர்ச்சையில் சிக்கி உள்ளது.

மும்பையைச் சேர்ந்த வழக்கறிஞர் அசுதோஷ் துபே, நெட்பிளிக்ஸ் நிறுவனதிற்கு சட்ட நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

டெல்லி உயர் நீதிமன்றத்திலும் வழக்கறிஞர் வினீத் ஜிண்டால் என்பவர் இந்தப் படத்தின் வெளியீட்டிற்குத் தடை விதிக்கக் கோரி மனுத் தாக்கல் செய்துள்ளார்.

லஞ்சம் என்பது தனிநபர் சார்ந்த குற்றம் என்றும், அதை ஒரு குறிப்பிட்ட சமூக அடையாளத்துடன் இணைப்பது ஒட்டுமொத்த சமூகத்தின் நற்பெயரைக் குலைப்பதாக அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

நெட்பிளிக்ஸ் தளத்தில் படத்தின் வெளியீட்டை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில் 'கூஸ்கோர் பண்டட்' ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் உணர்வுகளைப் புண்படுத்துவதாகக் கூறி, உத்தரப் பிரதேச காவல்துறை படக்குழுவினர் மீது எப்.ஐ.ஆர் பதிவு செய்துள்ளது.

முதலமைச்சர் யோகி ஆதித்யநாத்தின் உத்தரவின் பேரில், சமூக நல்லிணக்கத்தைக் குலைக்கும் வகையில் செயல்பட்டதற்காக இயக்குநர் நீரஜ் பாண்டே மற்றும் படக் குழுவினர் மீது லக்னோ காவல் நிலையத்தில் எப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே பகுஜன் சமாஜ் தலைவர் மாயாவதி இந்தத் தொடருக்குத் தடை விதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். பிராமண சமூகத்தை ஊழல்வாதிகளாகக் சித்தரிப்பதை ஏற்க முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

'பண்டட்' என்பது ஒரு கற்பனைக் கதாபாத்திரத்தின் புனைபெயர் மட்டுமே என்றும், எந்தச் சமூகத்தையும் இழிவுபடுத்தும் நோக்கம் தங்களுக்கு இல்லை என்றும் இயக்குநர் நீரஜ் பாண்டே மற்றும் நடிகர் மனோஜ் பாஜ்பாய் ஆகியோர் விளக்கம் அளித்துள்ளனர்.

மேலும் மத்திய அரசு அனுப்பிய நோட்டீஸை அடுத்து , நெட்பிளிக்ஸ் நிறுவனம் படத்தின் டீசரை சமூக வலைதளங்களில் இருந்து தற்காலிகமாக நீக்கியுள்ளது.



பிரியா பவானி ஷங்கர் தமிழ் சினிமாவில் முக்கிய நடிகைகளில் ஒருவர். அடுத்து அவர் டிமான்டி காலனி 3, மரகத நாணயம் 2 போன்ற படங்களில் நடித்து வருகிறார்.

அவர் படங்களில் பிசியாக நடித்தாலும் மற்ற நேரங்களில் காதலர் உடன் வெளிநாட்டில் செட்டில் ஆகி விடுவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் மாலை வேளையில் பிரியா பவானி ஷங்கர் கடல் ஓரத்தில் அழகிய போஸ் கொடுத்த லேட்டஸ்ட் ஸ்டில்கள் இதோ.

# சாலை விபத்து ஏற்படுத்திய வழக்கில் பிரபல மலையாள நடிகர் அதிரடி கைது





விபத்தை ஏற்படுத்தியது மற்றும் விபத்து நடந்த இடத்தில் இருந்து தப்பிச் சென்ற பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

பிரபல மலையாள நடிகர் மணியன்பிள்ளை ராஜு, விபத்து ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று, திருவனந்தபுரத்தில் மணியன்பிள்ளை ராஜு ஓட்டிச் சென்ற கார், இருசக்கர வாகனம் ஒன்றின் மீது மோதியுள்ளது. இந்த விபத்தில் இருசக்கர வாகனத்தில் சென்றவருக்குக் காயம் ஏற்பட்டுள்ளது.

விபத்து நடந்தவுடன் வாகனத்தை நிறுத்தாமல் சென்றதாக மணியன்பிள்ளை ராஜு மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

விபத்தை ஏற்படுத்தியது மற்றும் விபத்து நடந்த இடத்தில் இருந்து தப்பிச் சென்றது ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்த போலீசார், அவரை கைது செய்தனர்.

விபத்து நடந்த போது அவர் மது போதையில் இருந்தாரா என்பதை கண்டறிய மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.






## கைவண்ணம்...

சித்திரமே.. உன்னால் சிறு
நெஞ்சம்..சிதறுகிறதே...

அஸ்திரமே.. உம் கணை
இதயம் துளைக்கிறதே...

வண்ணங்களில்.. எதிர்
பட்டு... எம் இரவை...
வெள்ளையாக்கினாய்..

புரட்சி செய்யும்
பார்வையால்...

நாளங்களை
மிரட்சியாக்கினாய்...

தேன் சுரக்கும் விழியில்...
எறும்பாய் என்னை
ஈர்த்தாய்...

உன் கைபட்டால்... ஓவியம்...
உன் நிழல் தொட்டால்..
வாசனை திரவியம்...

கைவண்ணம் கொண்டு...
கலையாக்கு...
நாவினிக்கும் பேச்சால்...
வாழ்வை...நயமாக்கு....

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## ருசி

ஒரு ரெண்டு கிலோ
சீரகசம்பா அரிசி
ஒரு கிலோ
வெள்ளாட்டுக்கறி
அரைக்கிலோ வெங்காயம்
அரைக்கிலோ தக்காளி
கொஞ்சம் இஞ்சி பூண்டு
பொதினா மல்லித்தழை
ஒரு அரக்கட்டு,
பட்டக்கிராம்பு ஏலக்காய்
உப்பு தேவையான அளவு,
அதோடு நூறு கிராம் நெய்
தேவைப்பட்டால்
கொஞ்சம் எண்ணைய்
இவையெல்லாம் சேர்த்து
யாரு செய்தாலும்
பிரியாணி வரும் யாரு
செய்தால் ருசி வரும்,,,?



## வசியம்

ஆடைகளில்
வாசனைத்திரவியம் பூசி
ஆளை மயக்கலாம்
கூந்தலில் மல்லிகைச்சூடி
மனதை மயக்கலாம்



அதுயென்ன
மாயமோ
தெரியவில்லை
நீ
வார்த்தைகளிலே
வாசியம்
செய்து
விடுகிறாய்

**நாகை ஆசைத்தம்பி**
கோவை



## விடியற்காலை..

மூடிவைத்த இருட்டு
நிலா.. ஓடிவந்து எழுப்ப
வெளிச்ச நதி பிரவாகத்தில்
உதயசூரியன் குளிக்கும்!

குளித்துயெழும் குழவி..
தலைதுவட்டும் புற்கள்
பனிச்சிதறல் பட்டு..
பச்சைவயல் சிலிர்க்கும்
கூழாங்கற்கள் தெளிநதியில்..
தெரியும் ஆறு சுழன்றோடி..
ஆஹா இசை பாடும்!

மெல்லக் கண் விழிக்கும்
மொட்டுக்குள் ஆனந்தயாய..
தேன்குடிக்க சில்வண்டு
அலையும்..

கத்தாழைக் காடெல்லாம்
கள்ளிச் செடியெல்லாம்
மத்தாப்பாய் பனி தெறித்து
சிரிக்கும்! தாழம்பு
வாசனைக்கு நாகங்கள்
மயங்கும்..

பாவையர்கள் பதநீர்
சுமப்பர்.. கோதை
நாச்சியரின் திருப்பாவை
இசைப்பர்.. அந்த மார்கழி
மாதத்தில் மாதவா
கேசவா.. மதுசூதனா..
என்று பால்கறந்தபடி..
பாட்டிசைக்கும் உழத்தியர்.!



ஓ.. அந்த நாள்
கிராமத்தில்
யானிருந்தேன்..
ஆனால்
யாவையுமே
மறந்தேன்..
மெய்
மறந்தேன்!

**வே.கல்யாண்குமார்.**

## நிலையும்.. நினைப்பும்..

எப்போதும் நினைப்புதான்..
அப்புறம் ஏன் இந்தநிலை..?

செடி பூக்கும் முன்னே..
மலர்தொடுக்கும் நினைப்பு..
சிலைசெதுக்கும் முன்னாலே
கற்களுக்கு கனவு..

சிறையிருக்கும் போதே
சிறகுகளாய்ப் பறப்பு..
தடைதாண்டும் நினைப்பு..
தவறில்லை எனினும்..

கற்பனைகள் நினைப்பு
நிஜமாகும் வரையில்
கனவுகளில் மிதப்பு..
விடிந்துவிடும் நிலையில்..
இருப்பதுவும்.. இமையோரம்
நீர்ததும்ப தவிப்பதுவும்
மனசுக்குள் நினைப்பதுவும்
நினைப்பு! நெருப்பிடையே
நிலைப்பு!

**வே.கல்யாணகுமார்**



## தேர்த்திருவிழா

தேரோடும் வீதிகளில் மக்கள்
வெள்ளம் தோரணங்கள்
ஆடுவது நெஞ்சை அள்ளும்

வடம்பிடிக்க வாலிபர்கள்
வரிசை நிற்கும் கடமும்
முரசும் ஒலித்தே நகரும்

ஆண்டவனே ஆன்மிக
அன்பர்களுடன் சுற்றும்
காண்பவர்கள் இன்புறவே
தேர்த் திருவிழா

## குழந்தைகளைக் கவர்ந்திட !!

தேங்காய் நெத்திலே
கைவண்ணம் கண்டேன்
கொக்கு ஒன்று நிற்பது
போன்ற தோற்றம்

மரக்கழிவில் மீன் சேவல்
பறவைகள் பாம்புகாக்கைக்
கூடு பொம்மைகள் பலப்பல

குழந்தைப் புத்தகங்கள்
நிறைந்த அரங்கில்
குழந்தை விரும்பிப் பார்க்கும்
கைவினைப் பொருட்கள்
கவர்ந்தனஅரங்கின் பெயரோ
காக்கைக்கூடு !!



கூட்டமோ
அதிகம்
கைவினைப்
பொருட்கள்
கவர்ந்தே
இழுத்தன
குழந்தையின் கண்களை !!

**சண்முக சுப்பிரமணியன்**
திருநெல்வேலி



## செய்யும் நன்மைகள் இன்பமாக மலரும்

நல்ல செயல்கள்
எப்போதும் மகிழ்ச்சியான
நற்பயன்களையே தரும்!

நீங்கள் செய்யும் ஒவ்வொரு
உதவியும் நறுமணம் வீசும்
மலரை போன்றது !

மன அமைதி பெருகும்
நல்லுறவு வளரும் !

வாழ்க்கை அர்த்தமுள்ளதாக
மாறும்!

கடமையைச் செய் பலனை
எதிர்பார்க்காதே!

நாம் விதைக்கும்
நற்செயல்கள் நமக்கு
இன்பத்தை தரும்

இந்தத் தியாகமே
ஒருவனைப் பேரின்ப
நிலைக்கு கொண்டுசெல்லும்!

நீங்கள் எதைக்
கொடுக்கிறீர்களோ அதுவே
உங்களிடம் பன்மடங்காய்
திரும்பும் !

நன்மை செய்வது ஒரு
பந்தமே!

அன்பால் தரும் சிறு
உதவியும் பேரின்பம் தரும் !

கைமாறு கருதாமல் செய்யும்
நன்மையே உயரியது !

பிறர் முகம் மலர செய்வது
சிறந்த அறம் !

நல்ல உள்ளம்
கொண்டவர்களுக்கு உலகம்
எப்போதும் வசந்தமே!

வாடும் பயிருக்கு
மழையா இரு!

உன் வார்த்தை பிறருக்கு
மருந்தாகட்டும்!

மலர் தரும் மணம் போல நீ
செய்யும் தர்மம் உலகெங்கும்
வீசட்டும்!



விதையாய்
விழுந்த சிறு
உதவி இன்று
விருட்சமாய்
நிற்குதே !

**பெ.திருமுகம்**
மணமேல்குடி

பெயர்த்தெடுக்க
முடியவில்லை.. இதயச்
சுவரில் உன்
உருவம்.



மழை
பெய்கிறது என்
மீது மட்டும்..
உன் நினைப்பு
வரும்போதெல்லாம்.

**ரிஷபன்**

## கனவுக் குதிரை..

கனவுக் குதிரை ஏறியமர்ந்து போவோம் வாருங்கள்!
கவிஞர்கள் உலகம் எப்படியிருக்கும் என்பதைப் பாருங்கள்.!
உணவு மட்டுமே உலகம் அல்ல உணர்ந்து பாருங்கள்!
உணர்வில் கலந்து ஒவ்வொரு நொடியும் வாழ்வோம் வாருங்கள்!

ஒவ்வொரு உயிரும் உன்னுடன் பேசும் அனுபவம் உண்டாகும்!
எவ்வுயிர்க்குள்ளும் இருக்கும் இறைவன் நம்மையும் ஒன்றாக்கும்!

மேகத்திரையில் மெல்லிய தென்றல் உன்னை வரவேற்கும்!
சோகம் மறைந்து சுதந்திரமாக உலவும் நாள்பிறக்கும்!

பறவையினங்கள் பக்கம் அமர்ந்து பழங்களை உனக்கூட்டும்..
சிறகு முளைத்தே செவ்வானத்தில் நிலவும் முகம் காட்டும்!

கானகம் யாவும் கவிதைக்குயில்கள் அன்புடன் தாலாட்டும்!
அனைவரும் வருக அருவியும் அழைத்தே அமுதப் பாலூட்டும்.!

மலர்கள் தலையை அசைத்து மலர்ந்தே மனதுள் மகிழ்வூட்டும்!
நிலமும் வானும் நீயும் நானும் பறந்திட வழிகாட்டும்!



## மருத்துவரை போற்றுவோம்..!

மருத்துவரைப் போற்றுகின்றேன்.!
மனம்குளிரப் போற்றுகின்றேன்.! அர்த்தமுள்ள வாழ்வில்
சிறந்த.. அவர் பணியைப் போற்றுகின்றேன்.!


மருத்துவரைப் போற்றுகின்றேன்..
வந்தவர்கள் செல்வதுதான்.. வாழ்க்கை என்று சொல்லிடுவார்.!
வந்தாரை வாழவைக்கும் வாழ்க்கை இவர் வாழ்ந்திடுவார்.!

இரவு பகலென்று நேரம் பாராது.. இரக்க நெஞ்சோடு
உழைப்பவராம்.. இன்னொருவர் உயிர் தன்னுயிரென்று..
இதயசுத்தியுடன் நினைப்பவராம்.!
மருத்துவரைப் போற்றுகின்றேன்..

இறைவன் தந்த உயிரிருக்கும் உடலுக்கொரு துன்பமென்றால்..
நோயிருக்கும் மாந்தர் முன்னே தானிருந்து ஆற்றிடுவார்.!
துவண்டு விழுகின்ற இதயம் துடித்திட.. மருந்து தடவுகிற
மருத்துவராம்! விரைந்து பிறர் உயிரை முனைந்து காப்பாற்றும்
மனத குலம் கண்ட புனிதர்களாம்.!
மருத்துவரைப் போற்றுகின்றேன்.!

இல்லை இல்லை என்பவர்முன் இதயம் உள்ள மருத்துவர் யார்?
கொள்ளை நோய்கள் வந்தாலும் எதிர் கொண்டு தடுத்தவர் யார்?
எதிரில் தெரிகின்ற இறைவன் இவரென்று உணர்ந்து
பார்த்தவர்கள் அறிவார்கள்.! இனிது வாழவதற்க்கு சேவை
புரிபவரை மருத்துவர்கள் என்று உரைப்பார்கள்.!

**வே.கல்யாணகுமார்**



## அப்பா ஒரு உலகம்

அப்பா ஒரு உலகம் அதை
சுற்றி இருக்கு பெரும் கலகம்...

சுயனலம் இல்லாத
அப்பாவுக்கு ஏது சுதந்திரம்...

சுமைகளை சுமக்கும் ஒரு
பொதிகை அவர்...

புத்தாடை குடுத்திற்கு வாங்கி
கொடுத்து கந்த துணி தான்
கட்டி பெருமை கொள்ளும்

ஆளுமை அவர்...

பல மணி நேரம் தான்
உழைத்து பட்டினியா தான்
இருந்து குடும்பத்தை
காத்தாரு...

கண் பார்வை மங்கும் வரை...
கால் நடக்க முடியாமல் ஒய்யும்
வரை உழைத்தாரு...

கடைசியில் முதியோர்
இல்லத்தில் வாழ்ந்து
செத்தாரு...

பிள்ளைகள் அப்பாவா ஆன
பின்புதான் இந்த
அற்புதத்தை
உணர்ந்தாரு...!!



அப்பா ஒரு
உலகம்

**பொன்.கருணா**
நவி மும்பை




# நூல் விமர்சனம்

"பிரியாத உறவுகள் "
சிறுகதைகள்

நூல் ஆசிரியர்:
நல.ஞானபண்டிதன்
9788685905
பதிப்பகம் : கீதம் பதிப்பகம்
சென்னை வாழ்த்துரை:
எழுத்தாளர்,செ.ப.சிவராசன்
ஒருங்கிணைப்பாளர்
கவிஞாயிறு இலக்கியக்
குழுமம்

தமிழ் இலக்கியத்தின் பெருந்தோட்டத்தில் தினமும் மலர்ந்து கொண்டிருக்கும் புது மலர்களில் ஒன்று நல.ஞானபண்டிதன் அவர்களின் "பிரியாத உறவுகள்"என்னும் சிறுகதை தொகுப்பு, வாழ்க்கையின் நுண்ணிய உணர்வுகளை,மனித உறவுகளின் இனிமையையும், வேதனைகளையும் நம் சமுகத்தின் மெய்யுண்மைகளையும், கலைமொழியாக வடித்தெடுத்திருக்கும் இந்நூல்,வாசகரின் மனதை தொடும் ஒரு அரிய முயற்சி.

ஒவ்வொரு சிறுகதையும் ஒரு இதயத் துடிப்பைப் போல் ஒலிக்கிறது. நம் அன்றாட வாழ்வின் நிகழ்வுகள் ஒரு தந்தையின் அமைதியான அன்பு,ஒரு தாயின் சொல்லாமை நிறைந்த தியாகம் ,ஒரு தோழனின் நம்பிக்கை,ஒரு பெண்ணின் மனவலிமை இவை அனைத்தும் எழுத்தாளரின் கண்ணோட்டத்தில் புது வித ஒளி பெறுகின்றன. பிரியாத உறவுகள் என்பது வெறும் சிறுகதை தொகுப்பாக அல்ல; அது நம் உள்ளங்களுக்குள் உறையும் நினைவு களின் சங்கமம்.

நல.ஞானபண்டிதன் அவர்கள் கதைகளில் காணப்படும் மொழிச் சீர்மை, உணர்ச்சிமிக்க புனைவு,மனித வாழ்க்கையின் ஆழமான நிழல்கள் ஆகியவை வாசகரை சிந்திக்க வைக்கும். அவரது எழுத்து எளிமையாக இருந்தாலும்,அதன் பின்னால் ஓர் ஆழ்ந்த அனுபவப் பெருங்கடல் உள்ளது. நம் மண்ணின் வாசனையோடு கலந்த அந்த எழுத்துக்கள் வாசகர்களிடம் நெருக்கமாக பேசுகின்றன.


"பிரியாத உறவுகள் " என்ற தலைப்பே மனித வாழ்வின் மைய உண்மையை நினைவூட்டுகிறது. சில உறவுகள் சொல்லாமல் பேசுகின்றன,பிரிந்த பின் கூட,நிழலாக நம்மிடம் பயணிக்கின்றன. அந்த மௌன உறவுகளை நயமாக கதை வடிவில் வடித்திருப்பது நல.ஞானபண்டிதன் அவர்களின் கை வண்ணம் .

இந்த நூலின் ஒவ்வொரு சிறுகதையும் தனித்தனியாக வாசகனின் மனதைத் தொட்டுச் செல்கின்றது;அதே சமயம்,அனைத்தையும் இணைக்கும் ஓர் உணர்வுப் பாலம் உள்ளது அதுவே "அன்பு".அந்த அன்பின் பல வடிவங்களையும் வாழ்க்கையின் பல பரிமாணங்களையும் எழுத்தாளர் நயமுடன் வடித்துள்ளார்.

இன்றைய வேகமான உலகின் உணர்வுகளுக்கான இடம் குறைந்து வரும் நிலையிலும்,இந்நூல் மனித மனத்தின் துடிப்பை மீண்டும் உணர்த்துகிறது. இது ஒரு இலக்கிய பயணம் மட்டுமல்ல,ஒரு உணர்ச்சி அனுபவம்.

நல.ஞானபண்டிதன் அவர்களின் எழுத்துப்பயணத்திற்கு என் இதயப்பூர்வமான பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவிக்கிறேன்.இவரின் எழுத்துக்கள் இன்னும் பல இதயங்களைத் தொடும் வண்ணம் விரிவடையட்டும். இந்நூல் வாசகர்களின் உள்ளங்களில் நம்பிக்கை, நேசம், நினைவு ஆகியவற்றின் தீப்பொறியைத் தூண்டும் என நம்புகிறேன். நூல் ஆசிரியர் நல. ஞானபண்டிதன் அவர்களை வாழ்த்துகிறேன் மேலும் பல படைப்புகள் மூலம் சமுக நீரோட்டத்தில் பங்கெடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**நல.ஞானபண்டிதன்**



## மேகத்தில் கரைந்த நிலா!

மேகத்தில் கரைந்த நிலா வானில்
மனசோகத்தில் கரைந்த நிலா மண்ணில்

மேகங்கள் நிலவை மறைக்கலாம் சில
நிமிடங்கள்
மேகங்கள் விலக்கி ஒளிர்ந்திடும் நிலவு!

சோகங்கள் விலக்கி ஒளிர்ந்திடு என்னவளே!
கவலைப் படுவதால் விலகுவதில்லை கவலை !

கவலையை விடுத்து கவனத்தை மாற்று
ஏழ்மைக்கு என்றும் வருந்தாதே பெண்ணே !

இன்றைய நிலை நாளை மாறலாம் நம்பிடு
இனிமை என்பது பணத்தால் வருவது அன்று !
பணம் பெற்றதால் நிம்மதி இழந்தோர்
பாரதம் முழுவதும் உள்ளனர் அறிந்திடு !

நிம்மதி என்பது பணத்தில் இல்லை
நின் மதியை பணத்திலிருந்து விலக்கிடு!

பல பணக்காரர்கள் வாழ்க்கை சிறையில்தான்
பணத்தாசை பிடித்தவர்கள் முடிவு சோகம்தான்!
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்திட வேண்டும்
வளமான மனமே நலம் தரும் வாழ்க்கை தரும் !

வாழ்வதற்கு பொருள் வேண்டும் புரிகிறது
வாழ்வதிலும் பொருள் வேண்டும் புரிந்திடு !

பிறந்தோம் இறந்தோம் என்பதல்ல வாழ்க்கை
பிறந்தோம் சாதித்தோம் என்பதே வாழ்க்கை !

அடுத்தவரோடு ஒப்பிட்டு வாழ்வது வாழ்வன்று
அனைவருக்கும் பொது வாழ்வு அமைவதன்று !
ஐந்து விரல்கள் ஒரே மாதிரி இருப்பதில்லை
ஐந்தும் ஒரே மாதிரி இருந்தால் பயனில்லை !

ஏற்றம் இறக்கம் எல்லோர் வாழ்விலும் உண்டு
எதையும் ஏற்கும் பக்குவம் பெற்றிட வேண்டும் !

மாட மாளிகையில் வாழ்வோர் இன்பமாக இல்லை
மாட மாளிகை அவர்களுக்கு இன்பம் தரவில்லை !

குடிசையில் கூட கும்மாளமாக வாழ்வோர் உண்டு
குடிசையிலும் குதூகலம் நிலைப்பது உண்டு !

மேகத்தில் கரைந்த நிலா போதும் போதும்
மேகத்தை விட்டு வந்து அழகாய் ஒளிர்ந்திடு!



சோகத்தில் கரைந்த நிலா
போதும் போதும்
சோகத்தை விட்டு வந்து
அழகாய் ஒளிர்ந்திடு!

**கவிஞர் இரா. இரவி**
மதுரை

## கனல் மணக்கும் பூக்கள்

பூக்கள்தானே என்று
எண்ணாதீர், மிளகாய்
பூவின் மாற்றம்தானே

வேப்பம் பூ கசப்பின்
மறுவடிவமே
காந்தள் மலர் அரவம் கடந்த
விசமே

ஊமத்தம்பூ உன்மத்தம்
ஆக்கிவிடுமே

இவை போலத்தான்
புவிக்குள்ளிருந்து
எறியூட்டும் பூவையரும்

அன்று பாஞ்சாலியின்
சபதம் சீதையின் மௌனம்
சாவித்திரியின் தவம்
சுடர்விடும் நெருப்பைவிட
சுட்டெரிக்கும்
பூக்கள்



இன்றும்
பெண்கள்
கனல்
மணக்கும்
பூக்களே

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை




ஒரு விஷயம் தெளிவாக
புரிந்தது. தொழில்நுட்ப
வளர்ச்சி அவசியம்.

போட்டியில் ஓட
வேண்டியதுதான்.

ஆனால்...

நம் வேர்?

மூத்தவர்களுக்கு மரியாதை?
அவர்களின் தியாகங்கள்?

இவை மறுக்கப்படக் கூடாது.
இது சமநிலைக்கான நேரம்.

தொழில்நுட்பமும்வாழ்க்கையும்

நேர்கோட்டில் வர வேண்டும்.
மன நிம்மதி இருந்தால் தான்
தொழில்நுட்பத்தோடு
பயணிக்க முடியும்.

இல்லையெனில்—
வளர்ச்சி இருக்கும்,

ஆனால் வாழ்க்கை இல்லை.
அவர் சிரித்தார்.

ஒருநாள்...

ChatGPT கூட சொல்லலாம்,

“வாழ்க்கை சமநிலையை
மறக்காதீர்கள்” என்று.

இந்த எண்ணத்துடன்
அவர் நகர்ந்தார்—

முழு அமைதியல்ல,
ஆனால் விழிப்புணர்வுடன்

**Dr Harish Kumar D**
Chennai



## ஏன் படைத்தாய் இறைவா..

காலையில் கண்விழிச்சா
காணுந்தெய்வம் அம்மா
மாலையில் மயங்கிவரும்
மிருகந்தான் அப்பா" ஆக்கிக்
கழுவி அடுக்கி வச்சி
அவசரமா ஓடிடுவா சித்தாளு
வேலைக்கு

பேருந்தில் ஏறினா
பெரியவங்க இடிப்பாங்க
ஒசிடிக்கட்டுணு ஓட்டுநரு
நக்கல் அடிப்பாரு பரதேசியா
திரியிரவளே பள்ளிக்கு
ஏன்வர்ற பள்ளியில பலபேரு
பார்வையிலே கேட்பாங்க

நிறமில்லாச் சோறும்
காயில்லாக் குழம்பும்
கஷ்டப்பட்டு சாப்பிட்டாக்
கண்ணீரு நிரம்பிடும்
பள்ளிவிட்டு மூச்சிரைக்க
ஓடிவந்து வண்டியேறி
வாசல்வந்தா வழி யெல்லாம்
கூட்டம்

அப்பா அழுராரு அடிச்சு
அடிச்சு அம்மா படுத்திருக்கா
அழகான மாலைபோட்டு
மயக்கமா விழுந்தாளாம்
மறுகணம் மூச்சில்லையாம்
ஏங்கியேங்கி அழுதேன்
நிறுத்தாம அழவிட மாட்டா
ஆசையா ஊட்டுவா

அதிகமாப் படிக்கணும்
ஆபீசு போகணும்னா



அரைகுறையாப்
போயிட்டா
ஆளானா
என்ன
செய்வோம்?
எங்களை ஏன்
படைத்தாய்
இறைவா!

**மீனாட்சி பாண்டியன்**
திருவண்ணாமலை

## நாடகம்...

உள்நுழைந்து விட்டோம்...
இருவருக்குள்ளும்...

நீ அறியாத தருணங்களில்
நானும்.. நான் விலகும்
தருணங்களில் நீயுமாய்...

விழிவேட்டை நடத்திய
படி... நாம் தான்... கடந்து
கொண்டிருக்கிறோம்...

## மௌனங்களின் ஒலி...

தற்போது விழிகள் எழுதிக்



கொண்டிருக்
கின்றன... ஓர்
அடர் மௌனக்
கவிதையை...
ஆம்...
எதிரில்...
அவள்..

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## இலையுதிர் மரங்கள் !

உதிரும் இலைகளுக்காக
மரங்கள் ஒருபோதும்
வருந்துவதே இல்லை !

பச்சையம் மறைந்து
காய்ந்தாலும்
படபடப்பு என்றும்
வருவதில்லை !

இழப்புகளுக்காக கவலை
கொள்வதில்லை இருப்பை
தக்க வைத்து நிமிரும் !

இலைகளை காற்றும்
உதிர்ப்பதுண்டு
இலைகள் தானாகவும்
உதிர்வதுண்டு !

போனால் போகட்டும் போடா
என்ற பாடல் மனநிலையே
மரங்களுக்கு !

மழை வந்தால் உடன்
துளிர்க்கும் மறுபடியும்
இலைகள் முளைக்கும் !

தன்னம்பிக்கை எப்போதும்
இழப்பதில்லை
தானாகவே மீண்டும்
உறுதியுடன் துளிர்க்கும் !

**கவிஞர் இரா .இரவி !**



## புற்றுநோய் ஒழிப்போம்!

நேரிசை வெண்பா!

புற்றுநோயைப்
பராமரித்துப்பாங்காய்
விழிப்புணர்வைப்

பற்றோடு கொண்டிடுவோம்
பண்போடு.. முற்றாய்

ஒழித்திடுவோம்
ஒண்மையாய்க்காண்போமே
என்றும்

தழைத்திட வாழ்வோம் தகவு!

புற்றுநோய்க்கான
பொலிவான தொண்டுகளை

ஒற்றுமையாய்க்கொண்டே
ஒருங்கேதான்.. சுற்றமும்

நட்புமே நாடோறும்
சேர்ந்திங்கே பாடுபட்டே

பெட்போடு காண்பமேபீடு!
(பெட்பு...அன்பு)

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## மாமதுரை போற்றுவோம்

கோயில் நகரம் என்ற பெயர் பெற்ற மதுரை !
குணம் மிக்க நல்லவர்கள் வாழும் மதுரை !

சதுரம் சதுரமாக வடிவமைக்கப் பட்ட மதுரை !
சந்தோசம் வழங்கிடும் சீர் மிகு மதுரை !

உலகின் முதல் ஊர் கடம்பவன மதுரை !
உலகின் முதல் மனிதன் வாழ்ந்த மதுரை !

தமிழ்மாதப் பெயர் வீதிகள் கொண்ட மதுரை !
தமிழ் வளர்க்க சங்கம் அமைத்த மதுரை !

வானுயர்ந்த கோபுரங்கள் வரவேற்கும் மதுரை !
வந்தாரை எல்லாம் வாழ வைக்கும் மதுரை !

திருக்குறள் அரங்கேற்றம் நடந்திட்ட மதுரை !
திருவள்ளுவருக்கு வான்புகழ் தந்திட்ட மதுரை!

திருமலை நாயக்கர் மகால் உள்ள மதுரை !
திரும்பிய இடமெல்லாம் கலை நயம் மிக்க மதுரை !

மங்கம்மா ராணியின் அரண்மனை உள்ள மதுரை !
மகாத்மாகாந்தியின் அருங்காட்சியகம் உள்ள மதுரை !

பிரமாண்ட வண்டியூர் தெப்பம் உள்ள மதுரை !
பிரமிக்க வைக்கும் திருவிழாக்கள் நடக்கும் மதுரை !

கலைகளின் தாயகமாக விளங்கிடும் மதுரை !
காளைகளின் ஜல்லிக்கட்டு நடக்கும் மதுரை !

சமணர்களின் சிற்பங்கள் உள்ள மதுரை !
சைவர்களின் மடங்கள் உள்ள மதுரை !

சுற்றுலாப் பயணிகளை சுண்டி இழுக்கும் மதுரை !
சுந்தரம் மிக்க இயற்கைகள் நிறைந்த மதுரை !

மல்லிகையை ஏற்றுமதி செய்திடும் மதுரை !
மனங்களைக் கொள்ளைக் கொள்ளும் மதுரை !

அன்றும் இன்றும் என்றும் தூங்காத மதுரை !
அன்பைப் பொழிவதில் நிகரற்ற மதுரை !

புகழ் மிக்க பள்ளிவாசல்கள் உள்ள மதுரை !
புகழ் மிக்க தேவாலயங்கள் உள்ள மதுரை !

மதுரத்தமிழ் பேசும் மாசற்ற மக்களின் மதுரை !
மங்காத புகழ் பரப்பும் மாண்புமிக்க மதுரை !

வீரத்தின் விளைநிலமாகத் திகழும் மதுரை !
விவேகத்தின் முத்திரைப் பதிக்கும் மதுரை !

கடலைச் சேராத வைகை ஆறு ஓடும் மதுரை !
கட்டிடக் கலையை பறை சாற்றிடும் மதுரை !

கரகம் காவடி கூத்துக் கட்டும் மதுரை !
சிகரம் வைதாற்ப் போல சிறப்புப் பெற்ற மதுரை!

ஜில் ஜில் ஜெகர்தண்டா கிடைத்திடும் மதுரை !
ஜல் ஜல் நாட்டிய ஒலி ஒலிக்கும் மதுரை !

பல்லாயிரம் வயதாகியும் இளமையான மதுரை !
பாண்டியர்கள் வரலாறு இயம்பும் மதுரை !



ஈடு இணையற்ற
புகழ் மிக்க மதுரை !
இனியவர்கள் என்றும்
விரும்பிடும் மதுரை !

**கவிஞர் இரா .இரவி !**
மதுரை

1. கடவுள் வரம் எல்லாம்
தர மாட்டார் சந்தர்ப்பம்
தான் தருவார் அதை
வரம் ஆக்குவதும்
சாபமாக்குவதும் அவரவர்
கையில் தான் உள்ளது

2.குடிகாரர் யாரும்
பிறப்பதில்லை டாஸ்மாக்கில்
செதுக்கப்படுகிறார்கள்

3.பதில் தெரிந்தும் கேள்வி
கேட்பவர்கள் மனைவிகளும்
ஆசிரியர்களும் மட்டுமே


4.படிக்கத் தெரியாதவர்
கையில் இருக்கும் புத்தகமும்
ரசிக்கத் தெரியாதவர்
கையில் உள்ள வாழ்க்கையும்
அர்த்தமற்றது

5. ஓடுகிறவனுக்கு தானே



தெரியும்
மூச்சின்
வேகம்
உட்கார்ந்து
இருப்பவன்
விமர்சனம்
எதற்கு

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## "நினைத்தது எல்லாம் தான் நடக்கும்"


அப்பா என்ற வார்த்தையிலே!
ஆயிரம் அர்த்தம் தான்
உண்டு! இல்லறம் காக்கும்
நல்லறங்கள்! ஈகையோடு
தான் காப்பார்!உண்மை
உழைப்பு நேர்மையினை
ஊக்கத்தோடு பயிற்றிடுவார்!
எத்தனை துயர்கள் வந்தாலும்
ஏற்றுக்கொண்டு தான்
வாழ்வார்! ஒற்றுமை அதனை
காத்திடவே! ஓயா அலை
போல் தவழ்திடுவார்!
ஔவை சொன்னஅறநெறியில்
வாழ்ந்து நம்மை
வளர்த்திடுவார்!!!
உயிரை மெய்யாய்
கொடுத்தவருக்கு
உயிர்எழுத்தில் கவி
வடித்தேன்! பயிராய்
வளர்க்கும் தந்தை புகழை
பானைகுள்ளா தான்
அடைப்பேன்! கடலினும்
பெரிது என்பதனால்
இடமதைதேடி நான்
அலைவேன்.

தப்பு தவறு செய்தாலும்
திருத்தும் ஆசான்
அவர்தானே! ஒப்பிட என்றும்
முடியாத தியாக
தீப சுடர்தானே!
உப்பாய் கரைந்து
உழைத்திங்கு ஒப்பனை இன்றி
வாழ்ந்திடுவார்! விளக்கின்
ஒளியாய் சுடர் வீசி குடும்ப
நலனை தான் காப்பார்!
கிழக்கில் உதிக்கும்
கதிரவனாய் கடமை தன்னை
தான் செய்வார்!! வழக்கில்
ஒன்று தான் உண்டு
விதைத்தது இங்கே தான்
முளைக்கும்!! முதிரும் தந்தை
நலன்காத்தால் வளரும்
கதிரும் உனை காக்கும்.



தந்தை தாயை
தான் வணங்கு
நினைத்தது
எல்லாம் தான்
நடக்கும்.

**பொன். பனகல்**
**பொன்னையா.**



## உனது கரங்களில் உலகம்.!

என்றும் என்றும் நன்மை
வழிச் செல்வோம்.!
இதயத்தில் இறைவனைத்
தொழுவோம்.! ஒன்று வழித்
திருக்குறள் என்போம்.!
உலகத்தில் சிகரத்தைத்
தொடுவோம்.!

காலம் என்பது கடந்து
போவது.. கருணை என்பதோ
நிலைத்து வாழ்வது.. நாளை
என்பது நமக்கு ஆனது..
நன்மை புரிவதே கடமை
யானது.!
(என்றும்..என்றும்..)
தடைகளை வென்று வாழ்ந்து
காட்டிடு.. தருமத்தின்
பாதையில் துணிந்து
நடந்திடு.. உடைப்பதை
உடைத்து வளர்ப்பதை
வளர்த்தால்..உலகம்
முழுவதும் உனக்கு ஆனது..!
(என்றும்..என்றும்..)
எழுந்து பாரடா.. எழுட்சி
தோன்றுமே.. இரக்கம்
வைய்யடா உயிர்கள்
வணங்குமே.. உழைத்து
வாழடா.. உலகம்
வாழ்த்துமே.. உனது
கரங்களில் உலகம்சுழலுமே..!
(என்றும்..என்றும்..)

**வே.கல்யாண்குமார்.**



## நீ பார்த்த பின்புதான்

நூறு பேர் பார்த்துமென்ன
என் அன்பே..! நீயொருத்தி
பார்த்த பின்தான்
கூடுகிறது... என்
ஸ்டேட்டஸின் ஸ்டேட்டஸே!

## அமாவாசை

சூரியனின் ஒளியைத் திருடி
பூமிக்குக் கடத்தும்
வெண்ணிலாவே...
இன்று உன்னையே யாரோ
கடத்திவிட்டார்களே!

## கண்காட்டி வித்தை

கண்கட்டி வித்தை
செய்வதெல்லாம்
என்ன பெரிய பிரமாதம்...
கண்காட்டி நீ செய்யும்
காதல் வித்தைக்கு முன்!

## நிலா

இரவெனும்
கரிய யானைக்கு
உருட்டிக் கொடுக்கும்
கவளச்சோறு!

## ஒற்றைத் தந்தம்

இரவெனும் கரிய
யானையின்
ஒற்றைத் தந்தம்...பிறை நிலா!

## வெள்ளை இரவு

இரவு கருப்பாய்த்தான்
இருக்குமென்று
யார் சொன்னது... அதோ
ஒரு துண்டு வெள்ளை
இரவாய் நிலா!

## வறட்சியின் கொடுவாள்

வட்ட வடிவில்
பத்து தலை தாங்கி
வசீகரமாய் நின்ற
நெட்டைப் பனை வறட்சியின்
கொடுவாளால் சிரச்சேதமாகி
மொத்தத் தலைகளையும்
இழந்து நிற்கிறது
மொட்டைப் பனையாய்!

## பற்றுதல்

பரஸ்பரம் நம் இருவருக்குமே
பற்றுதல்தான்...
பசுமரத்தில் கொடியெனப்
பற்றுகிறேன் உனை நான்!
பஞ்சுக்குள் நெருப்பைப்போல
பற்றுகிறாய் எனை நீ!

## ஞாபக நெடி

கடவுளின் காலடியில்
கரைகிற ஊதுவர்த்திபோல்
உன் கண்ணெதிரே
புகைகிறது என் வாழ்க்கை...
எனினும் வாழ்வின்



கடைசிநொடி வரைக்கும்
உன் ஞாபகநெடி
மணக்கும்
வரத்தை வாரி
இறைத்திருக்கிறது
என் காதல்!

**சு.அருண் பிரகாஷ்**
இராமச்சந்திரபுரம்



## கிராமத்து காதல்

மையல் கொண்டேன் – உன்
மை விழிகளிலே!
மான் விழியாலே – எனை
மயக்கிட்டாயே – புள்ள!
ரெட்டை ஜடை அழகோ
றெக்க முளைக்க வைக்குதடி
கை வளையல் அழகோ
கிறுக்கு புடிக்க வைக்குதடி!

ஆத்தோரம் குடத்தோடு
அக் கரையில் நிக்கும்
உன்னை ஓரக் கண்ணால
நா பார்க்க உதட்டோரம் நீ
சிரிக்க! தினமும் காலையில
உனை ரசிக்க திருட்டுத்
தனமாய் நா வாரேன்
தினமும் உனை பார்த்ததும்
திருவிழா கோலம் யெ
மனசுல!

சம்மதனு சொல்லு புள்ள
ஜாதி ஜனத்தை
கூட்டிக்கிட்டு பாக்கு
வெத்தலஎடுத்துக்கிட்டு பரிசம்
போட நா வாரேன்!
சமயம் பார்த்து உன்
ஆத்தா கிட்ட சொல்லி
சம்மதம் வாங்கி வாயேன்
சாயங்காலம் வரை நா
காத்துகிடக்கிறேன் புள்ள!

ஏய் புள்ள கேட்டுச்சா
என் பேச்சை நீ கேட்பாய்யா!
சட்டுபுட்டுன்னு நீ சொல்லு
சரின்னு சம்மதம் சொல்லு
காலம் நேரத்தோட
கல்லாணம் பண்ணிகிட்டு
புள்ள குட்டி பெத்துக்கிட்டு
பொறுப்பாய் வாழ்வோம் புள்ள!


மனசு துடிக்குது
பாவி உன்னை தினமும்
நினைச்சி ராவுல படுத்தா
தினமும் ராசாத்தி நீ தான்
என் கனாவுல!

கண்டாங்கி சேலை
கட்டிகிட்டு கெளித்தி மீனை
எடுத்துக்கிட்டு வரப்பு
ஓரம் நீ வார வஞ்சி ஒ
கொள்ளழகு என்னை தூங்க
விடமாட்டுங்குதே!



உன் நெனப்பு
என்னை
கிறுக்கு பிடிக்க
வைக்குதடி
கிறுக்கு பிடிக்க
வைக்குதடி!

**பா கலைமகள்**
விழுப்புரம்



## க..ண்..ணா

பாதையில் செல்கையில்
பாவையர் சிரிப்பொலி..
பேச்சுடன் கலந்தே
காதில் விழுந்தது.

ராதையைத் தவிர
மற்றவரில் சிலர்..
’கண்ணனின் பிரியம்
யார் மேல் அதிகம்..?

’தன்னிடம் மட்டும்’..
’தன்னிடம் மட்டுமே’..
’தன்னிடம் மட்டும்தான்’..

கால் கடுக்க
கால் மாற்றி நின்று
அவன் ஊதிய குழலிசை..
செய்த அலங்காரங்கள்..
நதிக்கரையோரம்
காத்திருந்த பொழுதுகள்..
தனக்காக நிறுத்தி வைத்த
வேலையின் கணக்குகள்..

விதவித குரல்களில்
விவாதங்கள் பலதும்..
பாதையில் நடந்த
என்னை அழைத்தனர்..

கலக்கம் நிறைந்தது..
கவலை பிறந்தது..
’கணத்தினில் என்னைக்
காப்பாய் கண்ணா’
மனதினுள் வேண்டி
அருகினில் சென்றேன்.

’எங்களில் யாருடன்
கண்ணனுக்கு ப்ரியம்
கூடுதலாய்’ என
உடனே சொல்வாய்.."

’ராதையிடம்.."
சட்டென்று உடனே
யோசிக்காமல்
பட்டென்று பதிலை
எடுத்துரைத்தேன்

’அட மிகவும் சரியாய்
பதிலுரைத்தாய்..’

அடுத்த கணத்தில்
உயர்ந்தெழுந்தேன்
பூமியிலிருந்து
எதிர்பாராமல்

இனித்தே மகிழ்ந்ததில்
எகிறியது
இதயத் துடிப்பும்
அதிவிரைவாய்..

மரத்தின் பின்னால்
மறைவிடத்திருந்து
பேசிக் கொண்டே



தோன்றியவன்
இருகரத்தால் எனைத்
தூக்கிக் கொண்டான்
என்னுள் என்றும்
நிறைந்த கண்ணன்!

**கீதா கண்ணன்**
ஸ்ரீரங்கம்.



## தூய்மைப் பணியாளன்

தெருவெங்கும் அவனுக்கு வேலை!அவன் உரு கண்டு
ஏசுவார்.. ஊரிலே அவனைப் போல் யாருமே இல்லை.!
பெரும் தொண்டு செய்யவே புறப்பட்டான் காலை.! அந்த
துப்புரவுத் தொழிலாளி வந்தால் தான்.. தூய்மை பெறும் சாலை.!

கால்க்காசு ஊதியம் பெறுவான்.. கசடுகளை எல்லாம்
நீக்கியேத் தருவான்.!நாள் தோறும் வறுமையில் இருப்பான்!
அவன் நமக்காக உழைப்பான்.. என்றுதான் சிரிப்பான்?
கூலியென ஏளனம் செய்வார்.. அவன் குப்பையை அள்ளாவிடில்
நாறியேக் கிடப்பார்.!வெளியிலே குடிசையில் கிடப்பார்.. அந்த
தொழிலாளி வாழ்ந்தால் தான்.. நன்றாக இருப்பார்.!

தேடியும் கிடைக்காத தோழன்.. அவன் தெருவோரம்
வாழ்கிறான் ஏனிந்த பாரம். !கோடியில் புரல்கின்ற.. மாந்தர்கள்
நடுவே.. அவன் கோடியில் ஒருவன்! வாழுமிடம் ஏனோ
பிளாட்பாரம்.!

**வே.கல்யாண்குமார்.**



இந்து சமய அறநிலையத்துறை

திருவண்ணாமலை மாவட்டம். செய்யாறு வட்டம், முனுகப்பட்டு கிராமம்

## அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி திருக்கோயில்

## ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்டயாகம்

# மஹா கும்பாபிஷேக பெருவிழா

## அழைப்பிதழ்

அன்புடையீர், வணக்கம் !

நிகழும் சுபஸ்ரீ விசுவாவசு வருஷம் உத்தராயண புண்ணியகாலம் மாசி மாதம் 10–ஆம் நாள் (22-02-2026) ஞாயிற்றுக்கிழமை பஞ்சமி திதி, அஸ்வினி நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.30 மணிக்குமேல் 11.30 மணிக்குள்ளாக ரிஷப லக்னத்தில் அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதால் அனைத்து பக்தகோடிகளும், ஆன்றோர்களும், சான்றோர்களும் கலந்துகொண்டு எல்லாம் வல்ல அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி அருள்மிகு பச்சையம்மன் மன்னார்சாமி அருளை பெற அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

### நிகழ்ச்சி நிரல்

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நேரம் | நிகழ்ச்சி |
|---|---|---|---|
| மங்கள ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி மாதம் 7-ஆம் நாள் | 19-02-2026 வியாழக்கிழமை | காலை 8.00 மணிக்கு | மாங்கள இசை அனுக்ஞை விக்னேஸ்வர பூஜை, கோபூஜை, மஹா கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், மகாலஷ்மி ஹோமம், நட்சத்திர ஹோமம், பூர்ணாஹுதி உபசாரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| | | மாலை 5.00 மணிக்கு | வாஸ்து சாந்தி, ரக்ஷோக்ன ஹோமம், பிரவேசபலி பூஜைகள் |
| மாசி மாதம் 8-ஆம் நாள் | 20-02-2026 வெள்ளிக்கிழமை | காலை 8.00 மணிக்கு | தீர்த்த சங்கிரணம், அக்னி சங்கிரணம், திசா ஹோமம், மூர்த்தி ஹோமம், அஸ்திர ஹோமம், மந்திர ஜபம், சம்கிதா ஹோமம், யாகசாலை அலங்காரம் |
| | | மாலை 5.00 மணிக்கு | மங்கள இசை, கணபதி பிரார்த்தனை, மிருத்சங்கிரணம், அங்குரார்பணம், பிரதான ஆச்சார்யர் ரக்ஷாபந்தனம், எஜமானர்கள் காப்பு கட்டுதல், விஷேசசந்தி, கும்பலங்காரம், கலாகர்ஷணம், முதல்கால யாகபூஜைகள் ஆரம்பம். நவகுண்ட பூஜைகள், சௌபாக்கிய திரவியங்கள் ஹோமங்கள் உபசாரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| மாசி மாதம் 9-ஆம் நாள் | 21-02-2026 சனிக்கிழமை | காலை 8.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, கணபதி பிரார்த்தனை அங்குரபூஜை, இரண்டாம் கால யாகபூஜைகள் ஆரம்பம். மண்டப அர்ச்சனை வேதிகா உபசாரங்கள், அஷ்டபந்தனம் சாத்துதல், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| | | மாலை 5.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, மூன்றாம் கால யாகபூஜைகள் ஆரம்பம், மண்டப அர்ச்சனை, வேதிகா அர்ச்சனை, நவகுண்ட யாகபூஜைகள், நாடிசந்தானம், தத்துவார்ச்சனை, ஸ்பர்சாஹுதி சௌபாக்கிய திரவியங்கள், ஹோமம் சோடச உபகாரங்கள், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| மாசி மாதம் 10-ஆம் நாள் | 22-02-2026 ஞாயிற்றுக்கிழமை | காலை 7.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, கணபதி பிராத்தனை அங்குரபூஜை, நான்காம் கால யாகபூஜைகள் ஆரம்பம். அவபிரதயாகம், நவகுண்ட யாக பூஜைகள், மஹா பூர்ணாஹுதி, யாத்ராதன சங்கல்பம், மஹா தீபாராதனை. |
| | | காலை 10.30 மணிக்கு | கலசங்கள் புறப்பாடு |
| | | காலை 11.00 மணிக்கு | ராஜகோபுரம் மற்றும் அனைத்து விமானம் கும்பாபிஷேகம் |
| | | காலை 11.15 மணிக்கு | மூலவர் அருள்மிகு பச்சையம்மன் மன்னார்சாமி கும்பாபிஷேகம் |
| | | காலை 11.30 மணிக்கு | மஹா அபிஷேகம், அலங்காரம் |
| | | பகல் 12.00 மணிக்கு | சிறப்பு அன்னதானம் |
| | | மாலை 6.00 மணிக்கு | சுவாமி அம்பாள் திருக்கல்யாணம் |
| | | இரவு 8.00 மணிக்கு | சுவாமி அம்பாள் திருவீதிஉலா நடைபெறும் |
| | | இரவு 10.00 மணிக்கு | நாடகம் நடைபெறும் |

இங்ஙனம்

**திருக்கோயில் நிர்வாகம், திருப்பணி விழா குழுவினர்கள், திருக்கோயில் பணியாளர்கள், மற்றும் ஊர்பொதுமக்கள், முனுகப்பட்டு**

ஸ்ரீ சௌந்தர் பிரஸ், வேலூர்-4. செல் : 9894584829

**SHANMUGA PRIYA**
TOURS & TRAVELS
Porur, Chennai
நிறுவனத்திற்கு அனுபவமுள்ள
**TELE CALLERS**
பெண்கள் தேவை
Salary: 15,000/- TO 20,000/-
**99412 44226**

அசோக்நகரில் உள்ள
**மாயா நர்சிங் ஹோம்க்கு**
அருகில் வசிக்கும்
**வார்டு பாய்**
**ஆயாக்கள் தேவை**
சம்பளம் ரூ.18,000
ஆண் / பெண் - வயது: 35க்குள்
9361390688 / 9841383989

**MOUNT HOSPITAL**
@ Adambakkam & Thoraipakkam Req.
- HOSPITAL ADMIN with Insurance Experiance
- STAFF NURSES
- RECEPTIONIST
- LAB TECHNICIAN
- PHARMACIST
- DRIVERS

**730 530 5231**


**ST COURIER**®
The People's Choice
Domestic-International-Cargo-E commerce
சென்னை போரூரில் பணிபுரிய
கீழ்கண்டவர்கள் தேவை
- நைட் / மார்னிங் - டியூட்டி
Full / Part Time ஆட்கள் தேவை.
(ஸ்கேனிங், லோடிங், அன்லோடிங்)
- வேன் டெலிவரி ஆட்கள்
(குறிப்பு: பைக் தேவையில்லை)

தகுதி: 10 வது, 12 வது, டிகிரி.
சம்பளம்: Upto Rs. 20,000 + Perks
**Ct: 99406 11849**




**ஆட்கள் தேவை**
CNC டர்னிங்
ஆப்பரேட்டர்
பெயிண்டர்
ஹெல்பர்
SAA
நல்ல சம்பளம் வழங்கப்படும்
Southern Heat Exchangers, Coimbatore
**99444 40560**

**Aruvi SUPERMART**
Shop Smart, Shop Smiles.
ACCOUNTANT
STOCK INVENTORY
DELIVERY BOY
Min 3 yrs Experience
SF No. 138/9A2, Kundrathur Main Rd, Mangadu, Chennai-122.
9087411008, 9087982000







just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


WE'RE
HIRING!
A Passionate
Content Creator
94386 10756


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!
அஜந்தா
பாக்குடன்
உங்கள்
தீபாவளியை
கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மிக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed
Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your
Website/App need
at one place
Small
Business
website
E - commerce
Website
Corporate
Website
Enterprise
website
Mobile App
Development
contact us at
9337501889


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots
PlayGroup
Nursery
EuroJunior
EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த
பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும்
உள்ளூர், உலக செய்திகள் வரை
தரும் தரமான
நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com

முனீஸ்வர் துணை
கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sir Manjal Mart
YOUR DESIRE WE DELIVER
20% OFF
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website | Real Estate Website | E. Commerce Website
Restaurant Website | Shopping Website | News Website
MLM Binary Website | MLM Level Website | MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 – Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

WANTED MALE/FEMALE
SALES ASSISTANT
PREFERABLE IN & AROUND ALANDUR
9962258000
Since 1953
SLJ Sri Lakshmi Jewellery
ALANDUR, CHENNAI - 16.

WANTED
EXECUTIVES
Age Limit 40 Years
For Chennai, Tiruvallur, Chengalpattu
Attractive Salary Package, PF, ESI & Bonus with Allowances
999 BRAND
+91 893 999 7476
Email: 999lungies@kasz.in

WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998

REQUIRED
Bank & Finance
LOAN CONSULTANCY
TELECALLER (F)
Age Below 30 | Fresh/Exp 2Yrs
Qual: +2 or Any Degree
Sal: 12 to 18K + Inc
West CIT Nagar, T.Nagar-35.
ct: 97907 88886

WANTED
Experienced candidate for Office Manager position.
Good salary offered.
Contact: 87544 55567
Email: requires2025@gmail.com

# பல்சுவை களஞ்சியம்




# முதியவர்கள் சாப்பிட வேண்டிய சத்தான உணவுகள் !!



முதியவர்கள் தங்கள் வயதிற்கு ஏற்ப சத்தான உணவுகளை எடுத்துக் கொண்டால் உடல் ஆரோக்கியத்துடன் வாழலாம்.

???? முதியோர்கள் அன்றாட உணவில் புரதச்சத்து நிறைந்த உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் புரதச்சத்து அதிகம் நிறைந்த பருப்பு வகைகளை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் உடலுக்குத் தேவையான புரதச்சத்து கிடைக்கப்பெற்று உடல் வலிமையை பெறும்.

???? கால்சியம் அதிகம் நிறைந்துள்ள பால், தயிர், கீரை வகைகள், மீன் வகைகள் ஆகியவற்றையும் மறக்காமல் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் கால்சியம் சத்துகளும் வயதானவர்களுக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும்.

???? முதியோர்கள் மூன்று வேளையும் அரிசி உணவுகளை உட்கொண்டால், உடல் எடை அதிகரித்து உடல்நலக் கோளாறுகள் உண்டாகும். எனவே அரிசி உணவுகளை உட்கொள்வதைத் தவிர்த்து கோதுமை மற்றும் சிறுதானியங்களை உணவாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

???? சிறுதானியங்களை உண்பதன் மூலம் அதிலுள்ள கால்சியம் மற்றும் சுண்ணாம்புச் சத்துகள் எலும்புகளை உறுதியடையச் செய்யும். மேலும் இதில் நார்ச்சத்து நிறைந்து காணப்படுவதால் மலச்சிக்கல் பிரச்சனையும் ஏற்படாது.

???? பாகற்காய், புடலங்காய், காலிபிளவர், கொத்தமல்லி, காய்ந்த மிளகாய் போன்றவையும் மலச்சிக்கல் வராமல் தடுக்க உதவும் உணவுகளாகும். இவற்றையும் அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

???? சிறுதானிய உணவுகளை சாப்பிடுவதன் மூலம் உடலிலுள்ள தேவையற்ற கொழுப்பைக் கரைக்கலாம் மற்றும் உடலில் சர்க்கரையின் அளவை கட்டுக்குள் வைத்துக்கொள்ளலாம்.

???? வயதாகி விட்டாலே தாகம் ஏற்படுவது குறைந்துவிடும். எனவே தாகம் எடுக்கவில்லை என்றாலும் தண்ணீர் குடிக்க வேண்டும். குறிப்பாக நாள் ஒன்றுக்கு இரண்டு முதல் மூன்று லிட்டர் தண்ணீர் வரை கண்டிப்பாக குடிக்க வேண்டும்.

???? சோயா, முட்டையின் வெள்ளைக்கரு மற்றும் உயர்ரக காளான் போன்றவற்றிலும் புரதம் நிறைந்துள்ளது. எனவே வாரம் இருமுறையாவது இவ்வகை உணவுகளை வயதானவர்கள் சாப்பிட வேண்டும்.

???? சிறுநீரக நோயாளிகள் மற்றும் இதய நோயாளிகள் மருத்துவரின் ஆலோசனைப்படி தண்ணீரை அருந்த வேண்டும்.

???? நமது உடல் ஆரோக்கியத்திற்கு பக்கதுணையாக இருப்பது பழங்கள். எனவே முதியோர்கள் ஆரோக்கியமான வாழ்வினைப் பெறுவதற்கு கண்டிப்பாகப் பழங்களை உட்கொள்ள வேண்டும்.

???? உணவு உண்ட பிறகு பழங்களைச் சாப்பிடுவதால் எந்தவித நன்மைகளும் இல்லை. எனவே காலையிலோ அல்லது மாலையிலோ வெறும் வயிற்றில் பழங்களை உட்கொள்ள வேண்டும்.

???? உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி இல்லையெனில் எளிதில் நோய்கள் நம்மைத் தாக்கும். பொதுவாக வயதானவர்களுக்கு உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தே காணப்படும். எனவே இவர்கள் ஆரஞ்சு, நெல்லிக்காய், எலுமிச்சை போன்ற சிட்ரஸ் பழங்களை அதிகமாக எடுத்துக் கொள்வதன் மூலம் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கலாம்.

???? வயதானவர்களுக்கு ஏற்படும் பெரிய பிரச்சனை மறதி. எனவே உலர் திராட்சை, முட்டையின் மஞ்சள் கரு, ஸ்ட்ராபெர்ரி, முளைகட்டிய கோதுமை, வாழைப்பழம், பட்டை, வல்லாரைக் கீரை,



# மீம்ஸ்







# கருப்பு திராட்சை விதையில் உள்ள மருத்துவக் குணங்கள் பற்றி

கருப்பு திராட்சை என்றவுடன் அனைவருக்கும் நினைவுக்கு வருவது புளிப்பு சுவை தான். திராட்சைப் பழங்களை விட அதன் விதையில் ஏராளமான மருத்துவ நன்மைகள் நிறைந்துள்ளது. கருப்பு திராட்சைப் பழத்தை விட, அதன் விதையில் புரோ-ஆன்தோசயனிடின் (pசழயவொழஉலயnனைin) எனும் சத்து அதிகமாக நிறைந்துள்ளது.

கருப்பு திராட்சை விதைகளில் உள்ள மருத்துவ நன்மைகள் :

???? இரத்தக்குழாய்களில் ஏற்படும் அடைப்பு, இரத்தக்;குழாய்களில் ஏற்படும் வீக்கம், இரத்தக் கொதிப்பு போன்றப் பிரச்சனைகளை குணமாக்க திராட்சை பழத்தின் விதை அதிகமாக பயன்படுகிறது.

???? கருப்பு திராட்சையின் விதை மூலநோயினால் ஏற்படும் இரத்தப்போக்கை கட்டுப்படுத்த பெரிதும் உதவுகிறது.

???? இரத்தக்குழாய்களில் உள்ள கொழுப்பைக் கரைத்து, சர்க்கரை நோய் மற்றும் கால்கள் மரத்துப்போதல் போன்ற பிரச்சனையை குணமாக்க கருப்பு திராட்சையின் விதை மிகவும் உதவுகிறது.

???? அதேபோல் சிறுநீரகச் செயல்பாட்டின் குறைகளை சரிசெய்யப் பயன்படுகிறது. மேலும், மாலைக்கண் நோய் மற்றும் கண்புரை போன்ற கண் தொடர்பான பிரச்சனைகள் வராமல் இருக்க கருப்பு திராட்சையின் விதை பயன்படுகிறது.

???? மேலும் பெண்களின் மார்பகப் புற்றுநோய், கருப்பை கோளாறுகள் மற்றும் ஆண்களுக்கு ஏற்படும் புரோஸ்டேட் புற்றுநோய் போன்றப் பிரச்சனைகள் வராமல் இருக்க கருப்பு திராட்சையின் விதை உதவுகிறது.

???? நம் உடலிலுள்ள நச்சுப் பொருட்களை வெளியேற்றிப் புத்துணர்ச்சி தரக்கூடிய ஆன்டிஆக்சிடன்டு இதில் அதிகம் நிறைந்துள்ளது. மேலும், புற்றுநோய் செல்களை அழித்து, புதிய ஆரோக்கியமான செல்கள் அதிக அளவில் உற்பத்தி செய்ய உதவுகிறது. எனவே திராட்சைப் பழத்துடன் விதைகளைச் சேர்த்து உண்பது நல்ல பலனைத் தரும்.



???? உடல் வளர்ச்சியில் குறைபாடு உள்ளவர்கள், உடல் பலகீனம் உள்ளவர்கள், தோல் வியாதி, மூட்டு வலி, மூட்டு வீக்கம் ஆகிய பிரச்சனை உள்ளவர்கள் இதை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் விரைவில் நிவாரணம் கிடைக்கும். நினைவாற்றலை பெருக்கவும் இது பயன்படுகிறது.

???? எனவே, இவ்வளவு மகத்துவம் நிறைந்த திராட்சை விதைகளை, இவ்வளவு நாளாக தூக்கி எறிந்து விட்டோமே என வருந்தாமல், இனிமேலாவது திராட்சை விதைகளை சாப்பிடுங்கள்.

-A.s.Govinda rajan
Kodambakkam, Chennai

# விடுகதை



| | |
|---|---|
| வாயில் இருந்து நூல் போடுவான், மந்திரவாதி இல்லை; கிளைக்கு கிளை தாவுவான் ஆனால் குரங்கு இல்லை; வலை விரித்து பதுங்கி இருப்பான் ஆனால் வேடன் இல்லை அவன் யார்? | சிலந்தி |
| நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன? | தையல் ஊசியும் நூலும் |
| எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல் அது என்ன? | விக்கல் |
| கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது அது என்ன? | நிழல் |
| செய்தி வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே அவன் யார்? | தொலைபேசி |
| அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன? | தண்ணீர் |

# ஜோக்ஸ்



ஆசிரியர்: மின்னல் தெரிந்தபிறகு ஏன் இடி இடிக்கிறது .

மாணவன்: கண்களுக்கு பின்னால் தானே சார் காது இருக்கிறது அதனால்தான் சார்.

============================================

“உங்க வீட்ல சிரிப்பு சத்தமாயிருக்கே, ஏன்?”

“எங்க வீட்டு டிவி ரிப்பேர், அதுதான் !”

============================================

“அந்தக் கட்சிக் கூட்டத்தில எல்லோரும் சேர்ந்து அழறாங்களே , ஏன்?”

“அங்கே ‘துயர் மட்டக் குழு கூட்டம்’ நடக்குதாம்”

=========================

==================

“இன்னைக்கு நான் ஆபீஸ்ல பட்டினி கிடந்து வேலை செஞ்சேன்”

“அவ்வளவு பிசி ஒர்க்கா?”

“இல்ல; சாப்பாட்டு நேரத்தில என்னை யாரும் எழுப்பிவிடலை”

==========================================

“தொழில் படுத்திடுச்சின்னீங்களே , என்ன தொழில்?”


“பாய் வியாபாரம் !”

==========================================

டாக்டர்: “நீங்க உடம்பைக் குறைக்கணும்; இனிப்பைக் குறைக்கணும்; காரத்தைக் குறைக்கணும்”

நோயாளி: “டாக்டர், நீங்க ஃபீசை குறைக்கணும்”

============================================



ஒருவர்: “தாமஸ் ஆல்வா எடிசன் பல புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடிக்காமலிருந்தால் என்னவாயிருக்கும்?”

மற்றவர்: “வேற ஒருத்தர் கண்டுபிடிச்சிருப்பார்”

================
================
================

நீதிபதி : ” அந்த வீட்டுப் பூட்டை உடைத்து ஏன் திருடினாய்?”

திருடன்: “என்னோட சாவி எதுவுமே அந்தப் பூட்டைத் திறக்காததால கடைசியா பூட்டை உடைக்க வேண்டியதாப் போச்சிங்க”

==========================================

தொண்டர் 1 “தலைவர் ரொம்ப அப்பாவியா இருக்காரா, எப்படி?”

தொண்டர் 2 : ” சலூன்ல துண்டைப் போர்த்தினதுமே, ‘எந்த வட்டத்தின் சார்பில போடுறே’ன்னு கேட்கிறாரு”

==========================================

“வாழைப் பழம் ஒன்னு எத்தனை ரூபாய்ங்க?”

“ஒரு பழம் ரெண்டு ரூபாய்ங்க”

“ஒன்னரை ரூபாய்க்கு கொடுங்களேன்”

“ஒன்னரை ரூபாய்க்கு தோல் மட்டும்தான் கிடைக்கும்”

“அப்படின்னா ஐம்பது பைசாவுக்கு பழம் மட்டும் கொடுங்க”

==============================================

“இந்த ஆசிரியர் வித்தியாசமானவரா, எப்படி?”

“பதிலை சொல்லிட்டு, இதனோட கேள்வி என்னனு கேட்பார்”

==============================================

“டாக்டர், நான் யார் பேச்சையுமே கேட்குறதில்லை”

“அதை என்னிடம் வந்து ஏன் சொல்றீங்க?”

“காது சரியா கேட்கலை; அதை சரி பண்ணுங்க டாக்டர் !”

==========



# ஜோதிடம் அறிவோம்



## தேய்பிறை சதுர்த்தி காலத்தில் நரசிம்மர் வழிபட்டால் மரண பயம் அகலும்.



மதுரை அருகே உள்ள யானை மலை ஒத்தக்கடை என்ற இடத்தில் உள்ளது யோக நரசிம்மர் ஆலயம்.

மிகவும் பழமை வாய்ந்த இந்த ஆலயத்தில் மூலவராக யோக நரசிம்மர் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். தாயார் பெயர் நரசிங்கவல்லி என்பதாகும்.

ஆலய தீர்த்தம் சக்கர தீர்த்தமாகும்.

இது ஒரு குடைவறைக் கோவிலாகும். நரசிம்மர் வீற்றிருக்கும் ஆலயங்களிலேயே, மிகப்பெரிய உருவத்தை கொண்ட ஆலயம் இது என்பது தனிச் சிறப்பாகும்.

**தல வரலாறு:**

உரோமச முனிவர், தனக்கு புத்திர பாக்கியம் வேண்டி, இந்த யானை மலை தலத்திற்கு வந்து சக்கர தீர்த்தத்தில் நீராடி யாகத்தை தொடங்கினார். மேலும் நரசிம்மரை, அவரது நரசிம்ம அவதார கோலத்திலேயே தரிசிக்கவும் விரும்பினார். இறைவனும் உரோமச முனிவரின் விருப்பப்படியே, உக்கிர நரசிம்மராக தோன்றி காட்சி தந்தார்.

ஆனால் நரசிம்மரின் உக்கிர கோல வெப்பத்தால் உலகமே தகித்தது.

இதனை தாங்கிட முடியாமல், தேவர்களும், முனிவர்களும் பிரகலாதனிடம் சென்று முறையிட்டனர். பிரகலாதனும் இத்தலத்திற்கு வந்தார். ஆனால் நரசிம்மரின் உக்கிரம் குறைந்ததே தவிர, வெப்பம் முற்றிலும் நீங்கவில்லை.இதையடுத்து அன்னை மகாலட்சுமியிடம் அனைவரும் முறையிட்டனர். மகாலட்சுமியும் இத்தலத்திற்கு வந்தார்.

அதன்பிறகே நரசிம்மரின் உக்கிரம் முழுமையாக மாறி தணிந்தது.

மேலும் அன்னை மகாலட்சுமியை ஆலிங்கனம் செய்தபடி, யோக நரசிம்மராக, கேட்டதை வழங்கும் வள்ளலாக இத்தலத்தில் நரசிம்மர் அருள்புரிகிறார்.இத்தலத்தில் இருக்கும் யோக நரசிம்மர், தன் மார்பினில் மகாலட்சுமியை தாங்கியபடி மேற்கு திசை நோக்கி அருள்பாலிக்கிறார்.

இந்த ஆலயத்தில் கொடி மரம் இல்லை. பொதுவாக கொடி மரம் என்பது, கருவறைக்கு மேலுள்ள விமானத்தின் நீளம், அகல அளவைப் பொறுத்ததே. ஆனால் இத்தலத்தில் கருவறைக்கு மேல், யானை மலை மிகவும் உயர்ந்து காணப்படுவதால் கொடி மரம் வைக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.நரசிம்மராக அவதாரம் எடுத்தது, தேய்பிறை சதுர்த்தி காலத்தில் தான். எனவே அந்த நேரத்தில் இந்த யோக நரசிம்மரை வழிபட்டால், கல்வி சிறக்கும். வியாபாரம் விருத்தியாகும். எதிரி பயம் விலகும். மரண பயம் அகலும். அதே போல் நரசிங்கவல்லி தாயாரை வணங்கினால் திருமணத் தடை நீங்கும். கோபம் குறைந்து அமைதியான வழியில் செல்ல வழி ஏற்படும் என்பது அனுபவ உண்மையாகும்.

இந்த ஆலயத்தின் அருகே உள்ள தீர்த்தத்தில் மாசி மாத பவுர்ணமி தினத்தன்று கஜேந்திர மோட்ச விழா சிறப்பாக நடத்தப்படுகிறது.

திருவண்ணாமலையைப் போலவே இங்கும் ஒவ்வொரு பவுர்ணமி தோறும் கிரிவலம் நடைபெறுகிறது.

இத்தலத்தில் சிவபெருமானுக்கு நடக்கிற பிரதோஷம் போல, நரசிம்மருக்கு பிரதோஷ பூஜை நடப்பது மிகவும் சிறப்பானதாகும்.

**அமைவிடம் :**

மதுரையில் இருந்து சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில், மதுரை மாட்டுத்தாவணி பஸ் நிலையத்தில் இருந்து சுமார் 8 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது

யானை மலை ஒத்தக்கடை. இங்கிருந்து மினி பஸ்களில் 2 கிலோமீட்டர் மேற்கே சென்றால் கோவிலை அடையலாம்.

## அனைத்து தோஷங்களையும் போக்கும் சோழ நாட்டு திருச்செந்தூர்!



பாலமுருகனின் திருவடி பாதங்கள் பட்ட இடமானது இரண்டு ஸ்தலங்கள். ஒன்று நிச்சயதார்த்த கோலத்தில் தெய்வானை மற்றும் சுப்பிரமணியன் வீற்றிருக்கும் திருவிடைக்கழி, மற்றொன்று வேலூரில் உள்ள வள்ளியை மணந்த வள்ளி மலை. அவ்வப்போது அம்மை அப்பனுடன் கோபித்துக் கொண்டு முருகப் பெருமானுக்கு குன்றேறி அமர்ந்து தரிசனம் அளிப்பார். ஆனால் முருகப்பெருமான் குன்றில்லாத இடமான திருவிடைக்கழியில் ஸ்ரீ சிவ சுப்பிரமணிசுவாமி காட்சி தருகிறார்.

திருவிடைக்கழி கோயில் சோழ நாட்டு திருச்செந்தூர் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலைத் தரிசனம் செய்பவர்கள் திருச்செந்தூரில் உள்ள முருகனைப் பார்த்த பலன் கிட்டும். முக்கியமாக இக்கோயிலுக்கு ஒருமுறை சென்று முருகனை தரிசித்தால், நம்முடைய பாவங்களுக்குச் சிறிது வினை கழிந்துவிடும் என்பதே ஒரு சூட்சும விதி. ஆனால் எல்லோராலும் இந்த கோயிலுக்குச் சுலபமாக சென்றுவிட முடியாது. இங்கு வழிபட நினைக்கும் பொழுதே பல்வேறு இன்னல்கள் நமக்கு ஏற்படும். ஏனென்றால் நாம் செய்த பாவ கர்மாக்களை சுலபத்தில் கழிப்பது கடினமே. இந்த புண்ணிய ஸ்தலத்திருக்கு வருவதே பெரும் பாக்கியம்.

எடுத்துக்காட்டாக நான் கும்பகோணம் மற்றும் மாயவரத்தில் உள்ள பெரும்பாலான பழம்பெரும் கோயிலுக்கு அவ்வப்பொழுது சென்று வருவேன். ஆனால் என்னால் திருவிடைக்கழிக்கு மட்டும் செல்ல முடியாத அளவுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படும். சிறிது காலத்திற்கு முன்பு தான் அந்தக் கோவிலுக்குச் செல்ல எனக்கு மாபெரும் பாக்கியம் கிட்டியது. அனைவரும் இந்த ஸ்தலத்திற்கு ஒருமுறை மட்டும் செல்லாமல், பலமுறை தொடர்ந்து சென்றால் நற்பலன்கள் கிட்டும்.

திருவிடைக்கழி கோயிலை முசுகுந்த சக்கரவர்த்தி என்னும் சோழ மன்னன் கட்டியதாகத் தலவரலாறு கூறுகிறது. இங்குள்ள கல்வெட்டுகளில் திருப்புகழ், வேல் விருத்தம் பதிக்கப்பட்டுள்ளன. சேந்தனார் முக்தி பெற்றது இந்த தலம். அருணகிரிநாதர், வசிட்டர், சேந்தனார், முசுகுந்தன் மற்றும் ராகு பகவான் வழிபட்ட ஸ்தலம். இங்கு சர்வமும் சுப்பிரமணி என்பதால், பிரதோஷ நாயகர்கள் சோமஸ்கந்தரும் சந்திரசேகரர் சண்டிகேஸ்வரர் மற்றும் அனைத்து சிவமூர்த்திகளும் கையில் வஜ்ரவேலுடன் சிவசுப்பிரமணியாக காட்சியளிக்கிறார். இக்கோயிலில் முருகன் மற்றும் சிவனின் தலவிருட்சங்கள் குரா மற்றும் மகிழ மரங்கள் உள்ளன. இங்கு உள்ள தீர்த்தம் : கங்கை கிணறு மற்றும் சரவண தீர்த்தமாகும். கோயிலின் நான்கு திசையிலும் ஐயனார் காவல் தெய்வங்கள் இருக்கின்றனர்.

முருகனுக்கு தோஷ நிவர்த்தி: திருச்செந்தூரில் சூரபத்மனை வதம் செய்த ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி. அடுத்து சூரபத்மன் இரண்டாவது மகன் இரண்யாசுரனை வதம் செய்ய தேடி அலைந்தார். அந்த அசுரன் தரங்கம்பாடியில் உள்ள கீழச்சமுத்திரத்தில் சுறா மீனாக மறைந்து வாழ்ந்தான். வைகாசி மாதம், சதயம் நட்சத்திரமன்று முருகன் இரண்யாசுரனை தேடி கண்டுபிடித்து சம்ஹாரம் செய்தார். அந்த அசுரன் ஒரு தீவிர சிவ பக்தன். அவனை அழித்ததால் முருகனுக்கு தோஷம் ஏற்பட்டது. அதற்கு அன்னை பராசக்தியின் ஆலோசனைபடி திருவிடைக்கழியில் உள்ள சரவண பொய்கையில் நீராடி, திருவிடைக்கழியில் உள்ள குரா மரத்தடியில், சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து, தன் தந்தைக்கு குரா மலர்களால் அர்ச்சனை செய்தார். பின்பு அங்கு உள்ள மரத்தின் அடியிலிருந்து முருகன் சிவனை நோக்கி தவம் செய்தார். இங்கு முருகருக்கு தோஷ நிவர்த்தி கிடைத்தது. சிவபெருமானை சிந்தித்துத் தவம் செய்த இம்மரத்தடியில் பத்ரலிங்கத்திற்கு அபிஷேகம் ஆராதனை நடைபெறும். இங்கு முருகர் மூலவராகவும், யோக சுப்பிரமணியராக குரா மரத்தடியிலும் காட்சியளிக்கிறார். இக்கோயிலில் தெய்வானை முருகனின் அழகில் மயங்கி நாணத்துடன் சற்று வலப்புறம் தலை சாய்த்து அழகிய முருகனை தன் கடைக்கண்ணால் நோக்கும் பாவனையில் தனித்து சன்னதியில் காட்சியளிப்பாள். இங்குதான் தெய்வானைக்கு நிச்சயதார்த்தம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

தமிழ் கடவுள் முருகருக்கு குரா மரம் என்பது பிடித்த விருட்சம். "திருக்குராவடி நிழல்தனில் உலவியப் பெருமானே" என்று அருணகிரிநாதர் குரா மரத்தடியில் இன்றும் சர்வ சாதாரணமாக உளவிய குமரேசனே என்று திருப்புகழில் பாடப்படுகிறார். 'குரவு மலர்ந்து அற்சிரம் நீங்கிய அரும்பத வேனில்' என்று குரா மலர்களை சங்க கால இலக்கியத்தில் கூறப்படுகிறது. இளவேனிற் காலத்தில் பூக்கும் குராமரத்து பூக்களை முருகருக்கு அர்ச்சனை செய்தால் குறைவில்லாத செல்வமும் வளமும் கிட்டும். இங்கு தினமும் குராமரத்தடியில் உள்ள லிங்கத்திருக்கு அர்த்தஜாம ஆராதனை நடைபெறும். மலைகளில் மட்டுமே தோன்றக்கூடிய இக்குராமரம் இத்தலத்தில் நிலத்தில் தோன்றி, தழைத்து காட்சி தருகிறது. சுப்பிரமணியக் கடவுள் இக்குராமரத்தின் கீழ் தியானம் செய்த அபூர்வ தலவிருட்சம். கல்வெட்டில் முருகனுடைய பெயர் "திருக்குராத்துடையார்" என்று குறிக்கப்பட்டுள்ளது. குரா மரத்தடியில் அமர்ந்து நாம் மனம் ஒன்றி பகவானை நினைந்து தியானம் செய்தால் மன அமைதி, சரியான பாதை மற்றும் செயலில் வெற்றி என்று முருகனின் வேல் வழிகாட்டும்.

முருகப்பெருமான் ஆறடி உயரத்தில் நின்ற கோலத்தில் காட்சி கொடுக்கிறார். முருகனின் திருவுருவ அழகு குமார தந்திரத்தில் கூறப்பட்டுள்ளபடி, திருவிடைக்கழி முருகன் ஒரு முகம், இரண்டு கரங்கள், வலது கரத்தில் அபய முத்திரையுடனும், இடது கரம் தொடையில் இருப்பது போன்ற தோற்றத்துடன் உள்ளார். முருகரின் வாகனம் ஐராவதம். இங்குள்ள கருவறையில் முன்புறம் சுப்பிரமணிய பெருமானும், அவருக்குப் பின்புறம் பாபநாசப் பெருமானும் லிங்க வடிவில் அமைந்துள்ளது. பிரம்மஹத்தி தோஷம் நிவர்த்தி பெற்ற முருகன் பூஜித்த ஸ்படிக லிங்கம் முன்னே உள்ளது. சிவன் தன்னுடைய மூல ஸ்தானத்தை முருகனுக்குக் கொடுத்து, அவர் பின்னே அமர்ந்து கவனிப்பதுபோல இருந்தது. இது ஒரு தந்தை தன் மகனுக்குக் கொடுக்கும் கௌரவமாகும். இங்கு உள்ள கருவறையில் சிவனும் முருகரும் ஒரே இடத்தில் காட்சி கொடுக்கும் அழகு காணக் கிடைக்காத ஒன்று. இரு மூர்த்தங்களுக்கும் தனித்தனி விமானங்கள் உள்ளன. முருகனுடைய விமானம் சற்று உயரமாகவும் உள்ளது. யோக முத்திரையில் முருகன் இங்குக் குரா மரத்தடியில் தவம் செய்து கொண்டிருப்பார். தந்தை மகன் ஒற்றுமை இல்லாதவர்கள் இங்கு வந்து சிவனையும் முருகரையும் தரிசித்தால், குடும்ப ஒற்றுமையைப் பலப்படும்.

நவக்கிரகங்களின் நாயகன்: இக்கோயிலில் நவ நாயகர்கள் உள்ளடங்கிய முருகன் சிவனுடன் சேர்ந்து காட்சி தருவதால், இங்கு நவக்கிரகங்களுக்குத் தனி சன்னதி கிடையாது. முக்கியமாகச் செவ்வாய் தோஷம், மாங்கல்ய தோஷம், பித்ரு தோஷம், பிரம்மஹத்தி தோஷம் மற்றும் அனைத்து நவகிரக தோஷங்களுக்கும் ஒரே அருமருந்து திருவிடைக்கழியில் உள்ள சிவசுப்பிரமணிய சுவாமி. அதிலும் பாவ கிரகங்களில் ஒன்றான ராகு பகவான் இக்கோயிலில் முருகரை வழிபட்டதாக தல வரலாற்றில் கூறப்படுகிறது. குரா என்று வார்த்தையைத் திருப்பி போட்டால் ராகு என்று வரும். முக்கியமாக இக்கோயிலில் ராகுவால் ஏற்படும் தோஷத்தை நிவர்த்தி செய்ய திருவிடைக்கழிக்கு செல்வது நன்று. "அரவு எயிற்று அன்ன அரும்பு முதிர்குரவின்" என்ற அகநானூறு பாடலில் குரவ மலரின் அரும்பு பாம்பின் பல்போன்ற வடிவம் உடையது என்பது ராகுவைக் குறிப்பது போல இருந்தது. இந்த காலகட்டத்தில் தோஷத்தை நிவர்த்தி செய்ய ராகுவின் சூட்சுமம் உள்ளடங்கியுள்ளது.

"கொந்து ஆர் குரா அடியினும் அடியவர் சிந்தை வாரிஜ நடுவினும் நெறி பல கொண்ட வேத நல் முடிவினும் மருவிய குரு நாதா"

கொந்துவார் குரா அடி என்பது திருவிடைக்கழியில் உள்ள குரா மரத்தடி பற்றி அருணகிரியால் திருப்புகழில் கூறப்பட்டுள்ளது.

முருகன் இரணிய சூரனை வதம் செய்த நாள் ஆராய்ந்து பார்த்தால், ஜோதிடத்தில் வைகாசி என்பது சூரியன் (சிவன்) ரிஷபத்தில் இருக்கும் மாதம். அங்கே சந்திரன் (சக்தி) உச்சம் பெறும் இடம். சிவனும் சக்தியும் இங்கு குருவாக இருந்து முருகனுக்குத் துணையாக இருக்கிறார். செல்வம் மற்றும் திருமண வளத்தைத் தரும் சுக்ரன் வீடானா ரிஷபதில் ஆட்சி, சதயம் என்பது ராகுவின் நட்சத்திரம். இங்குள்ள பச்சை மரம் என்பது செழிப்பு (புதன்), சனியால் ஏற்படும் கர்மாவை குறைக்கக்கூடிய பாபநாசா பெருமான் இங்கிருக்கிறான். இவ்வாறாக முருகருக்கு எல்லா நவகிரகங்களும் உள்ளடங்கி உதவியாக இருக்கிறது. மொத்தத்தில் எல்லா கிரகங்களின் தோஷங்களை விலக்கக்கூடிய இடம் திருவிடைக்கழி. இக்கோயில் தரங்கம்பாடி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் மற்றும் திருக்கடையூரில் இருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இங்குத் தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி தரிசனம் செய்தால் தீராத கர்மா மற்றும் திருமண தோஷங்கள் விலகும். இங்குக் கந்த சஷ்டி விழா, தை பூசம், வைகாசி விசாகம், ஆடிக் கிருத்திகை, பங்குனி உத்திரம், மற்றும் கார்த்திகை திருவிழா காலங்களில் முருகரைத் தரிசிக்க வைத்தீஸ்வரன் கோயில், காரைக்கால், சுவாமி மலை மற்றும் பல்வேறு மாவட்டத்திலிருந்து நடைப்பயணமாகக் காவடி எடுத்து வருகை புரிவார்கள். இது தவிர புரட்டாசி மாதம் முதல் வெள்ளிக்கிழமை சிதம்பரத்திலிருந்து பாதயாத்திரையாக இந்த ஆலயத்திற்குச் சென்று குமரனை வழிபடுவார்கள். இக்கோவிலைப் பற்றி அறிந்த நமக்கும், இந்த சோழ நாட்டுத் திருச்செந்தூர் முருகனைத் தரிசிக்க உகந்த நேரம் வந்துவிட்டது.

## சுடுகாடு எங்கே இருக்கிறது?



ஒரு முறை திருமுருக கிருபானந்த வாரியார் ஆன்மிக சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார் .

அப்போது , மேடைக்கு முன்பு அமர்ந்திருந்த சிறுவர்களை பார்த்து , " நமக்கெல்லாம் சுடுகாடு எங்கே இருக்குன்னு தெரியுமா ? " என்று கேட்டார். அதற்கு அந்த சிறுவர்கள் , " ஊர் கோடியில் இருக்குது! "... என்று ஒட்டுமொத்தமாக பதில் கூறினார்கள்.

உடனே , " ஆடு , மாடு , கோழிகளுக்கு எங்கே இருக்கிறது ?" என்று அடுத்த கேள்வியைக் கேட்டார் வாரியார் . குழந்தைகள் பதில் தெரியாமல் மிரட்சியுடன் அவரை பார்த்தனர்.அப்போது வாரியார் சிரித்துக்கொண்டே , " இதோ இங்கே இருக்குது...! மாமிசம் சாப்பிடும் அனைவருக்கும் அவர், அவர் வயிரே சுடுகாடு " என்று கூறி வயிற்றை தடவிக் காண்பிக்க , கூட்டத்தில் பலத்த சிரிப்பு எழுந்தது.

**மீனாக்ஷி கல்யாணம் சொற்பொழிவு ஆற்றியபோது வாரியார் அவர்கள் சொன்ன உதாரணம்**

உதாரணங்கள் சொல்வதில் வாரியார் சுவாமிக்கு இணை அவரே! அவர் மீனாக்ஷி கல்யாணம் சொற்பொழிவு ஆற்றியபோது சொன்னது:

"சிவபெருமான் மதுரைக்கு 9 மணிக்கு வரவேண்டும். திங்கட்கிழமை 9-10.30 முகூர்த்தம். பிரமன் 6 மணி முதலே அக்னி வளர்த்து மந்திரம் சொல்லிக் கொண்டிருக்கிறார். மணி 8.55 ஆகிவிட்டது. பெண்ணைப் பெற்ற காஞ்சனமாலை பதறுகிறார் மாப்பிள்ளை வரவில்லையே என்று. மணி 9. கைலாயத்தில் இறைவன் நந்திதேவரிடம்,"நந்தி! புறப்படலாமா" என்று கேட்கிறார். இங்கே மதுரை அரண்மனைக்கு ஒரு சேவகன் ஓடியே வந்து மாப்பிள்ளை மாசி வீதியில் வந்துகொண்டிருக்கிறார் என்றான். திரும்பிப்பார்த்தால் மணவறையில் பிரம்மதேவனிடம் பேசிக் கொண்டிருக்கிறார். 9 மணிக்குக் கயிலையில் புறப்பட்டார். அதே 9 மணிக்கு மதுரைக்கு வந்து சேர்ந்தார்.

எப்படி முடியும் என்று கேட்கலாம். உலகத்தில் சூரியன் 6 மணிக்கு உதிக்கும் என்றால் மெட்ராஸ்லயும், கோயமுத்தூர்லயும், மதுரையிலயும் 6 மணிக்குத் தான் உதிக்கும். மெட்ராஸ்ல காலை 6 மணிக்கு உதிக்க ஆரம்பித்து அரக்கோணம் காட்பாடி, ஜோலார்பேட்டை என்றா போகும்?

சூரியனே இப்படி என்றால் முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கும் தலைவனான எம்பெருமான் சிவபெருமான் 9 மணிக்குக் கிளம்பி அதே 9 மணிக்கு வருவது சாத்தியமான விஷயம்தான் என்றார்.

## அபய கரம் நீட்டும் சக்கரத்தாழ்வார்



மஹா விஷ்ணுவின் திருக்கரங்களில் ஐந்து ஆயுதங்களை காணலாம். இவற்றி ல் முக்கி யமானது சக்கரம் என்று போற்றப் படுகின்ற ஸ்ரீ சுதர்ஸனம் ஆகும். திருமாலின் ஆக்ரோஷ ஸ்வரூபமான ஸ்ரீ சுதர்ஸன மூர்த்தியே திருமா லின் காத்தல் தொழிலு க்கு உறுதுணையாக இருப்பவர்.

ஸ்ரீசக்கரம் என்னும் ஸ்ரீசுதர்ஸனம் எம்பெ ரு மான் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பிரதான ஆயுதம். அவர் தம் வலத் திருக்கரத்தில் ஏந்தியுள்ள ஸ்ரீ சுதர்ஸனம், பக்தர்களைக் காக்கவும், துஷ்டர்க ளை அழிக்கவும் செய்கிறது.

அனந்தன் என்ற நாகம், கருடன், சுதர்ஸனம் இம்மூவ ரும் பகவானை ஒரு நொடி கூட பிரியாது அவ ரைத் தொழும் 'நித்யசூரிகள்'. ஸ்ரீ வைகுண்டத் தில் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் இருக்கையாகவும், பாற்கடலில் பாம்புப் படுக் கையாகவும், ஆதிசேஷனாகக் குடையாகவும், நடக்கை யில் பாது கையாகவும் இருப்பவர் அனந்தன்.

பகவான் மனதால் நினைத்தவுடன், நினை த்த இடத்திற் கு அவரை தாங்கி செல்லும் வாகனமாகவும், அவரது தாசனாகவும் திகழ்பவர் கருடன். ஸ்ரீ சுதர்ஸனாழ்வார், ஸ்ரீ கருடாழ்வார், ஸ்ரீ அனந் தாழ்வார் என இவர்கள் மூவர்கள் மட்டுமே ஸ்ரீ பகவானை ஆட்கொண்டவர்கள் என்பதால் ஏற்பட்ட சிறப்பாகும்.

சுதர்சனர் என்ற சொல்லுக்கு நல்வழி காட்டுப வர், காண்பதற்கு இனியவர் என்று பொருள். ஆனிமாத சித்திரை நட்சத்திர நாளில் சுதர்ச ன ஜெயந்தி விழா கொண்டாடுவார்கள். பெரு மா ளின் கையில் ஆயு தமாக அலங்கரிக்கும் சக்க ரத்தாழ்வார் திருமாலுக்கு இணையான வர் என்று கூறுவர். சங்கு, சக்கர, கதாபாணியான பெருமாளி ன் கரங்களில் எப்போதும் வலக்கையிலே யே இடம் பெற்று இருப்பவர் சக்கரத்தாழ் வார். ஆனால், சில இடங்களில் மாறுபட்டு ம் அமைந்திருப்பது உண்டு.

இவர் திருவாழியாழ்வான், சக்கரராஜன், நேமி, திகிரி, ரதாங்கம், சுதர்சன ஆழ்வார் என்றெல் லாம் பல பெயர்களால் அழைக்கப் படுபவர். திருமால் கோவில்களில் சக்கரத்தா ழ்வாருக்கு த் தனிச் சன்னதி உண்டு. இவர் பதினாறு, முப்பத்திரண்டு என்ற எண்ணிக்கைகளில் கைகளை உடையவர்.

பெரியாழ்வார் :

"வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு"

என்று வாழ்த்திப் பாடியுள்ளார். திருமாலுக்கு இணையான வர் என்று சுதர்சனாஷ்டகத்தில் சக்கரத்தாழ்வாரைப் போற்றியுள்ளார்.

மகாவிஷ்ணுவின் வாமன அவதாரத்தின் போது, பவித்ர தர்ப்பத்தின் நுனியில் அமர்ந்து சுக்கிரனின் கண்ணைக் கிளறி அழித்தவர் சுதர்சனர்.

இராவணனின் முன்னோர்களான மால்யவா ன், சுமாலி என்ற கொடுமையான அரக்கர்க ளை தண்டிக்க கருடாரூடனாய் இலங்கை சென்ற பகவான், சுதர்சன சக்கரத்தால் அவர்களை அழித்தார்.

சுதர்ஸனர் பல புராணங்களில் பேசப்படு கிறா ர். நரசிம்ம அவதாரத்தில் இரணிய னை வதம் செய்வதற்கு நகங்களாக இருந் தவர் சுதர்ஸனர் தான் என்கிறது புராணம்.

வாமன அவதாரத் தின் போது தானம் கொ டுக்க வந்த மஹாபலி சக்கரவர்த்தியைத் தடுத்தார் சுக்ராச்சாரியார். அவரின் எண்ண த்தைத் திசை திருப்பியவர் சக்கரத்தாழ்வார்.

காசிநகரில் கண்ணனைப் போன்று சங்கு, சக்கரம் தரித்து, "நானே உண்மையான வாசு தேவன்' என்று பௌண்டரக வாசுதே வன் என்ற வலிமைமிக்க மன்னன் கூறி வந்தான். கண்ணனை மிரட்டி போருக்கு அழைத்தான். கருடன் மேல் ஏறிச்சென்ற கண்ணன் ஆழியி னால் அவனை வென்றான்.

தேவர்கோன் முதலான சகல தேவர்களும் பரமசிவனிடமிருந்து சுதர்சன வழிபாட்டை அறிந்து சக்கரத்தாழ்வாரை வழிபட்டு திருவருளைப் பெற்றார்கள்.

கஜேந்திர மோட்ச வைபவத்தில் சக்கரத் தைக் கொண்டே கஜேந்திரனை கவ்வி பிடித்து இழுத்த முதலையை அழித்து, யானை யைக் காப்பாற்றுகிறார்.

சக்கரத்தாழ்வாரின் ஆயுதங்கள் பதினாறு. அதில் வலக்கையில் உள்ள ஆயுதங்கள் சக்கரம், மால், குந்தம், தண்டம், அங்குசம், சதாமுகாக்னி, மிஸ்கிரிசம், வேல் ஆகிய வை இடக்கையில் வைத்திருக்கும் ஆயுத ங்கள் சங்கு, வாள், பாசம், கலப்பை, வஜ்ரா யுதம்,கதை, உலக்கை,திரிசூலம் ஆகியன.

பெருமாள் கோயில்களில் எட்டு கரங்கள் கொ ண்ட சுதர்சனரையும், 16 கரங்கள் கொண்ட மூர்த்தியையும், 32 கரங்கள் கொண்ட மகா சுதர்சனரையும் காணலாம்.

பொதுவாக 8 அல்லது 16 கரங்களுடன் வீறு கொண்டு எழும் தோற்றத்துடன் அறு கோண சக்கரத்தில் சக்கரத்தாழ்வார் காட் சி தருவார். 'ஷட்கோண சக்கரம்' எனும் ஆறு கோணத்தின் மத்தியில் உக்கிர வடிவ சுதர்சனமும், திரிகோண சக்கரம் எனும் முக்கோணத்தில் யோக நரசிம்மரும் அருள்பாலிக்கின்றனர்.

சுதர்சனர் தனது 16 திருக்கரங்களில் சக்கரம், மழு, ஈட்டி, தண்டு, அங்குசம், அக்னி, கத்தி, வேல், சங்கம், வில், பாசம், கலப்பை, வஜ்ரம், கதை, உலக்கை, சூலம் என 16 வகையான ஆயுதங்களுடன் மகா சுதர்சன மூர்த்தியாக காட்சி தருகிறார்.

சுதர்சனர் வழிபாடு மிகவும் சிறப்பானதாக க் கூறப்படுகிறது. வீரத்தினை குறிக்கும் செவ்வாயின் அதிதேவதை ஸ்ரீ சுப்பிரம ணியர் ஆகும். மேலே குறிப்பிட்டுள்ள சுதர் சன அம்ஸத்தை காணும்போது முருகனுக் கும் சக்கரத்தாழ்வாருக்கும் உள்ள ஒற்றுமை புலப்படும்.

ஜோதிடத்தில் செவ்வாய் மேஷம் மற்றும் விருச்சிக ராசிகளின் அதிபதியாகத் திகழும் செவ்வாய் கால புருஷனுக்கு லக்னாதிபதியா கவும் ஆயுள் பாவமான அஷ்டமாதிபதியாக வும் விளங்குகிறார்.

நோய், கடன் தொல்லைகள், எதிரிகள், வழக்கு கள் போன்றவற்றால் மீளமுடியாத பிரச்னைக ளை சந்தித்துவருபவர்கள் ஸ்ரீ சக்கரத்தாழ்வா ரை வழிபடுவது, சுதர்சனா ஷ்டகம் பாராயணம் செய்வது, சுதர்சன ஹோமம் செய்வது போன்றவை சிறந்த பயனளிக்கும்.

மேலும் புற்றுநோய் போன்ற உயிர்க்கொல்லி நோய் உடையவர்கள் சக்கரத்தாழ்வாரை வணங்கி வருவதால் நோய் நீங்கி மரணபயம் போகும்.

மனிதனின் நிம்மதியைப் பாதிப்பவை கடன், வியாதி, எதிரி தரும் துன்பம் அபிசார தோஷ ங்கள் எனப்படும் பில்லி, சூனியம் போன்றவற் றால் ஏற்படும் உபா தைகளை முற்றிலும் நீக்கி சந்தோஷத்தை அளிப்பவர். இவர் கல்வியில் தடையை நீக்கி இடைவிடாது தொடரும் கல்வி யோகத்தைத் தருபவர் என்பது நம்பிக்கை.

## குமரி மேற்கு மாவட்ட இளைஞர் பட்டாளங்களின் பயணம்



திமுக தென் மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்திற்கான, குமரி மேற்கு மாவட்ட இளைஞர் பட்டாளங்களின் பயணத்தை நேற்று காலை அமைச்சர் மனோ தங்கராஜ் துவக்கி வைத்தார்.

## முன்னாள் முதல்வர் கருணாநிதி சிலை



தஞ்சை மாவட்டம் செங்கிப்பட்டி அருகே முன்னாள் முதல்வர் கருணாநிதி சிலையை துணை முதல்வர் உதயநிதி திறந்து வைத்தார்.

## பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



சிவகங்கை - குன்றக்குடியில் "நலம் காக்கும் ஸ்டாலின்" முகாம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை குன்றக்குடி அடிகளார் முன்னிலையில் அமைச்சர்கள் பெரியகருப்பன், மா.சுப்பிரமணியன் வழங்கினர்.

## இலவச வீட்டுமனை பட்டா



பூந்தமல்லி காட்டுப்பாக்கத்தில் நேற்று நடந்த விழாவில் இலவச வீட்டுமனை பட்டாக்களை கலெக்டர் பிரதாப் முன்னிலையில் அமைச்சர் நாசர் வழங்கினார். உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்எல்ஏ உள்ளார்.

## Kalaignar Sports Kits



திருச்சியில் நேற்று நடந்த விழாவில் 10 மாவட்டங்களில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு வார்டுகளுக்கு 5742 Kalaignar Sports Kits-களை துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்.

## மகளிர் சுய உதவி குழு சகோதரி களுக்கு வங்கி கடன்



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடந்த விழாவில் மகளிர் சுய உதவி குழு சகோதரி களுக்கு வங்கி கடன் இணைப்புகளையும், 38 நபர்களுக்கு கால்நடை பராமரிப்பு கடன்களையும் துணை முதல்வர் உதயநிதி வழங்கினார். அமைச்சர்கள் நேரு, அன்பில்மகேஷ்பொய்யாமொழி உடன் உள்ளனர்.

## நகர்ப்புற வார்டுகளுக்கான விளையாட்டு உபகரணங்கள்



திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் நடந்த விழாவில், நகர்ப்புற வார்டுகளுக்கான விளையாட்டு உபகரணங்களை கலெக்டர் சிவசவுந்தரவல்லி வழங்கினார்.

## தன்னார்வலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம்



பெரம்பலூரில் குழந்தை திருமணம் இல்லாத மாவட்டத்தை உருவாக்கிடும் வகையில், கிராம அளவிலான குழந்தை திருமண தடுப்புகுழு உறுப்பினர்கள் தன்னார்வலர்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் கலெக்டர் மிருணாளினி ஆலோசனை வழங்கினார்.

## மக்களிடம் கருத்து கேட்பு



தூத்துக்குடியில் பாஜக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு உறுப்பினர் கே.எஸ்.ராதாகிருஷ்ணன் தலைமையில் மக்களிடம் கருத்து கேட்டனர்.

## திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவினர் சந்தித்து கருத்து கேட்டனர்



சேலம், கள்ளக்குறிச்சி மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு துறையினர் மற்றும் பொதுமக்களை கனிமொழி தலைமையிலான திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவினர் சந்தித்து கருத்து கேட்டனர்.

## 6 பகுதிகளில் வழித்தட நீட்டிப்பு செய்யப்பட்ட பேருந்து



குன்னம் சட்டமன்ற தொகுதியில் 6 பகுதிகளில் வழித்தட நீட்டிப்பு செய்யப்பட்ட பேருந்துகளை அமைச்சர் சிவசங்கர் நேற்று தொடங்கி வைத்தார். கலெக்டர் மிருணாளினி உடன் உள்ளார்.

## மண்டல அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று கலெக்டர் இளம்பகவத் தலைமையில் சட்டமன்ற தேர்தல் பணியில் ஈடுபட உள்ள மண்டல அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது.




## மாணவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்



நீலகிரி மாவட்டத்தில் நடந்த இளைஞர் இலக்கியத் திருவிழாவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை மாவட்ட நூலக அலுவலர் கிளமெண்ட் பரிசு வழங்கினார்.

## தமிழ்நாடு தலைகுனியாது




மீண்டும் வா தலைவனே... வென்று வா ஸ்டாலினே! தமிழ்நாடு தலைகுனியாது என்ற தலைப்பில், அம்பத்தூரில் நடந்த திமுக கூட்டத்தில் எம்.பி.க்கள் டி.ஆர்.பாலு, கனிமொழி சோமு, அமைச்சர் சேகர்பாபு, ஜோசப் சாமுவேல் எம்எல்ஏ பேசினர்.

## மருத்துவமனை கூடுதல் கட்டடங்கள் திறப்பு



அருப்புக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் ரூ.30.35 கோடி செலவில் 217 படுக்கைகளுடன் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மருத்துவமனை கூடுதல் கட்டடங்களை முதலமைச்சர் ஸ்டாலின் காணொலி வாயிலாக துவக்கி வைத்தார். அங்கு அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் குத்து விளக்கேற்றி மருத்துவ சேவையை துவக்கி வைத்தார்.

# சுற்றுலா: வெள்ளிப் பனிமலைகளுக்கு இடையே ஒரு கனவுப் பயணம்!

இமாச்சலப் பிரதேசத்தின் தலைநகர் சிம்லா ஒரு சிறந்த சுற்றுலாதலமாக விளங்குகிறது. இது ஒரு சிறந்த மலைவாச ஸ்தலமாகும். குளுகுளு வெப்பநிலை பனிப்பொழிவு இயற்கை காட்சிகள் சாகச நடவடிக்கைகள் இவற்றிற்கு பெயர் பெற்றது.

சிம்லாவில் இருந்து 23 கிலோமீட்டர் தொலைவில் விமான நிலையம் உள்ளது. இதற்கு ஜிப்பர் டி விமான நிலையம் என்று பெயர். கல்கா வரை ரயிலில் சென்று அங்கிருந்து டோய்ட்ரெயின் மூலம் சிம்லா செல்லலாம் டிசம்பர் முதல் பிப்ரவரி வரை சிறந்த நேரமாகும்.

மால் ரோட்டில் பல வகையான உணவகங்கள் உள்ளன. இங்குள்ள இந்தியன் காபி மிகவும் பிரசித்தி பெற்றது சிம்லா மலைகளின் ராணி என அழைக்கப்படுகிறது. இங்குள்ள வெப்பநிலை மைனஸ் 20 டிகிரி இருப்பதால் எங்கு பார்த்தாலும் வெள்ளிமலை போன்று காட்சி அளிக்கிறது. பழங்குடி மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியாகும் சிம்லாவில் இருந்து 19 கிலோமீட்டர் தொலைவில் உள்ள குர்பி மலை சிறந்த சுற்றுலாத் தலமாகும்.

இங்குள்ள செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ள ஐஸ் கட்டி மைதானம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விளையாடி மகிழ்கிறார்கள். குலு பகுதியில் புகழ்பெற்ற பிஜிலி மகாதேவ் சிவன் கோவில் உள்ளது இந்த சிவலிங்கம் பணியால் மூடப்பட்டு இருக்கும் எங்கு பார்த்தாலும் பணி மூடிய மலைகள் பிரமிக்க வைக்கும் ஏரிகள் கலர் கலரானதாவரங்கள் நிறைந்து காணப்படும் சிம்லா தன் அழகிய வசீகரத்தால் அனைவரையும் கட்டிப்போட்டு வைக்கிறது.



1. மால் ரோடு

இது மலை நகரத்தின் ஹாட்ஸ்பாட் பல காபி பார்கள் உணவகங்கள் ஷோரூம்கள் தங்கும்விடுதி பல்பொருள் அங்காடி கைவினைப் பொருட்கள் கடைகள் என ஏராளமாக உள்ளன. இதன் அருகில் காளி கோவில் டவுன்ஹால் கேட்டி தியேட்டர் ஆகியவை அருகில் உள்ளன.

இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் அட்வான்ஸ் ஸ்டடிஸ் சிம்லாவில் உள்ள மிகவும் பிரபலமான சுற்றுலா பகுதிகளில் எதுவும் ஒன்று. 1884 முதல் 18ரை இந்தியன் வைஸ்ராய் லார்ட் பெரின் இல்லமாக கட்டப்பட்டது. மேம்பட்ட படிப்பு மற்றும் ஆராய்ச்சிக்கு சிறந்த இடமாக விளங்கி வந்தது. தற்போது ஜனாதிபதியின் ஓய்வு கால இல்லமாக செயல்பட்டு வருகிறது

2. தி ரிட்ஜ்

திரிட்ஜ் சிம்லாவின் மையப்பகுதி என கூறலாம். பிரபலமான சுற்றுலா தலமாக விளங்கி வருகிறது. மால் ரோட்டை இணைக்கும் பகுதியாகும். இதனை சொர்க்க பூமி என அழைக்கின்றனர். இயற்கை காட்சிகள் இங்கு ஏராளமாக உள்ளதால் இந்த இடத்திலிருந்து கண்டுகளிப்பதற்கு மிகவும் ரம்யமாக இருக்கும்.

3. கோடை மலைகள்

சிம்லாவில் இருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஒரு அழகிய கிராமம். இந்த கிராமம் மலைகள் மற்றும் பசுமையான தாவரங்களால் மூடப்பட்டு இருக்கும் ஏழு மலைகள் ஒன்றாக இணைந்த பகுதி. சம்மர் ஹில்லின் பிரம்மாண்டம் என அழைக்கப்படுகிறது. சிம்லாவின் சிறந்த சுற்றுலா தலமாகவும் உள்ளது.

4. கல்கா ரயில் பயணம்

இதுவும் ஒரு சிறந்த சுற்றுலா பகுதியாக உள்ளது. ஹரியானாவில் உள்ள கல்காவிலிருந்து சிம்லாவுக்கு ரயிலில் பயணம் செய்வது ஒரு தனி அனுபவம். இரண்டுபுறமும் அழகிய இயற்கை காட்சிகளை கண்டு ரசித்து கண்டு செல்லலாம். போகும் இடங்களில் சோலன் தரம்பூர் சம்மர் ஹில் தாராதேவி போன்ற இடங்களை பார்க்கலாம். இந்தப் பயணத்தில் 864 பாலங்கள் 919 ஆற்று படுகைகள் 102 சுரங்கப்பாதைகள் இவற்றை கண்டு ரசிக்கலாம்.

5. ஜூஹூ மலை

8000 அடி உயரமுள்ள மலை, சுற்றுலா பயணிகளின் பிரியமான இடமாக உள்ளது. ஜக்கு கோவிலில் 108 அடி உயரமுள்ள பிரம்மாண்டமான அனுமான்சிலை உள்ளது. யாத்திரிகர்களுக்கு ஏற்ற இடம் ஆகும். இது ஒரு குறுகிய நடைபயணம் கொண்ட பகுதியில் அமைந்துள்ளது.

6. தாரா தேவி கோவில்

நீங்கள் எந்த மதத்தை சார்ந்தவராக இருந்தாலும் இந்த கோவிலில் கண்டிப்பாக பார்வையிட வேண்டும். மலை மீது அமைந்துள்ள இந்த கோவில் 250 ஆண்டுகள் பழமையான கோவில். துர்கா தேவியின் ஒன்பது சகோதரிகளில் ஒருவரான தாராதேவி ஆட்சிபுரியும் இடமாகும். தாராதேவி சிலை மரத்தால் ஆனது நேர்த்தியான கட்டடக்கலை உடன் அமைந்துள்ளது பாராட்டத்தக்கது.

7. சாட்விக் நீர்வீழ்ச்சி

சிம்லாவில் உள்ள அழகிய நீர்வீழ்ச்சி 86 மீட்டர் உயரத்திலிருந்து கீழே தண்ணீர் விழுகிறது. இந்த நீரானது கீழே உள்ள பள்ளத்தாக்கில் சேர்கிறது. தேவதாரு பைன் மரங்கள் அதிகம் உள்ள பகுதி ஆகும். இந்த இடத்திற்கு ஜூன் முதல் செப்டம்பர் வரை செல்வதற்கு உகந்த இடமாகும்.

8. சிம்லா அருங்காட்சியகம்

சிம்லா ஸ்டெம் மியூசியம் என அழைக்கப்படுகிறது. சிறந்த லைப்ரரி மற்றும் விரிவான மைதானம் உள்ள பகுதி கட்டிடக்கலைக்கு பெயர் பெற்றது. பிரிட்டிஷ் கட்டடக்கலையில் அமைப்பில் அழகாக அமைந்துள்ளது. பழங்கால கலைப்பொருட்கள் சிற்பங்கள் ஓவியங்கள் கைவினைப் பொருட்கள் ஏராளமாக இந்த அருங்காட்சியகத்தில் உள்ளது.

# வேலைவாய்ப்பு கார்னர்

## ரயில்வேயில் விளையாட்டு வீரர்களுக்கு வேலை

பணி: ஸ்போர்ட்ஸ் பெர்சன் (ஸ்போர்ட்ஸ் கோட்டா: 2025-26). மொத்த காலியிடங்கள்: 54.

விளையாட்டு பிரிவுகள் வாரியாக காலியிடங்கள் விவரம்:

அதலெடிக்ஸ்- 7, சைக்கிளிங்-3, செஸ்-2, கிரிக்கெட்-4, பேட்மிண்டன்-2, வில்வித்தை-3, பளு தூக்குதல்-4, ஹாக்கி-5, துப்பாக்கி சுடுதல்-1, நீச்சல்-2, வாட்டர் போலோ-4, வாலிபால்-7, கோகோ-4, டைவிங்-1, கால்பந்து-3, டென்னிஸ்-1, கோல்ப்-1.

வயது வரம்பு: 01.01.2026 தேதியின்படி 18 முதல் 25க்குள் இருக்க வேண்டும்.

சம்பளம்: ரூ.5,200- ரூ.20,200.

விண்ணப்பதாரரின் விளையாட்டு தகுதி மற்றும் விளையாட்டு சாதனைகள், நேர்முகத்தேர்வு ஆகியவற்றின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் பணிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.

தகுதி: பிளஸ் 2 தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது 10ம் வகுப்பு அல்லது ஐடிஐ படித்திருக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட கல்வித்தகுதியுடன் காலியிடம் ஏற்பட்டுள்ள விளையாட்டுப் பிரிவுகள் ஏதாவது ஒன்றில் தேசிய/மாநில/பல்கலைக்கழக அளவிலான போட்டிகளில் விளையாடி குறைந்தது மூன்றாவது இடம் பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் பெற்றிருக்க வேண்டிய விளையாட்டு தகுதிகள் பற்றிய கூடுதல் விவரம் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. பிளஸ் 2 தேர்ச்சியுடன் ஆங்கிலத்தில் சுருக்கெழுத்து எழுதும் திறன் மற்றும் டைப்பிங் படித்தவர்களுக்கு கூடுதல் தர ஊதியம் வழங்கப்படும்.

www.rrcser.co.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

கட்டணம்: பொது/ஓபிசி/ பொருளாதார பிற்பட்டோர் ஆகியோருக்கு ரூ.500/-. எஸ்சி/எஸ்டி/பெண்கள்/ சிறுபான்மையினருக்கான கட்டணம் ரூ.250/-. இதை ஆன்லைனில் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்க கடைசி நாள்: 09.02.2026.

# பிப்ரவரி மாதம் (2026) வார ராசிபலன்

## 8.2.2026 முதல் 14.2.2026 வரை

### மேஷம்

இந்த வாரம் எதிர்பார்த்த இடங்களில் இருந்து நல்ல செய்தி வரும். உங்கள் பணம் உங்களிடம் வந்து சேரும். தந்தையின் உடல் நிலையில் கவனம் தேவை. எந்த சந்தர்ப்பத்திலும் கோபமாகாமல் தேவையற்ற பேச்சுகளைக் குறைப்பது உங்களுக்கு நன்மையைக் கொடுக்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். குல தெய்வ வழிபாடு நற்பலன்களைத் தரலாம்.

மன தைரியம் உண்டாகும். வாழ்க்கைத் துணையால் லாபங்கள் ஏற்படும். தந்தையின் உடன் பிறந்தோரால் நல்ல செய்தி வந்து சேரும். புத்திரர்களால் சில சங்கடங்களைச் சந்திக்க நேரிடும். வேலையில் இடமாற்றம் உண்டாகும். மந்த நிலை விலகும். தொழில் தொடங்குவதற்கான சந்தர்ப்பங்கள் வந்து சேரும். திடீர் பிரயாணம் ஏற்படும், அதன் மூலம் செலவுகள் ஏற்படலாம்.

சிலர் புதிய வண்டி வாகனங்கள் வாங்குவீர்கள். அரசாங்கத்திடம் இருந்து சிறு தொந்தரவுகள், பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு.

பெண்கள் பொறுமையாக இருக்க வேண்டிய நேரம் இது.

### ரிஷபம்

இந்த வாரம் சமயோஜித புத்தியுடன் செயல் பட நன்மைகள் கிடைத்தேறும். எந்த சூழ்நிலையிலும் மன உறுதியுடன் செயல்படுவீர்கள். நீண்ட நாட்களாக வராமல் இருந்த நல்ல செய்தி வந்து செரும். குடும்பத்தில் அமைதி நிலவும். அரசாங்க வழியில் சகாயம் கிடைக்கும். வாழ்க்கைத் துணையால் லாபம் கிடைக்கும். புத்திரர்களால் சில சங்கடங்களைச் சந்திக்க நேரிடும்.

வாழ்க்கைத் துணையிடம் கருத்து வேறுபாடுகள் வந்தாலும் பின்பு உங்கள் மனதைப் புரிந்து கொண்டு சமாதானம் ஆகி விடுவார்கள். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளைத் மிகுந்த கவனமாக செய்ய வேண்டும். மேல் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். சவால் மிகுந்த வேலைகளை முடித்து மேல் அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுவீர்கள். தொழில் துறையினருக்கு மந்தமான நிலைமை இருந்தாலும் தனித்திறமையால் எதையும் சமாளிப்பார்கள்.மேலிடத்தில் இருந்து நெருக்கடி அதிகரிக்கும்.

### மிதுனம்

இந்த வாரம் அடிக்கடி உடல் நலம் பலகீனப்பட்டாலும் பின்பு சரியாகிவிடும். பண நெருக்கடி இருந்து கொண்டே இருக்கும். ஆனால் கடைசி கட்டத்தில் சாமர்த்தியமாக சமாளித்து விடுவீர்கள். தடுமாற வைக்கும் சோதனைகள் கூட உங்களின் தெய்வ பக்தியால் பகலவனை கண்ட பனி போல் விலகி விடும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும், வாழ்க்கைத் துணையால் லாபங்கள் ஏற்படும். தந்தையின் உடன் பிறந்தோரால் நல்ல செய்தி கிடைக்கும். அரசாங்க வழியில் சகாயம் கிடைக்கும்.

புத்திரர்களால் சில சங்கடங்களைச் சந்திக்க நேரிடும். எதிர்பாராத தன லாபம் கிடைக்க வாய்ப்புண்டு. மனைவி வழி உறவுகளால் லாபங்கள் கிடைக்கும். அரசு வேலைக்குக் காத்து கொண்டிருப்பவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பணிச்சுமை குறையும். சக ஊழியர்கள் உங்களுக்கு பணியில் உதவிக்கரம் நீட்டுவார்கள். மேலிடத்தில் இருந்தும் மனதிற்கு இதமான செய்திகளே வந்து சேரும். தொழில் துறையினர் தைரியமாக புது தொழில்கள் ஆரம்பிக்கலாம். பொருளாதார உதவிகளும் கிடைக்கும். .

### கடகம்

இந்த வாரம் சகோதர வழியில் சங்கடங்கள் வந்து மறையலாம். நிதானமாகவும், பொறுமையாகவும் இருக்க வேண்டிய காலம் இது. பணப் புழக்கம் இருந்தாலும் பண நெருக்கடி வந்து போகும். இரவுப் பயணத்தைத் தவிர்ப்பது நல்லது. மறைமுக எதிரிகளால் ஏற்படும் ஒவ்வொரு பிரச்சனையும் உங்களுக்கே நன்மையைக் கொடுக்கும். குடும்பத்தில் யாருக்கும் வாக்கு கொடுக்காமல் தவிர்க்கவும். அரசாங்க வழிகளில் ஒத்துழைப்பு கிடைக்கும். உஷ்ண சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், கண் பிரச்சனைகள் வந்து போகும். புத்திரர்கள் இடத்தில் கவனத்தைச் செலுத்த வேண்டிய காலகட்டம் இது. பூர்வீக சொத்துக்களால் சிறு சிறு பிரச்சனைகள் தோன்றினாலும் பின் அது லாபத்தைக் கொடுக்கும். சில நேரங்களில் மனம் ஒரு நிலை படாமல் இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு மேன்மையான காலகட்டம் இது. பண வரத்து திருப்தி தரும். ஆனால் எதிர்பார்த்த அளவு இருப்பது கடினம். பணி நிமித்தமாக வெளியூர் செல்ல வேண்டி வரலாம். தொழில் துறையினருக்கு ஏற்ற இறக்கமின்றி இருக்கும்.

### சிம்மம்

இந்த வாரம் உங்கள் வாழ்க்கைத் துணை உங்களுக்கு எப்போதும் ஆதரவாக இருப்பார்கள். தந்தையின் உடல்நிலையில் கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது. குடும்ப ஒற்றுமையில் சிறு சலனங்கள் ஏற்படலாம். அதனால் கவனமுடன் நடக்கவும். வாழ்க்கைத் துணையிடம் கருத்து வேறுபாடு வராமல் பார்த்துக் கொள்ளவும். குடும்ப உறுப்பினர்களை கண்டிக்கும் போது தேவையில்லாத வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் நிதானமாகப் பேசவும். அடிக்கடி மனக் குழப்பங்கள் வந்து மறையும். புத்திரர்கள் வழியில் கருத்து வேறுபாடுகள் வந்தாலும் உங்களின் அன்பான அணுகு முறையால் எல்லாரையும் திருத்திவிடுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு பணி நெருக்கடி இருக்கும். வேலை செய்யும் இடத்தில் இருந்த பிரச்சனைகள் குறையும். அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம்.

தொழில் துறையினர் புது முதலீடுகள் செய்யாமல் நிதானமாக இருக்கவும். போட்டிகள் குறையும். புதிய ஆர்டர்கள் பெறுவதில் சிந்தனை செலுத்துவீர்கள். பெண்கள் தடைபட்ட காரியங்களை செய்து முடிக்க மீண்டும் முயற்சிகள் மேற்கொள்வீர்கள். உற்சாகம் உண்டாகும். மாணவர்கள் அதிகம் கண் விழித்துப் படிக்காமல் உடல் நலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவும்.

### கன்னி

இந்த வாரம் உங்கள் இல்லங்களில் சுபமான நிகழ்ச்சிகள் இனிதே நடைபெறும். சில சமயங்களில் அசாத்திய தைரியத்தால் சில முடிவுகளை எடுப்பீர்கள். அது உங்களுக்கே பாதகமாகி விடும். அதனால் நிதானமாக இருப்பது நன்மையாகும். குடும்பத்தில் திருமணமாகாதவர்களுக்கு நல்ல வரன் அமையும். அந்த வரனை முடிக்கும் போது உறுதியான நிச்சயம் செய்து கொள்ளவும்.

தொடர்ந்து ஏற்படும் சுபச் செலவுகளால் பண நெருக்கடி இருந்து கொண்டே இருக்கும். தேவையற்ற பேச்சுகள் புது எதிரிகளை உருவாக்கும். மனைவி வழியில் அனுகூலம் கிடைக்கும். உதவியும், ஒத்துழைப்பும் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது. தங்களது சாமர்த்தியமான பேச்சால் எல்லாவற்றையும் திறம்பட செய்து முடித்து பாராட்டு கிடைக்க பெறுவார்கள்.

தொழில் துறையினர் வளர்ச்சியை காண்பார்கள். முன்பு இருந்ததை விட முன்னேற்றம் காண்பீர்கள். வியாபாரம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரிடும்..

### துலாம்

இந்த வாரம் வழக்குகள் சார்ந்த எதிலும் சற்று கூடுதல் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் சில சங்கடங்கள் வந்தாலும் உங்கள் சாமர்த்தியத்தால் எதையும் சமாளித்து விடுவீர்கள். கடன் பிரச்சினை படிப்படியாகக் குறையும். புத்திரர்களின் செயல்பாடுகளை கண்ணும் கருத்துமாக கவனிக்க வேண்டிய நேரம். அவர்களின் செயல்பாடுகள் உங்களுக்கு சங்கடத்தையோ, கோபத்தையோ ஏற்படுத்தினால் எக்காரணம் கொண்டும் அவர்கள் மனம் புண்படாமல், அரவணைத்து ஆலோசனை வழங்கி நல்வழி படுத்தவும்.

உத்தியோகஸ்தர்களுக்கு பணிச்சுமை குறையும். அரசாங்க வேலைகளுக்குக் காத்துக் கொண்டிருந்தவர்களுக்கு அரசாங்க உத்தியோகம் கிடைக்கும். தொழில் துறையினர் மேன்மையான நிலையை அடைவார்கள். மனக் கவலை தோன்றி மறையும். ஆனால் லாபம் கிடைக்க பெறுவீர்கள். புதிய ஆர்டர்கள் வாங்குவது தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். பெண்களுக்கு எந்த காரியத்தையும் கூடுதல் கவனத்துடன் செய்வது நல்லது.

அடுத்தவர்களுக்கு உதவி செய்யும் போது கவனம் தேவை. மாணவர்களின் கல்வித் திறன் அதிகரிக்கும்.

### விருச்சிகம்

இந்த வாரம் எந்தக் காரியத்தையும் அவசரமும் படபடப்பும் இல்லாமல் செயல்படவும். எதிர்பாராத செலவுகளுக்கு வாங்கிய கடன்களால் மனச் சங்கடங்களுக்கு ஆளானாலும் உங்களின் நாணயமான குணத்தினால் சமாளித்து விடுவீர்கள். அடிக்கடி மனச்சோர்வு ஏற்பட்டாலும், உங்களை நீங்களே சுறுசுறுப்பாக்கிக் கொள்வீர்கள். நீங்கள் துன்பமான தருணத்தில் கூட மற்ற விஷயங்களில் கவனம் செலுத்தி உங்கள் மனதை உற்சாகப்படுத்திக் கொள்வீர்கள். குடும்பத்தில் வாழ்க்கைத் துணையிடம் கருத்து வேறுபாடு வரும் சூழ்நிலை உருவாகும்.

கவனமுடன் இருக்கவும். தந்தை வழி உறவினர்கள் மறைமுகத் தொல்லைகள் கொடுப்பார்கள். உங்கள் பொறுமையான குணத்தினால் சமாளித்துவிடுவீர்கள்.

சகோதர சகோதரி வழிகளில் ஒத்துழைப்பும், உதவிகளுக் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கும். புதிய பதவி கிடைக்கலாம். சிலர் கட்டளையிடுகின்ற பதவி கிடைக்க பெறுவார்கள். எதிர்பார்த்த பண உயர்வு கிடைக்கப் பெறுவீர்கள்.

தொழில் துறையினர் புது முதலீடுகளைத் தவிர்க்கவும். தொழிலில் முன்னேற்றம் காண வாய்ப்புகள் வந்து சேரும்.. நிதானமாக பேசுவதன் மூலம் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும்.

### தனுசு

இந்த வாரம் சில சந்தர்ப்பங்களில் மனச் சோர்வு ஏற்படலாம். பணப் புழக்கம் நெருக்கடியாக இருக்கும். எந்தக் காரியத்திலும் அவசரமும் படபடப்பும் இல்லாமல் செயல்படவும். மங்கல காரியங்களுக்கு, செலவுகளுக்கு வாங்கிய கடன்களால் மனச் சங்கடங்களுக்கு ஆளானாலும் உங்களின் நாணயமான குணத்தினால் சமாளித்து விடுவீர்கள்.

குடும்பத்தில் புத்திரர்கள் மேன்மை பெறுவார்கள். நீங்கள் நேர்மையாக பேசும் பேச்சு சிலருக்கு பிடிக்காமல் போகாலாம்.

இடம், பொருள் பார்த்துப் பேசுவது நல்லது. தாயாரின் உடல் நிலையில் கவனமாக இருக்கவும். புத்திர வழியில் மதிப்பும், செல்வாக்கும் உண்டாகும். தாய் வழி உறவினர்களுக்கு பண உதவி செய்ய நேரிடும். சில நேரங்களில் தாயாரின் சொல் உங்களை புண்படுத்தக்கூடும்.

அதைப்பற்றி கவலை கொள்ள வேண்டாம். தொழில் துறையினருக்கு லாபம் நஷ்டமின்றி தொழில் இயங்கும். முக்கிய முடிவுகளை தற்காலிகமாகத் தள்ளிப் போடுவது நல்லது.

புது முதலீடுகளைத் தவிர்க்கவும். இரவு நீண்ட தூர பயணத்தைத் தவிர்க்கவும்..

### மகரம்

இந்த வாரம் நீங்கள் எதிரியாக நினைத்தவர் கூட உங்களிடம் உறாவாடுவார்கள். புது வீடு அமைய வாய்ப்புள்ளது. வார்த்தைகளை அளந்து பேசுவது நலமாகும். சிந்தித்து செயல்படுத்தும் ஒவ்வொரு காரியமும் உங்களுக்கு வெற்றியைக் கொடுக்கும். புது வாகனங்கள் அமையும். சாதாரண விஷயங்களுக்குக் கூட தந்தையுடன் கருத்து வேறுபாடு வரலாம். குடும்பத்தில் மனைவி வழியில் உள்ள உறவினரின் திருமண காரியங்களுக்கு உதவி செய்யும் சூழ்நிலை ஏற்படும்.

சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும். அந்நிய தேசத்தில் இருந்து வரும் நல்ல செய்தி மன மகிழ்வைக் கொடுக்கும். தொழில் துறையினர் முன்னேற்றாத்தைக் காண்பார்கள். வியாபாரம் எதிர்பார்த்த அளவு வேகமாக நடக்காவிட்டாலும் லாபம் குறையாமல் இருக்கும். புதிய ஆர்டர்கள் கிடைப்பது தாமதப்படும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கக்கூடிய வாய்ப்புள்ளது. வேலையில்லாமல் தடுமாறு பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். வருமானம் அதிகரித்து பணப் புழக்கம் இருக்கும்.

பெண்களுக்கு சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். மற்றவர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.

### கும்பம்

இந்த வாரம் ஒவ்வொரு முடிவு எடுக்கும் போதும் பலமுறை சிந்தித்துச் செயல்படுங்கள். விவசாய நிலங்கள் வாங்க இது உகந்த காலம். பூர்வீக சொத்துகளால் சிறு பிரச்சனைகள் வந்து போகும். சுபச் செலவுகள் எதிர்பாராமல் வந்து கொண்டே இருக்கும். இரு சக்கர வாகனத்தில் தலைக் கவசம் இல்லாத பயணம் வேண்டாம். அதேபோல் கார்களில் செல்லும் போது சீட் பெல்ட் அவசியம் அணிந்து கொள்ளவும். உங்கள் குடும்பத்திற்கு ஆன்மீக அன்பர்களின் வழிகாட்டுதலும், ஒத்துழைப்பும் கிடைக்கும்.

தெய்வ பக்தியால் உங்கள் முன்னேற்றம் அதிகரிக்கும். உங்களின் பேச்சு குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் பெறும். புத்திர வழியில் சந்தோசங்களும், மதிப்பும் கிடைத்தாலும் சில சமயங்களில் சில சங்கடங்கள் ஏற்படலாம். புது வீடு கட்ட ஆரம்பிக்கலாம். பணப் புழக்கம் அளவான முறையிலேயே இருக்கும். சகோதர குடும்பங்களுக்கு சுப காரியங்களுக்கு உதவி செய்யும் சூழ்நிலை உருவாகும். உத்தியோகஸ்தர்களுக்கு பணிச் சுமை அதிகரித்தாலும் அதை சுமையாக நினைக்காமல் அர்ப்பணிப்புடன் செயல்படுவார்கள்.

### மீனம்

இந்த வாரம் பணப் புழக்கம் வரவுக்கும் செலவுக்கும் சரியாக இருக்கும். தகுதிக்குக் குறைவான நபர்கள் கூட உங்களைச் சீண்ட பார்ப்பார்கள். மங்கல காரியங்களையும், சுப காரியங்களையும் முன்னின்று செய்வீர்கள். பூர்வீகச் சொத்துக்கள் உங்களுக்கு நன்மையைக் கொடுக்கும். விடுபட்டுப் போன பழைய சொந்தம் மீண்டும் மலரும். புத்திர வழியில் மகிழ்ச்சியான செய்திகள் கிடைக்கும். முகத்தில் பொலிவும், புத்துணர்ச்சியும் இருக்கும். குடும்பத்தில் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த பூர்வீக சொத்துக்களின் பிரச்சனைகள் நீங்கும். புத்திர வழிகளில் புகழும் செல்வாக்கும் கிடைக்கும். தந்தையின் பாராட்டுதலைப் பெறுவீர்கள். பெண் நட்புகளிடம் கவனமாகப் பழகுவது நல்லது. வாழ்க்கைத் துணையிடம் அனுசரித்து போவது நன்மை தரும். அந்நிய நபர்கள் எதிர்பாராத உதவிகளை செய்து உங்களை சந்தோஷத்தில் ஆழ்த்துவார்கள். உத்தியோகஸ்தர்கள் மேன்மை அடைவார்கள். மேல் அதிகாரிகளை பகைத்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நல்லது. திறமையான செயல்பாட்டால் பாராட்டு கிடைக்கும். தொழில் துறையினர் முன்னேற்றத்தைக் காண்பார்கள். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கலாம்.

# சட்டவிரோதமாக தங்கியிருக்கும் வெளிநாட்டினரை கண்டுபிடிக்க சிறப்பு முகாம்: அமைச்சர் ஜி.பரமேஸ்வர்



**பெங்களூரு, பிப்.8:**

கர்நாடகத்தில் சட்ட விரோதமாக தங்கியிருக்கும் வெளிநாட்டினரை கண்டுபிடிக்க மாநிலம் தழுவிய சிறப்பு தேடுதல் முகாம் நடத்த காவல் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று அந்த மாநில உள்துறை அமைச்சர் ஜி. பரமேஸ்வர் தெரிவித்தார்.

இதுகுறித்து பெங்களூரில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

கர்நாடகத்தில் சட்ட விரோதமாக தங்கியிருக்கும் வங்கதேசத்தவர்கள் மற்றும் வெளிநாட்டினரை கண்டுபிடிக்க மாநிலம் தழுவிய சிறப்பு தேடுதல் முகாம் நடத்த காவல் துறைக்கு உத்தரவிட்டுள்ளேன். கர்நாடகத்தில் சட்ட விரோதமாக தங்கியிருக்கும் வங்கதேச மக்கள் குறித்த எண்ணிக்கை தொடர்பாக வெவ்வேறு தரவுகள் உள்ளன.

கர்நாடகத்தில் வங்கதேசத்தை சேர்ந்த 20 லட்சம் பேர் இருப்பதாக சிலர் கூறிவருகிறார்கள். எங்கள் ஆவணத்தின்படி வங்கதேசத்தை சேர்ந்த 370 பேரை அந்நாட்டுக்கு வெளியேற்றியுள்ளோம். எத்தனை பேர் இருக்கிறார்கள் என்ற எண்ணிக்கையைவிட கர்நாடகத்தில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் வங்கதேச குடிமக்களை கண்டறிந்து, அவர்கள் நாட்டுக்கு வெளியேற்ற வேண்டியது நமது கடமை.

பெங்களூரில் செயல்பட்டு வரும் வெளிநாட்டினர் மண்டல பதிவு அலுவலகத்தின் ஆவணங்களின்படியும் கர்நாடகத்தில் அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டினர் தங்கியிருப்பதாக தெரிவிக்கவில்லை. வெளிநாட்டினர் சட்ட விரோதமாக தங்குவது குற்றமாகும். எனவே, அவர்களைக் கண்டுபிடித்து, அவரவர் நாட்டுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள். இதற்காகவே மாநிலம் தழுவிய சிறப்பு தேடுதல் முகாம் நடத்த காவல் துறைக்கு உத்தரவிட்டுள்ளேன்.

அதேபோல, போதைப்பொருள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, பெங்களூருவில் செயல்படும் ரசாயனத் தொழிற்சாலைகளில் ஆய்வு செய்து, அவற்றின் செயல்பாடுகள் மற்றும் வர்த்தக உரிமங்கள், உற்பத்திப்பொருகளை ஆவணப்படுத்துமாறு காவல் துறைக்கு உத்தரவிட்டுள்ளேன்.

வேதிப்பொருள்களை உற்பத்தி செய்யும் ஆலைகளுக்கு சென்று, ஆய்வு செய்யும் பணியை காவல் துறை அதிகாரிகள் ஏற்கெனவே தொடங்கியுள்ளனர். அந்த ஆலைகள், உரிய உரிமங்களை வைத்திருக்கின்றனவா என்பதை பதிவுசெய்ய உத்தரவிட்டுள்ளேன்.

முதல்வர் சித்தராமையா பட்ஜெட் தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறார். காவல் துறையின் தேவைகளை கண்டிப்பாக தெரிவிப்போம். காவல் துறையில் காலி பணியிடங்களை நிரப்ப வேண்டியதுதான் மிகவும் முக்கியமானது என்றார்.

# க்ரைம் கார்னர்

## ராஞ்சியில் 6ஆவது மாடியில் இருந்து குதித்து தொழிலதிபர் தற்கொலை!

**ராஞ்சி, பிப்.8:**

ஜார்க்கண்ட் மாநிலம், ராஞ்சியைச் சேர்ந்த தொழிலதிபர் அனுராக் சரவ்கி தனது அடுக்குமாடி குடியிருப்பின் ஆறாவது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார். இந்தச் சம்பவம் வியாழக்கிழமை இரவு 10:30 மணியளவில் ஹிந்த்பிரி காவல் நிலையப் பகுதியில் நடந்தது.

இதுகுறித்து காவல் கண்காணிப்பாளர் ராணா கூறுகையில், இறந்த அனுராக் தொலைபேசியில் யாரிடமோ உரத்த தொனியில் பேசியிருக்கிறார். அவரது அறையின் கதவு உள்ளே இருந்து பூட்டப்பட்டிருந்தது. பின்னர் திடீரென அவர் அடுக்குமாடி குடியிருப்பின் ஆறாவது மாடியில் இருந்து குதித்தார். அவரது அறையில் இருந்து தற்கொலைக் குறிப்பு எதுவும் மீட்கப்படவில்லை. முழுமையான விசாரணை நடந்து வருகிறது என்றார். சம்பவம் நடந்த நேரத்தில், சரவ்கியின் வயதான பெற்றோர் அடுக்குமாடி குடியிருப்பின் முதல் மாடியில் இருந்துள்ளனர். ஆனால், அவரது மனைவி மற்றும் குழந்தைகள் அங்கு இல்லை என்றும் கோட்வாலி டிஎஸ்பி பிரகாஷ் சோய் தெரிவித்தார். இது தற்கொலை வழக்கு என்று ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது. உடல் கூராய்வுக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. சரவ்கியின் மனைவி ராஞ்சி வந்த பிறகு, சரவ்கியின் மரணம் தொடர்பாக அவரிடம் விசாரிக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

## மகாராஷ்டிரம்: 7 நக்ஸல்கள் சுட்டுக் கொலை

**கட்சிரோலி, பிப்.8:**

காராஷ்டிர மாநிலம், கட்சிரோலியில் பாதுகாப்புப் படையினருடன் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 7 நக்ஸல்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கட்சிரோலி மாவட்டம், பொதேவாடா கிராமத்தில் நக்ஸல்கள் பதுங்கியிருப்பதாக கிடைத்த ரகசியத் தகவலின்பேரில் பாதுகாப்புப் படையினர் அப்பகுதியை கடந்த புதன்கிழமை சுற்றி வளைத்தனர். அங்கிருந்த 2 நக்ஸல் பதுங்குமிடங்களை பாதுகாப்புப் படையினர் அழித்தனர். அப்போது இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை மூண்டது. இந்த சண்டை 3 நாள்களாக நீடித்தது. இதில் 3 பெண்கள் உள்ளிட்ட 7 நக்ஸல்கள் கொல்லப்பட்டனர். அவர்களின் சடலங்களை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர். அவர்களின் பெயர் உள்ளிட்ட அடையாளம் காணும் பணி நடைபெறுகிறது.

பாதுகாப்புப் படை வீரர் வீரமரணம்: துப்பாக்கிச் சண்டையில், காயமடைந்த பாதுகாப்புப் படை வீரர் தீபக் சின்னா மடாவி (38) என்பவர் ஹெலிகாப்டர் மூலம் கொண்டு செல்லப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இன்னொரு பாதுகாப்புப் படை வீரரான ஜோகா மடாவி காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் அவர் அபாய கட்டத்தை தாண்டி விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நக்ஸல்களுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே சண்டை நீடிப்பதாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருச்சி ரெங்கநாதர் கோவில் சாலையில் நடந்து சென்ற மூதாட்டியிடம் 3 பவுன் செயின் பறிப்பு

**திருச்சி, பிப்.8:**

திருச்சிமாவட்டம்ஸ்ரீரங்கத்தைசேர்ந்தவர் விஜயலட்சுமி (வயது 75). இவர் இரவு ரெங்கநாதர் கோவிலில் சாமி தரிசனம் செய்துவிட்டு தனது வீட்டிற்கு நடந்து சென்று கொண்டிருந்தார். ராகவேந்திரபுரம் தனியார் திருமண மண்டபம் அருகே சென்றபோது, மோட்டார் சைக்கிளில் வந்த 2 மர்ம நபர்கள் விஜயலட்சுமி அணிந்திருந்த 3 பவுன் சங்கிலியை பறித்து சென்றனர்.

இந்த சம்பவத்தால் மூதாட்டி விஜயலெட்சுமி அதிர்ச்சிக்கும் ஆளானார். பின்னர், இது குறித்து விஜயலட்சுமி அளித்த புகாரின் அடிப்படையில் ஸ்ரீரங்கம் போலீசார் வழக்குப்பதிவு செய்து மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகிறார்கள்.

# விளையாட்டு செய்திகள்

## யு19 உலக சாம்பியனான இந்திய அணிக்கு ரூ.7.5 கோடி ரொக்கப் பரிசு: பிசிசிஐ அறிவிப்பு

**மும்பை, பிப்.8:**

ஹராரே நகரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த தொடரின் இறுதிப் போட்டியில் இங்கிலாந்தை 100 ரன்களில் வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது ஆயுஷ் மாத்ரே தலைமையிலான இந்திய அணி. இந்த தொடரின் வரலாற்றில் இந்திய அணி வெல்லும் ஆறாவது சாம்பியன்ஷிப் பட்டமாக இது அமைந்தது.

“யு19 உலகக் கோப்பை தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் இளையோர் அணியை எண்ணி ஒட்டுமொத்தமா தேசமும், பிசிசிஐ-யம் பெருமிதம் அடைகிறது. இந்த தொடரில் ஒரு போட்டியில் கூட இந்திய அணி தோல்வி பெறாமல் சாம்பியின் ஆகியுளளது. அதுவும் இறுதிப் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்திய விதம் அபாரம். அவர்களுக்கு பிசிசிஐ சார்பில் ரூ.7.5 கோடி பரிசு அறிவிக்கிறோம்” என பிசிசிஐ செயலாளர் தேவ்ஜித் சைக்கியா தெரிவித்தார்.

இந்த தொடரில் 7 ஆட்டங்களில் விளையாடி இருந்தார் இந்தியாவின் 14 வயது வீரர் வைபவ் சூர்யவன்ஷி. மொத்தம் 259 பந்துகளில் 439 ரன்களை அவர் எடுத்திருந்தார். இதில் 41 பவுண்டரிகள் மற்றும் 30 சிக்ஸர்களை அவர் விளாசி இருந்தார். இறுதிப் போட்டியில் 175 ரன்கள் எடுத்து மிரட்டினார். இதன் மூலம் இந்த தொடரில் தொடர் நாயகன் விருதை வென்றார். இறுதிப் போட்டியிலும் ஆட்ட நாயகன் விருதை அவரே வென்றிருந்தார்.

## ஆசிய துப்பாக்கி சுடுதல்: தங்கம் வென்ற இந்திய வீரர்

**புதுடெல்லி, பிப்.8:**

ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டி டெல்லியில் உள்ள கர் னிசிங் ரேஞ்சில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த துப்பாக்கி சுடுதலில் ஆண்களுக்கான 10 மீட்டர் ஏர்ரைபிள் பந்தயத்தில் இந்திய வீரர் ருத்ராங்ஷ் பட்டீல் கலந்துகொண்டார்.

இதில் சிறப்பாக செயல்பட்ட ருத்ராங்ஷ் பட்டீல் 251.9 புள்ளிகளுடன் முதல் இடத்தை பிடித்து தங்கப்பதக்கத்தை வென்றார். தங்கம் வென்ற ருத்ராங்ஷ் பட்டீலுக்கு வாழ்த்துகள் குவிந்து வருகிறது.

## ஆசிய பேட்மிண்டன் : காலிறுதியில் இந்தியா தோல்வி

**கிங்டாவோ, பிப்.8:**

6-வது ஆசிய பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி சீனாவின் கிங்டாவோ நகரில் நடந்து வருகிறது. இந்நிலையில், பெண்கள் பிரிவு காலிறுதியில் இந்திய அணி, சீனாவை எதிர்கொண்டது.

இந்த ஆட்டத்தில் 0-3 என்ற கணக்கில்இந்திய அணி சீனாவிடம் தோல்வி அடைந்தது. இதேபோல், ஆண்கள் பிரிவு காலிறுதி போட்டியில் இந்திய அணி 1-3 என்ற கணக்கில் தென் கொரியாவிடம் தோல்வி அடைந்தது. இதன்மூலம் இந்திய அணி காலிறுதி சுற்றுடன் தொடரில் இருந்து வெளியேறியது.

# விமானப் படையிடம் ஒப்படைக்க 5 தேஜஸ் எம்கே1ஏ விமானங்கள் தயார்: எச்ஏஎல் நிறுவனம் அறிவிப்பு



**புதுடெல்லி, பிப்.8:**

விமானப் படையிடம் ஒப்படைக்க 5 தேஜஸ் எம்கே1ஏ ரக போர் விமானங்கள் தயார் நிலையில் உள்ளன.

இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் நிறுவனம் (எச்ஏஎல்) உள்நாட்டில் தேஜஸ் இலக ரக போர் விமானத்தை தயாரிக்கிறது. இந்நிலையில் எச்ஏஎல் நிறுவனத்திடம் விமானப்படை 83 தேஜஸ் எம்கே1ஏ ரக விமானங்களை தயாரிக்க கடந்த 2021-ம் ஆண்டு ஆர்டர் கொடுத்தது. அதன்பின் 97 தேஜஸ் எம்கே1ஏ ரக விமானங்களை ரூ.62,370 கோடி மதிப்பில் தயாரிக்க கடந்த 2025-ம் ஆண்டு ஒப்பந்தம் செய்தது.

தேஜஸ் போர் விமானங்களை தயாரித்து வழங்குவதில் எச்ஏஎல் நிறுவனம் தாமதப்படுத்துவதாக விமானப்படை தளபதியே ஒருமுறை குற்றம் சாட்டினார். இதற்கு பதில் அளித்த எச்ஏஎல் நிறுவனம் தேஜஸ் போர் விமானத்தில் பயன்படுத்தப்படும் அமெரிக்க தயாரிப்பு ஜிஇ இன்ஜினை பெறுவதில் தாமதம் ஏற்படுவதால், தேஜஸ் போர் விமானத்தை குறித்த நேரத்தில் விநியோகம் செய்ய முடியவில்லை என கூறியது.

இந்நிலையில் எச்ஏஎல் நிறுவனம் விடுத்துள்ள செய்தியில், “அமெரிக்கவின் ஜிஇ நிறுவனத்திடம் இருந்து 5 இன்ஜின்கள் இதுவரை வந்துள்ளன. அந்த இன்ஜின்கள் பொருத்தப்பட்டு 5 தேஜஸ் எம்கே1ஏ ரக விமானம் விமானப்படையிடம் ஒப்படைக்க தயார் நிலையில் உள்ளது.

ஐஎம்ஆர்எச் ஹெலிகாப்டர், தேஜஸ் எம்கே2 போன்ற விமானங்கள் தயாரிப்பில் எச்ஏஎல் 2032-ம் ஆண்டுக்கு பிறகு ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது” என தெரிவித்துள்ளது.

# பிப்.13-ல் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் கூடுகிறது!



**புதுடெல்லி, பிப்.8:**

காவிரி மேலாண்மை ஆணையத்தின் 48 ஆவது கூட்டம் தில்லியில் வரும் 13 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

தமிழகம், கர்நாடகம் இடையே காவிரி நதி நீர் பங்கீட்டு பிரச்னை பல ஆண்டுகளாக நிலவி வந்த நிலையில் இது தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றம் 2018 ஆம் ஆண்டுதீர்ப்புவழங்கியது. அப்போது கர்நாடகம் எந்தெந்த மாதங்களில் எவ்வளவு நீர் தமிழகத்திற்க்கு வழங்க வேண்டும் என்பதை அத்தீர்ப்பின் மூலம் உச்சநீதிமன்றம் நிர்ணயம் செய்தது. அந்த தீர்ப்பை அமல்படுத்தவும், காவிரி நீர் பங்கீட்டை கண்காணிக்கவும் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய இரு அமைப்புகளையும் உச்ச நீதிமன்றம் அமைத்தது.

அதன்படி இந்த இரு அமைப்புகளும் அவ்வப்போது கூடி காவிரி நதி நீர் பங்கீடு தொடர்பாக உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் உத்தரவுகளை பிறப்பித்து வருகின்றன

காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 47 வது கூட்டம் ஜனவரி 6 ஆம் தேதி நடைபெற்றது. உச்சநீதிமன்ற உத்தரவுப்படி தமிழகத்திற்கு ஜனவரி மாதம் 2.76 டிஎம்சி தண்ணீர் திறந்துவிட வேண்டும் என காவிரி நீர் மேலாண்மை ஆணையம் அந்த கூட்டத்தில் கர்நாடகாவுக்கு ஆணையிட்டது இந்த நிலையில், காவிரி மேலாண்மை ஆணையத்தின் 48 ஆவது கூட்டம் தில்லியில் வரும் 13 ஆம் தேதி நடைபெறவுள்ளது.காவிரிநீர்மேலாண்மை ஆணையத்தின் கூட்டம், அதன் தலைவர் எஸ்.கே. ஹல்தார் தலைமையில் தில்லியில் உள்ள அந்த ஆணையத்தின் அலுவலகத்தில் பிப். 13 ஆம் தேதி பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற உள்ளது

இந்த கூட்டத்தில் பங்கேற்குமாறு தமிழகம், கர்நாடகம் ,கேரளம் மற்றும் புதுச்சேரி நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு காவிரி நீர் மேலாண்மை ஆணையம் தகவல் அனுப்பியுள்ளது.

காவிரியில் இருந்து மாதாந்திர நீர் திறப்பு குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளது காவிரி வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி கர்நாடகம் தமிழகத்திற்கு திறந்து விட வேண்டிய தண்ணீரை உறுதி செய்வதற்காக இக்கூட்டம் நடைபெறுகிது காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டுவது தொடர்பான விவகாரத்தில் கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கை மீது காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு மற்றும் தமிழகம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட மாநிலங்களின் விளக்கத்தின் அடிப்படையில் மத்திய நீர்வள ஆணையம் இறுதி முடிவு எடுக்கும் என கடந்த ஆண்டு 2025 நவம்பர் 13 ஆம் தேதி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில் இந்த கூட்டம் நடைபெறுகிறது

# மேகாலயா சுரங்க விபத்து: பலி எண்ணிக்கை 25 ஆக உயர்வு



**புதுடெல்லி, பிப்.8:**

மேகாலயாவின் கிழக்கு ஜைந்தியா ஹில்ஸ் மாவட்டத்தில் உள்ள சட்டவிரோத நிலக்கரி சுரங்கத்தில் நிகழ்ந்த வெடிவிபத்தில் பலியானோரின் எண்ணிக்கை (பிப்ரவரி 6) 25 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று 18 உடல்கள் மீட்கப்பட்ட நிலையில், மேலும் 7 உடல்கள் மீட்கப்பட்டிருப்பதாக மேகாலயா டிஜிபி நோங்ராங் உறுதிப்படுத்தியுள்ளார்.

உம்சங்காட் கிராமத்தில் உள்ள தாங்ஸ்கு பகுதியில் இயங்கி வந்த இந்த சட்டவிரோத சுரங்கத்தில், நேற்று காலை சுமார் 11 மணியளவில் சக்திவாய்ந்த வெடி விபத்து நிகழ்ந்தது. டைனமைட் வெடிமருந்துகளைப் பயன்படுத்தி நிலக்கரி எடுக்கும்போது இந்த விபத்து நேரிட்டதாகக் கருதப்படுகிறது. சுரங்கத்திற்குள் இன்னும் பலர் சிக்கியிருக்கலாம் என்ற அச்சத்தில் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படைகள் தொடர்ந்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. தற்போது வரை 12 உடல்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்தத் துயரச் சம்பவத்திற்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குப் பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 2 லட்சம் மற்றும் மாநில அரசின் சார்பில் தலா ரூ. 3 லட்சம் இழப்பீடு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேகாலயா முதலமைச்சர் கான்ராட் சங்கமா, சட்டவிரோத சுரங்க உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளார். இது தொடர்பாக நிலக்கரி சுரங்க உரிமையாளர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். 2014-ம் ஆண்டு முதல் மேகாலயாவில் எலி வளை சுரங்க முறைகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தும், இத்தகைய சட்டவிரோதச் செயல்பாடுகள் தொடர்வது குறிப்பிடத்தக்கது.

# வணிகச் செய்திகள்

## வெனிசுலாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதால் ரூ.27,000 கோடி மிச்சமாகும்

**மும்பை, பிப்.7:**

ரஷ்யாவுக்கு பதிலாக வெனிசுலாவிலிருந்து கச்சா எண்ணெய் வாங்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளதாக கூறப்படும் நிலையில், அதனால் ரூ.27,000 கோடி வரை அதாவது 300 கோடி டாலர் வரை சேமிக்க முடியும் என எஸ்பிஐ ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: இந்திய-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவுக்கு பல ஆதாயங்கள் கிடைக்கும் நிலையில் அதில் முக்கியமாக வெனிசுலா கச்சா எண்ணெய் மூலமாக கிடைக்கும் ஆதாயம் முதலிடத்தில் உள்ளது. இதன் மூலம், இந்தியா ஆண்டுக்கு 300 கோடி டாலரை மிச்சப்படுத்த முடியும். ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெய் பெறுவதைக் குறைத்து, வெனிசுலாவிலிருந்து ‘மெரி 16’ வகை கனரக கச்சா எண்ணெயை இறக்குமதி செய்வதன் மூலம் இந்தியா இந்தச் சேமிப்பை செய்வது சாத்தியமாகும்.

20 டாலர் தள்ளுபடி: வெனிசுலா எண்ணெய்க்கு ஒரு பேரலுக்கு 10 முதல் 12 டாலர் வரை தள்ளுபடி கிடைக்க வாய்ப்புள்ளது. இது உள்நாட்டுப் பணவீக்கத்தைப் பாதிக்காமல், ரஷ்ய எண்ணெய் தள்ளுபடி நிறுத்தப்படுவதால் ஏற்படும் இழப்பையும் ஈடுசெய்ய உதவும். அமெரிக்கா விதித்துள்ள வரிக் குறைப்பு, இந்தியப் பொருட்களின் ஏற்றுமதித் திறன் அதிகரிப்பு, பணவீக்கக் கட்டுப்பாடு போன்றவை இந்தியப் பொருளாதாரத்திற்குச் சாதகமான அம்சங்களாக உள்ளன.

# டிஜிட்டல் மோசடிகளில் பணம் இழந்தால் வங்கி மூலம் ரூ.25,000 இழப்பீடு பெறலாம்

புதுடெல்லி, பிப்.8:

கடந்த 4-ம் தேதி தொடங்கி ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கை குழுக் கூட்டம் மும்பையில் 3 நாட்கள் நடந்தது. இதைத் தொடர்ந்து ரிசர்வ் வங்கி கவர்னர் சஞ்சய் மல்ஹோத்ரா மும்பையில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: கடந்த 2025-ம் ஆண்டு நாடு முழுவதும் நடைபெற்ற டிஜிட்டல் மோசடிகளில் சுமார் ரூ.20,000 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த மோசடிகளால் சுமார் 21 லட்சத்துக்கும் மேற்பட்டோர் நேரடியாக பாதிக்கப்பட்டு உள்ளனர்.



கடந்த 2017-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிகளின்படி டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளில் ஏற்படும் இழப்புகளுக்கு வாடிக்கையாளரே பொறுப்பு என்று கூறப்பட்டுள்ளது. இதன் காரணமாக டிஜிட்டல் மோசடிகளால் பாதிக்கப்படும் நபர்களுக்கு இழப்பீடு கிடைப்பது இல்லை. இந்தச் சூழலில் டிஜிட்டல் மோசடிகளைத் தடுக்க விரைவில் 3 வரைவுக் கொள்கைகள் வெளியிடப்படும். இதுதொடர்பாக பொதுமக்கள் மற்றும் வங்கித் துறை சார்ந்த நிபுணர்களின் கருத்துகள் கேட்டறியப்படும்.

முதல் வரைவு கொள்கையில், டிஜிட்டல் மோசடிகளால் பாதிக்கப்படும் நபர்களுக்கு இழப்பீடு கிடைக்க வழிவகை செய்யப்படும். டிஜிட்டல் மோசடிகளில் பணத்தை இழக்கும் நபருக்கு சம்பந்தப்பட்ட வங்கி நிர்வாகம் சார்பில் அதிகபட்சமாக ரூ.25,000 இழப்பீடு வழங்கப்படும்.

முதியோர் பணம்: டிஜிட்டல் மோசடிகளில் பெரும்பாலும் மூத்த குடிமக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இதை தடுக்க முதியோர் மேற்கொள்ளும் டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் பணப் பரிமாற்றம் தாமதமாக நடைபெற நடவடிக்கை எடுக்கப்படும். இரண்டாவது வரைவு கொள்கையில், டிஜிட்டல் மோசடிகளை தடுக்க கடுமையான விதிமுறைகள் வரையறுக்கப்படும். மூன்றாவது வரைவு கொள்கையில், வாடிக்கையாளர்களிடம் இருந்து கடனை நியாயமான முறையில் வசூலிக்க விதிகள் உருவாக்கப்படும். குறிப்பாக 3-ம் தரப்பு மூலம் கடன் தொகையை வசூலிக்கும் நடவடிக்கை ஒழுங்குபடுத்தப்படும். நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளை மேம்படுத்த சஹகாரி வங்கி க்ஷம்தா நிர்மான் என்ற திட்டம் தொடங்கப்படுகிறது. இந்த திட்டத்தின்படி 1.4 லட்சம் கூட்டுறவு வங்கிகளின் ஊழியர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்படும். குறிப்பாக வங்கி நிர்வாகம், தொழில்நுட்பம் சார்ந்து ஊழியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும். இதன் மூலம் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகள் மேம்படுத்தப்படும். கூட்டுறவு வங்கிகள் வழங்கும் தனிநபர் கடன்களின் வரம்பை அதிகரிக்க பரிந்துரை செய்கிறோம். இவ்வாறு ரிசர்வ் வங்கி கவர்னர் சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்தார்.

## "இந்தியாவின் கிரிக்கெட் திறமை ஜொலிக்கிறது..": பிரதமர் மோடி வாழ்த்து

புதுடெல்லி, பிப்.8:

ஜிம்பாப்வேயில் நடைபெற்ற இளையோர் உலகக்கோப்பை தொடரின் இறுதிப்போட்டியில் இங்கிலாந்து அணியை வீழ்த்து இந்தியா 6-வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றது. பட்டம் வென்ற இந்திய அணிக்கு பல்வேறு தரப்பில் இருந்தும் வாழ்த்துகள் குவிந்து வருகிறது.

இந்த நிலையில், வெற்றிக்கோப்பையை உச்சிமுகர்ந்த இந்திய அணிக்கு பிரதமர் மோடியும் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"இந்தியாவின் கிரிக்கெட் திறமை ஜொலிக்கிறது! உலகக் கோப்பையை வென்று தாயகம் கொண்டு வந்த நமது 19 வயதுக்குட்பட்டோர் அணி குறித்து நாங்கள் பெருமை கொள்கிறோம். இந்தத் தொடர் முழுவதும் நமது அணி மிகச் சிறப்பாக விளையாடி, அசாதாரண திறமையை வெளிப்படுத்தியுள்ளது. இந்த வெற்றி பல இளம் விளையாட்டு வீரர்களுக்கும் உத்வேகம் அளிக்கும். வீரர்களின் வருங்கால முயற்சிகளுக்கு வாழ்த்துகள்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாடாளுமன்ற அமளியால் இதுவரை ரூ.57 கோடி இழப்பு

புதுடெல்லி, பிப்.8:

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் கடந்த 2-ம் தேதி தொடங்கியது. அப்போது சீனா-எல்லைப் பிரச்சினை தொடர்பாக முன்னாள் ராணுவ தளபதி நரவனே எழுதி வெளிவராத புத்தகத்தில் உள்ள தகவல்களை மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி மேற்கோள் காட்டினார்.

இதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். இந்த விவகாரத்தில் 8 எம்.பி.க்கள் இடை நீக்கம் செய்யப்பட்டனர். இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கடந்த சில நாட்களாக அமளி தொடர்கிறது. இதனால் மக்களவை ஒத்திவைக்கப்பட்டு வருகிறது.

நாடாளுமன்றம் செயல்பட ஒரு நிமிடத்துக்கு ரூ2.5 லட்சமும், ஒரு மணி நேரத்துக்கு ரூ.1.5 கோடியும், நாள் ஒன்றுக்கு ரூ.9 கோடியும் செலவாகிறது என மதிப்பிடப்பட்டுள்ளது.

பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்கியதிலிருந்து இதுவரை மக்களவை 30 முதல் 35 மணி நேரம் செயல்பட்டிருக்க வேண்டும். இதில் 20 முதல் 25 மணி நேரம் அமளி காரணமாக வீணாகியுள்ளது. இதனால் மக்களவை இழப்பு மட்டும் ரூ.30 முதல் ரூ.35 கோடி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதேபோல் மாநிலங்களவையில் அமளி காரணமாக 12 முதல் 15 மணி நேரம் வீணாகியுள்ளது. இங்கு ஏற்பட்ட இழப்பு ரூ.18 முதல் ரூ.22 கோடி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்தத்தில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஏற்பட்ட அமளி காரணமாக பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்கியதில் இருந்து இதுவரை ரூ.57 கோடி இழப்பு ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## கடந்த 10 ஆண்டுகளில் விசாரணை நீதிமன்றங்களில் 1,310 பேருக்கு மரண தண்டனை விதிப்பு

புதுடெல்லி, பிப்.8:

'இந்தியாவில் மரண தண்டனை: ஆண்டு புள்ளிவிவர அறிக்கை - 2025' கடந்த 4-ம் தேதி வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையை ஹைதராபாத்தில் உள்ள தேசிய சட்ட ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சி அகாடமியின் சட்டப் பல்கலைக்கழகத்தின், 'தி ஸ்கொயர் சர்க்கிள் கிளினிக்' குற்றவியல் நீதி பிரிவு ஆய்வு செய்து வெளியிட்ட தகவலில் கூறியிருப்பதாவது:

கடந்த 2016-ம் ஆண்டு முதல் 2025-ம் ஆண்டு வரையில் விசாரணை நீதிமன்றங்கள் 1,310 பேருக்கு மரண தண்டனை விதித்துள்ளன. அவற்றில் 106 பேருக்கு மட்டும் மரண தண்டனையை உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. இதன் மூலம் விசாரணை நீதிமன்றங்கள் அளிக்கும் தண்டனைகளுக்கும் உயர் நீதிமன்றங்களில் வெளிவரும் தீர்ப்புகளுக்கும் நிலையான இடைவெளி இருப்பதை காண முடிகிறது.



கடந்த ஆண்டு டிசம்பர் 31-ம் தேதி நிலவரப்படி சிறை கைதிகள் 574 பேர் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களாக இருந்தனர்.

இது கடந்த 2016-ம் ஆண்டு முதல் அதிகபட்சமாகும். அதன்படி கடந்த 2025-ம் ஆண்டு மட்டும் 94 வழக்குகளில் 128 மரண தண்டனைகளை செஷன்ஸ் நீதிமன்றம் வழங்கியுள்ளது. அவற்றில் பெரும்பாலான மரண தண்டனைகளை உயர் நீதிமன்றங்கள் குறைத்துள்ளன, அல்லது விடுவித்துள்ளன. இதே நிலைதான் உச்ச நீதிமன்றத்திலும் காணப்படுகிறது.

உயர் நீதிமன்றங்களில் மரண தண்டனை உறுதி செய்யப்பட்டிருந்தாலும், கடந்த 2023-ம் ஆண்டில் இருந்து 2025-ம் ஆண்டு வரையில் உச்ச நீதிமன்றம் ஒருவருக்குக் கூட மரண தண்டனையை உறுதிப்படுத்தவில்லை.

விசாரணை நீதிமன்றங்களில் அதிகபட்சமாக மரண தண்டனை விதிக்கப்பட்டு, உயர் நீதிமன்றங்கள், உச்ச நீதிமன்றத்தில் மாற்றி தீர்ப்பளிக்கும் போது, மரண தண்டனை வழங்குவதன் நம்பகத்தன்மை குறித்து கேள்வி எழுகிறது. அதே நேரத்தில் மரண தண்டனையில் இருந்து விடுவிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது குற்றவியல் நீதி முறையின் குறைகளை எடுத்துக் காட்டுகிறது. இது விசாரணையின் தோல்வியை எடுத்துக் காட்டுகிறது. இந்த தவறுகளால் பாதிக்கப்பட்டவர்களும், குற்றவாளிகளும் கூட பாதிக்கப்படுகின்றனர். அவர்களின், வாழ்வாதாரம் பாதிக்கிறது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## உபெர், ஓலா, ரேபிடோ ஓட்டுநர்கள் வேலைநிறுத்தம்

புதுடெல்லி, பிப்.8:

உபெர், ஓலா, ரேபிடோ ஓட்டுநர்கள் நாடு தழுவிய வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

அதன்படி ஆயிரக்கணக்கான ஓட்டுநர்கள் குறைந்தது ஆறு மணி நேரத்திற்கு செயலியிலிருந்து வெளியேறி தங்களது பணிகளை நிறுத்தத் திட்டமிட்டுள்ளனர். ஊதியம் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடக்கிறது. இதனால் வாடகை கார்கள், ஆட்டோ மற்றும் பைக் டாக்சிகளின் சேவை விடுமுறை நாளான கடுமையாக பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தெலங்கானா கிக் மற்றும் பிளாட்ஃபார்ம் தொழிலாளர் சங்கம் இந்த வேலைநிறுத்தத்தை அறிவித்துள்ளது. இதற்கு தேசிய அளவிலான பல்வேறு தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

## கர்நாடகாவில் ரோஹித் வெமுலா சட்டம்

பெங்களூரு, பிப்.8:

ஹைதராபாத் பல்கலைக்கழகத்தில் பி.எச்டி படித்த பட்டியலின மாணவர் ரோஹித் வெமுலா சாதி பாகுபாட்டின் காரணமாக கடந்த 2016-ம் ஆண்டு தற்கொலை செய்து கொண்டார். இதையடுத்து, கர்நாடகாவில் உயர் கல்வி நிறுவனங்களில் சாதிய பாகுபாடுகளை தடுக்க ரோஹித் வெமுலா பெயரில் தனிச்சட்டம் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது. இந்த சட்டம் வரும் பட்ஜெட் கூட்டத்தொடரில் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட இருப்பதாக அமைச்சர் சுதாகர் தெரிவித்தார்.

## ஆகமம் அல்லாத கோயில்களை கண்டறிய உச்ச நீதிமன்றம் அவகாசம்

புதுடெல்லி, பிப்.8:

ஆகமக் கோயில்களில் அர்ச்சகர்கள் நியமனத்தின் போது, ஆகம விதிகளை பின்பற்றக் கோரிய மனுக்களை உச்ச நீதிமன்ற நீதிபதி சுந்தரேஷ் தலைமையிலான அமர்வு விசாரித்து வருகிறது. ஆகமக் கோயில்களை கண்டறிய மயிலம் பொம்மபுர ஆதீனத்தை நியமிக்க உச்ச நீதிமன்றம் பரிந்துரை செய்தது. இந்நிலையில், ஆகம விதிகள் பின்பற்றப்படாத கோயில்களைக் கண்டறிய தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று மேலும் 4 மாதம் உச்ச நீதிமன்றம் அவகாசம் வழங்கியது.

## திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் புதிய நிர்வாக அதிகாரியாக எம்.ரவிச்சந்திரா பதவியேற்பு

திருமலை, பிப்.8:

திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாக அதிகாரியாக அனில் குமார் சிங்கால் பதவி வகித்து வந்தார். இவர் முந்தைய ஜெகன் ஆட்சியில் திருப்பதி தேவஸ்தானத்தில் நடந்த கலப்பட நெய் விவகாரத்தில் அப்போதைய அறங்காவலர் குழு தீர்மானங்களை தடுக்காமல் அலட்சியப் போக்கை கடைபிடித்தார் என சிறப்பு புலனாய்வு குழு கருத்து தெரிவித்தது. இதன் அடிப்படையில் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இதையடுத்து அமராவதியில் சிஎம்ஓ அலுவலகத்தில் முதல்வர் சந்திரபாபு நாயுடுவுக்கு முக்கிய செயலாளராக பணியில் இருந்த எம்.ரவிச்சந்திரா, திருப்பதி தேவஸ்தான புதிய நிர்வாக அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டார். இந்நிலையில் ஏழுமலையான் கோயிலில் உள்ள ரங்கநாயக மண்டபத்தில் அவர் நேற்று பதவியேற்றார். முன்னதாக அவர் தனது மனைவியுடன் ஏழுமலையானை தரிசனம் செய்தார். அவருக்கு தேவஸ்தான கூடுதல் நிர்வாக அதிகாரி வெங்கய்ய சவுத்ரி தீர்த்த பிரசாதங்கள் வழங்கி கவுரவித்தார். புதிய நிர்வாக அதிகாரி: ரவிச்சந்திரா பேசுகையில், "தேவஸ்தானஅறங்காவலர் குழு, மூத்த அதிகாரிகள் மற்றும் பக்தர்களின் கருத்துகளை கேட்டறிந்து, பக்தர்களின் மனம் புண்படாத வகையில் செயல்படுவேன். ஏழுமலையானுக்கு சேவை செய்யும் இந்த பாக்கியத்தை வழங்கிய ஆந்திர முதல்வருக்கு மனதார நன்றி தெரிவிக்கிறேன்" என்றார்.

இவர் ஏற்கனவே ஒருங்கிணைந்த சித்தூர் மாவட்ட ஆட்சியராக பணியாற்றியுள்ளார். திருப்பதி தேவஸ்தானம் குறித்தும் அதன் நிர்வாகம் குறித்தும் நன்றாக அறிந்தவர் ஆவார்.

## விமானங்களின் தரப் பரிசோதனை: 754-ல் கோளாறானவை 377 - மத்திய அரசு தகவல்

புதுடெல்லி, பிப்.8:

கடந்த ஆண்டு ஜனவரி முதல் இந்தாண்டு பிப்.3-ம் தேதி வரை பரிசோதிக்கப்பட்ட 754 விமானங்களில், 377 விமானங்களில் கோளாறுகள் இருந்தன என்ற அதிர்ச்சி தகவலை மக்களவையில் மத்திய விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் முரளிதர் மோஹோல் தெரிவித்தார்.



விமானங்கள் பரிசோதனை தொடர்பாக மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய இணையமைச்சர் முரளிதர் மோஹோல் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில் கூறியதாவது: கடந்த மூன்று ஆண்டுகளில் விமானங்களில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. கடந்த ஆண்டு இது போன்ற 353 சம்பவங்கள் நிகழ்ந்தன. 2024-ம் ஆண்டு மொத்தம் 421 தொழில்நுட்பக் கோளாறுகள் பதிவாகியுள்ளன, இது முந்தைய ஆண்டின் 448-ஐ விடக் குறைவு.

அனைத்து விமானங்கள் மற்றும் விமான நிலைய இயக்குநர்களுக்கான விதிமுறைகள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத் தேவைகளுக்கு இணங்குவதைக் கண்காணிக்க, விமானப் பாதுகாப்பு ஒழுங்குமுறை அமைப்பான சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) ஒரு முறையான பாதுகாப்பு மேற்பார்வை முறையைக் கொண்டுள்ளது. இதில் கண்காணிப்பு, திடீர் சோதனைகள் மற்றும் ஒழுங்குமுறை தணிக்கைகள் ஆகியவை அடங்கும். ஏதேனும் மீறல்கள் அல்லது விதிமுறைகளுக்கு மாறானது எனக் கண்டறியப்பட்டால், டிஜிசிஏவால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இது தொடர்பாக டிஜிசிஏ ஒரு சுற்றறிக்கையையும் வெளியிட்டுள்ளது. விமானங்களின் அனைத்துவகைக் குறைபாடுகளையும் டிஜிசிஏவிற்குத் தெரிவிக்குமாறு விமான நிறுவனங்களுக்கு அது அறிவுறுத்தியுள்ளது எனத் தெரிவித்தார். நாடு முழுவதிலும் உள்ள தனியார் விமான நிறுவனங்கள், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தம் முழு விமானங்களையும் அவ்வப்போது ஆய்வு செய்கின்றன. இதில், பல்வேறு வகையான உபகரணங்களும் ஆய்வு செய்யப்படுகின்றன. இந்த உபகரணங்களின் முன்னுரிமை அல்லது அவ சரநிலையின் அடிப்படையில் இவை ஏ, பி, சி மற்றும் டி என நான்கு வகை நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு ஆய்வு செய்த அதே காலகட்டத்தில் டிஜிசிஏவும் அனைத்து நிறுவனங்களின் விமானங்கள் மீது 3,890 கண்காணிப்பு ஆய்வுகளை நடத்தியுள்ளது.

## 5 மாநில தேர்தல் பார்வையாளர்களுக்கு பயிற்சி; டெல்லியில் 2 நாட்கள் நடந்தது

புதுடெல்லி, பிப்.8:

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா உள்பட 5 மாநில சட்ட சபைகளுக்கு விரைவில் தேர்தல் நடைபெறுகிறது. இதற்காக தேர்தல் கமிஷன் நியமித்த மத்திய பார்வையாளர்களுக்கு 2 நாள் பயிற்சி டெல்லியில் நடைபெற்றது. இதில் 714 பொது பார்வையாளர்கள், 233 காவல் பார்வையாளர்கள் மற்றும் 497 செலவின பார்வையாளர்கள் என 1444 அதிகாரிகள் கலந்து கொண்டனர். அப்போது வாக்காளர் பட்டியல் தயாரித்தல், தேர்தல் நடத்துதல், செலவு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஊடகங்கள் தொடர்பான விஷயங்கள் குறித்து விளக்கப்பட்டது. மின்னணு வாக்குப் பதிவு எந்திரங்களின் செயல் விளக்கமும் அளிக்கப்பட்டது. பயிற்சி நிறைவு நாளான தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார், தேர்தல் கமிஷனர்கள் சுக்பீர்சிங் சந்து. விவேக் ஜோஷி ஆகியோர் பங்கேற்று பயிற்சி மற்றும் விளக்கம் அளித்தனர். அத்துடன் சந்தேகங்களை நிவர்த்தி செய்தனர். தேர்தல் பார்வையாளர்கள் சுதந்திரமான, நியாயமான மற்றும் வெளிப்படையான தேர்தல்களை உறுதி செய்ய வேண்டும் என ஞானேஷ் குமார் அறிவுறுத்தினார்.

## சபரிமலை தங்கம் திருட்டு வழக்கில் நடிகர் ஜெயராமுக்கு அமலாக்கத் துறை சம்மன்

திருவனந்தபுரம், பிப்.8:

சபரிமலை ஐயப்பன் கோயில் கருவறையின் கதவுகள் மற்றும் பீடத்துடன் கூடிய 2 துவார பாலகர் சிலைகளுக்கு கடந்த 1999-ம் ஆண்டு தங்கத் தகடுகள் பொருத்தப்பட்டன. கடந்த 2019-ம் ஆண்டில் துவார பாலகர் சிலைகள், கருவறை கதவுகளை தனது சொந்த செலவில் புதுப்பிக்க முன்னாள் அர்ச்சகர் உன்னிகிருஷ்ணன் போத்தி முன்வந்தார்.



இதன்படி சென்னையில் உள்ள நிறுவனத்தில் துவார பாலகர் சிலைகள், கருவறை கதவுகளுக்கு மீண்டும் தங்க முலாம் பூசப்பட்டது.

கடந்த 2020-ம் ஆண்டில் சிலைகள், கதவுகள் தேவசம் போர்டிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்த சூழலில் கடந்த ஆண்டு செப்டம்பரில் துவாரபாலகர் சிலைகள், கதவுகளில் 4.5 கிலோ தங்கம் மாயமாகி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதுதொடர்பாக கேரள உயர் நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் அந்த மாநில காவல் துறையின் சிறப்பு புலனாய்வு குழு விசாரணை நடத்தி வருகிறது. இதே விவகாரம் தொடர்பாக அமலாக்கத் துறை தனியாக வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறது.

சபரிமலை ஐயப்பன் கோயில் கருவறை கதவுகள், துவார பாலகர் சிலைகளுக்கு சென்னையில் தங்க மூலாம் பூசியபோது சென்னை அசோக் நகரில் உள்ள நடிகர் ஜெயராம் வீட்டுக்கு அவை எடுத்துச் செல்லப்பட்டு சிறப்பு பூஜை, வழிபாடுகள் நடத்தப்பட்டன. இதுதொடர்பாக நடிகர் ஜெயராமிடம் கேரள சிறப்பு புலனாய்வு குழு அண்மையில் விசாரணை நடத்தியது.

இதைத் தொடர்ந்து அமலாக்கத் துறை சார்பில் நடிகர் ஜெயராமுக்கு சம்மன் அனுப்பப்பட்டு உள்ளது. அடுத்த சில நாட்களில் அவர் அமலாக்கத் துறை அதிகாரிகள் முன்பு நேரில் ஆஜராகி விளக்கம் அளிப்பார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. சபரிமலை தங்கம் திருட்டு வழக்கில் கைது செய்யப்பட்ட முன்னாள் அர்ச்சகர் உன்னிகிருஷ்ணன் போத்தி அண்மையில் ஜாமீனில் விடுதலையானார். அமலாக்கத் துறை சார்பில் அவருக்கும் சம்மன் அனுப்பப்பட்டு உள்ளது. அடுத்த சில நாட்களில் அவர் கொச்சியில் உள்ள அமலாக்கத் துறை அலுவலகத்தில் ஆஜராவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 3 ஆயிரம் கி.மீ. தொலைவிலான இலக்கை தாக்கும் திறன் கொண்ட அக்னி-3 ஏவுகணை பரிசோதனை வெற்றி

பாலசோர், பிப்.8:

ஒடிசாவின் பாலசோர் மாவட்டத்தில் சந்திப்பூர் கடலோர பகுதியில் அணு ஆயுதங்களை சுமந்து சென்று தாக்க கூடிய திறன் படைத்த அக்னி-3 ஏவுகணை ஏவி பரிசோதனை செய்யப்பட்டது. அது வெற்றியும் அடைந்துள்ளது. 17 மீட்டர் நீளம் கொண்ட இந்த ஏவுகணை 3 ஆயிரம் கி.மீ. தொலைவிலான இலக்கை தாக்கும் திறன் கொண்டது. இதில் ஏவுகணையின் அனைத்து செயல்பாட்டு நடவடிக்கைகளும் மற்றும் தொழில்நுட்பங்களும் சரியாக பரிசோதிக்கப்பட்டன. இதில், வங்காள விரிகுடாவில் இலக்கை துல்லியத்துடன் தாக்கியது. அப்போது, ஏவுகணையின் பயணத்திற்கான பாதை ரேடார் உதவியுடன் சரியாக கண்காணிக்கப்பட்டது. ஏவுகணை பரிசோதனையின்போது, அனைத்து விசயங்களையும் அது நிறைவேற்றியது என டி.ஆர்.டி.ஓ. தெரிவித்துள்ளது.

## கடும் பனிப்பொழிவு ; டென்மார்க்கில் முடக்கம்

**டென்மார்க், பிப்.8:**

டென்மார்க் நாட்டில் கடும் பனிப்பொழிவு நிலவுவதால் மக்களின் அன்றாட வாழ்க்கை முடங்கியுள்ளது. பொதுப் போக்குவரத்து நிறுத்தப்பட்டு பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. விமான சேவைகள் ரத்து செய்யப் பட்டன.

தலைநகர் உள்ளிட்ட பகுதிகளில் கடும் பனிப்பொழிவு தொடர வாய்ப்புள்ளதாக அந்நாட்டின் வானிலை ஆய்வு நிறுவனம் எச்சரித்துள்ளது. மக்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என்றும், தலைநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வீட்டிற்குள்ளேயே இருக்குமாறும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## நைஜீரிய பயங்கரவாதத் தாக்குதல்: ஐநா பொதுச்செயலாளர் கண்டனம்

நைஜீரியாவின் க்வாரா மாநிலத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 100-க்கும் மேற்பட்டோர் படுகொலையாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தக் கொடூரத் தாக்குதலுக்கு ஐநா பொதுச்செயலாளர் அந்தோணியோ குட்டரெஸ் கடும் கண்டனத்தைத் தெரிவித்தார். பயங்கரவாதம் மற்றும் வன்முறைத் தீவிரவாதத்திற்கு எதிராகப் போராடும் நைஜீரிய நாட்டு மக்களுக்கு ஐ.நா அவை எப்போதும் துணை நிற்கும் என்றும் குட்டரெஸின் செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக் விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கியூபாவில் மனிதாபிமான நிலை மோசமடையும்: ஐ.நா எச்சரிக்கை



கியூபா மீது அமெரிக்கா விதித்துள்ள எரிசக்தி தடையின் காரணமாக அந்நாட்டில் மனிதாபிமான நிலை மோசமடையும் என ஐ.நா பொதுச்செயலாளர் அந்தோணியோ குட்டரெஸ் எச்சரித்துள்ளார்.

கியூபா விற்கு எண்ணெய் கொண்டு வரும் நாடுகள் மீது வரிகளை விதிக்கப்போவதாக டிரம்ப் அச்சுறுத்தியுள்ள நிலையில், அந்நாட்டில் கடும் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்த தடையின் காரணமாக அந்நாட்டில் தொடர் மின்தடை ஏற்பட்டுள்ளது. இதனால் பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் பொதுப் போக்குவரத்துச் சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

## நேபாளத்தில் பேருந்து விபத்து : பலி எண்ணிக்கை உயர்வு

நேபாளத்தில் வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் மலைப்பாதையில் 200 மீட்டர் பள்ளத்தில் பேருந்து ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அதிக பாரம் மற்றும் பேருந்தின் அழுத்தக் குழாய் வெடித்த தாலும் இந்த விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது. எட்டு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும், ஐந்து பேர் பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற்று வந்த நிலையில் வெள்ளியன்று உயிரிழந்தனர். எனவே விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்துள்ளது. விபத்தில் காயமடைந்துள்ள 40 பேர் உள்ளூர் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

## திபெத், மியான்மரில் நிலநடுக்கம்

திபெத் மற்றும் மியான்மரில் வெள்ளிக்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. மியான்மரில் அதிகாலை 6.03 மணியளவில் 4.9 ரிக்டர் அளவிலும் திபெத்தில் அதிகாலை 4.5 ரிக்டர் அளவிலும் பதிவாகி உள்ளது.

முன்னதாக மியான்மரில் பிப்ரவரி 2 அன்று 5.3 ரிக்டர் அளவில் நிலநடுக்கமும், 3 ஆம் தேதி 5.3 ரிக்டர் அளவிலான நிலநடுக்கமும் ஏற்பட்டது.

இருபகுதிகளிலும் இந்த நிலநடுக்கத்தினால், உயிரிழப்போ, பொருள் சேதமோ ஏற்பட்டதாக எந்தவித தகவலும் இதுவரை வெளியாகவில்லை.

# சூடான்: துணை ராணுவம் நடத்திய டிரோன் தாக்குதலில் பொதுமக்கள் 24 பேர் பலி

**கார்டுமின், பிப்.8:**



வடக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு சூடான். அந்நாட்டில் கடந்த 2021-ம் ஆண்டு ராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. இந்த ஆட்சியின் தலைவராக ராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் செயல்பட்டு வருகிறார்.

அவருக்கு அடுத்த நிலையில் ஆட்சியின் துணைத்தலைவராக துணை ராணுவப்படையின் தளபதியான ஜெனரல் முகமது ஹம்டன் டகலோ செயல்பட்டு வருகிறார்.

இதனிடையே, துணை ராணுவத்தின் படைப்பிரிவுகளில் ஒன்றான அதிவிரைவு ஆதரவு படையினரை ராணுவத்துடன் இணைக்க ராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் முயற்சி மேற்கொண்டார். இதற்கு துணை ராணுவப்படையின் அதிவிரைவு ஆதரவு படையினர் தரப்பில் எதிர்ப்பு கிளம்பியது.

இதனால், ராணுவத்திற்கும், துணை ராணுவத்திற்கும் இடையே கடந்த 2023ம் ஆண்டு ஏப்ரல் 15ம் தேதி முதல் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. துணை ராணுவம் கட்டுப்பாட்டில் இருந்த தலைநகர் கார்டுமினை கடந்த மார்ச் மாதம் ராணுவம் கைப்பற்றியது. அதேவேளை, ராணுவத்திற்கும், துணை ராணுவத்திற்கும் இடையே தொடர்ந்து மோதல் நீடித்து வருகிறது. இந்த மோதலில் அப்பாவி பொதுமக்களும் உயிரிழந்து வருகின்றனர்.

இந்நிலையில், அந்நாட்டின் வடக்கு கொர்டோபென் மாகாணம் ரஹாட் பகுதியில் நேற்று வாகனம் சென்றுகொண்டிருந்தது. அந்த வாகனத்தில் 8 குழந்தைகள் உள்பட பொதுமக்கள் 24 பேர் பயணித்தனர். அப்போது அந்த வாகனத்தை குறிவைத்து துணை ராணுவப்படையினர் டிரோன் தாக்குதல் நடத்தினர். இந்த டிரோன் தாக்குதலில் வாகனத்தில் பயணித்த 24 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இந்த சம்பவம் சூடானில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## தடுப்பூசிக்காக இந்தியாவைச் சார்ந்திருந்த பாகிஸ்தானுக்கு ஆபரேஷன் சிந்தூருக்குப்பின் பெரும் பின்னடைவு!

**கராச்சி, பிப்.8:**



இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு ஏற்றுமதியாகும் தடுப்பூசிகள் நிறுத்தப்பட்டிருப்பது, அந்நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச அளவில் ஏழை நாடுகளுக்கு குழந்தைகளுக்கான தடுப்பூசிகள் மற்றும் நோயெதிர்ப்புத்திறன் மருந்துகள் வழங்கி உதவும் பொருட்டு தனியார் பங்களிப்புடன் 'உலகளாவிய தடுப்பூசிகள் மற்றும் நோயெதிர்ப்புத்திறன் அதிகரிப்புக்கான கூட்டணி (ஜி.ஏ.வி.ஐ)' உதவியுடன், பல்வேறு நாடுகளும் தடுப்பூசிகள் பெற்று மக்களுக்கு வழங்கி உதவி வருகின்றன. அந்த வகையில், உலக மக்கள்தொகையில் ஐந்தாவது பெரிய நாடான பாகிஸ்தானுக்கும் ஜி.ஏ.வி.ஐ. முன்னெடுப்பால் இந்தியாவிடமிருந்து பெருமளவில் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வந்தன.


இந்த நிலையில், கடந்தாண்டு பஹல்காமில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களுக்குப்பின், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான உறவில் கடும் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, கடந்தாண்டு மே மாதத்துக்குப்பின், இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு ஏற்றுமதியாகும் தடுப்பூசிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

ஜி.ஏ.வி.ஐ.-இன் 49 சதவீத பங்களிப்புடன் ஆண்டுக்கு 400 மில்லியன் டாலர் செலவில் தடுப்பூசிகள் இறக்குமதி செய்யும் பாகிஸ்தானுக்கு, இந்தியாவுடனான மோதல்போக்கால் நிதிச்சுமை மேலும் அதிகரித்துள்ளது. இதே நிலை நீடித்தால், தடுப்பூசி இறக்குமதிக்காக 2031இல், ஆண்டுக்கு 1.2 பில்லியன் டாலர் செலவிடும் சூழல் உருவாகும் என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, நிதிச்சுமையை தணிக்க, உள்நாட்டில் தடுப்பூசிகள் உற்பத்தியை அதிகரித்து தன்னிறைவு நிலையை எட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிங்கப்பூர் பெண்ணிடம் ரூ. 1.9 கோடி மோசடி செய்த இந்திய வம்சாவளிக்கு 23 மாதங்கள் சிறை!

**சிங்கப்பூர், பிப்.8:**



சிங்கப்பூரில் இளம்பெண்ணை ஏமாற்றி ரூ. 1.9 கோடி மோசடி செய்த இந்திய வம்சாவளி இளைஞருக்கு 23 மாதங்கள் சிறைத் தண்டனை வழங்கி அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சிங்கப்பூரில், 2021 ஆம் ஆண்டில் இணையத்தில் பிஎஸ்4 எனும் விடியோ கேமை தேவேந்திரன் இளங்கோவன் (31) என்பவர் விளம்பரம் செய்தார். இந்த விளம்பரத்தைக் கண்ட 25 வயதான பெண் ஒருவர், அதனை ஆர்டரும் செய்தார்.

இதனைப் பெறுவதற்கு முன்னதாகவைப்புத்தொகையாக 150 சிங்கப்பூர் டாலரை செலுத்துமாறும், மீதத்தொகையை டெலிவரியின்போதும் செலுத்துமாறும் தேவேந்திரன் கூறியுள்ளார். தொடர்ந்து, மொபைல் எண்களை இருவரும் பகிர்ந்து கொண்டநிலையில், பெண்ணை மேலும் பணம் செலுத்துமாறு தேவேந்திரன் கூறியுள்ளார். இருப்பினும், பிஎஸ்4-ஐ தேவேந்திரன் வழங்கவில்லை. இதனைத் தொடர்ந்து, தன்னுடைய பல் சிகிச்சை, நாய்க்கான சிகிச்சை, நீதிமன்ற வழக்கு, சப்ளையருக்கான டிப்ஸ் என்றெல்லாம்கூறி, பெண்ணிடம் பணம் கேட்டுள்ளார். ஆனால், அவற்றை தனது தனிப்பட்ட செலவுகளுக்காகவும், சூதாட்டத்திலும் செலவழித்துள்ளார். இவ்வாறு மொத்தமாக 2,68,000 சிங்கப்பூர் டாலரை (சுமார் ரூ. 1.90 கோடி) தேவேந்திரன் பொய்கூறி, மோசடி செய்துள்ளார்.

தன்னிடமிருந்த பணம் அனைத்தும் காலியானதாக பெண் கூறியபோதிலும், தொடர்ந்து அவரை தேவேந்திரன் தொல்லை கொடுத்துள்ளார். இதனிடையே, வங்கிக் கணக்கிலிருந்து பணம் அடிக்கடி நிறைய காலியாவதைக் கண்ட பெண்ணின் தந்தை, தனது மகளிடம் விசாரித்தும் உள்ளார். இதனையடுத்து, தேவேந்திரன் குறித்து காவல் நிலையத்தில் மோசடி புகாரும் அளித்தார். இந்த நிலையில்தான், தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட தேவேந்திரனுக்கு 23 மாதங்கள் சிறைத் தண்டனை வழங்கி, அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. வழக்கின்போதே, 1,04,000 சிங்கப்பூர் டாலரை (சுமார் ரூ.74 லட்சம்) இரு தவணையாக தேவேந்திரன் செலுத்தியும் விட்டார்.

## சீனாவில் வசந்த காலத்தை ஏர் பூட்டி வரவேற்ற மக்கள்



**பெய்ஜிங், பிப்.8:**

சீனாவில் குளிர்காலம் முடிந்து வசந்த காலம் தொடங்குகிறது. இதனை, அந்நாட்டு மக்கள் பாரம்பரிய முறைப்படி உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர். விவசாயத்தை போற்றும் வித மாக நடைபெறும் இந்த விழாவில், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் திரண்டு ஏர் பூட்டி நிலத்தை உழுவது போன்ற சடங்குகளைச் செய்து வசந்த காலத்தை முறைப்படி வரவேற்றனர்.

சீன கலாசாரத்தில் 'வசந்த காலம்' என்பது புதிய தொடக்கத்தையும், நல்ல விளைச்சலையும் குறிக்கும் ஒரு முக்கிய நிகழ்வாகும். இதையொட்டி பல இடங்களில் வண்ணமயமான கலை நிகழ்ச்சிகளும், பாரம்பரிய ஊர்வலங்களும் நடைபெற்றன. காளைகளுக்கு மாலை அணிவித்து. நிலத்தில் ஏர் பூட்டி உழுவதன் மூலம் இந்த ஆண்டுவிவசாயம் செழிப்பாக அமையும் என்பது அவர்களின் நம்பிக்கையாக உள்ளது. இந்த கண்கவர் திருவிழாவில் சுற்றுலாப் பயணிகளும் பெருமளவில் கலந்து கொண்டு சீனர்களின் பாரம்பரியத்தை வியந்து பார்த்தனர்.

## 90 கிட்ஸ்களை விட அறிவாற்றலில் பின் தங்கும் ஜென்சிக்கள்: ஆய்வில் வெளியான தகவல்

80, 90களில் பிறந்த மில்லினியல்கள் விட ஜென்சி (GEN-Z) தலைமுறையினர் குறைவான ஐகியூ அளவையே பெற்றுள்ளதாக ஆய்வில் தகவல் வெளியாகியுள்ளது. புகழ்பெற்ற நரம்பியல் விஞ்ஞானி ஜாரெட் ஹோர்வத் நடத்திய ஆய்வில், முந்தைய தலைமுறையை விட புதிய தலைமுறையின் ஐகியூ அதிகமாக இருக்கும் என்ற பிளைன் விளைவு கோட்பாடு தலைகீழாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் மற்றும் சமூக ஊடக பயன்பாடுகளால், ஆழமாகச் சிந்திக்கும் திறன் மற்றும் நீண்ட நேரம் கவனம் செலுத்தும் ஆற்றல் குறைந்துள்ளதே ஜென்சி தலைமுறையின் அறிவுத்திறன் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக கூறப்பட்டுள்ளது. அறிவுத்திறன் மட்டுமின்றி ஜென்சி தலைமுறையினர் பழக்க வழக்கங்களிலும் மில்லினியல்களை விட மாறுபட்டுள்ளார்களாம். இதில் ஆரோக்கியமான ஒரு விஷயம் என்னவென்றால், மதுப்பழக்கத்தில் முந்தைய தலைமுறையினரைவிட ஜென்சிக்கள் ஆர்வம் குறைவானவராக உள்ளார்கள். 2000-களில் 72 சதவீதமாக இருந்தது தற்போது 62 சதவீதமாக குறைந்துள்ளதாம்.

## பாகிஸ்தான்: மசூதியில் நடந்த தாக்குதலுக்கு ஐஎஸ்ஐஎஸ் பொறுப்பேற்பு

**இஸ்லாமாபாத், பிப்8:**

பாகிஸ்தானில் சமீப காலமாக பயங்கரவாத தாக்குதல் அதிகரித்து வருகிறது.

குறிப்பாக தெஹ்ரீக்-இ-தலீபான் அமைப்பை சேர்ந்த பயங்கரவாதிகள் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் உள்பட பல்வேறு நகரங்களில் அடிக்கடி தாக்குதல் நடத்தி பெரும் சேதங் களை விளைவித்து வருகின்றனர்.

அந்தவகையில் நேற்றும் தலைநகரில் பெரும் தாக்குதல் ஒன்று அரங்கேற்றப்பட்டது. அங்குள்ள தர்லாய் பகுதியில் ஷியா பிரிவு முஸ்லிம்களின் மசூதி ஒன்று உள்ளது. இங்கு நேற்று வெள்ளிக்கிழமை தொகை நடந்து கொண்டிருந்தது. இதில் ஏராளமானோர் பங்கேற் றிருந்தனர். அப்போது உடலில் வெடிகுண்டுகளை கட்டிக்கொண்டு ஒருவர் மசூதிக்கு வந்தார். அவரை வாசலில் தடுத்து நிறுத்தினர். அப்போது அவர் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்தார். உடனே பலத்த சத்தத்துடன் அந்த குண்டுகள் வெடித்துச்சிதறின. இதில் மசூதியில் தொழுகைக்கு வந்திருந்த பலர் தூக்கி வீசப்பட்டனர். அதில் பலரும் உடல் சிதறி சம்பவ இடத்தி லேயே பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த சம்பவத்தில் 31 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 169 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்தநிலையில், இஸ்லாமாபாத் மசூதியில் நடந்த தற்கொலை படை தாக்குதலுக்கு ஐஎஸ்ஐஎஸ் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# "அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார்; ஆனால் அச்சுறுத்தல்களுக்கு அடிபணிய மாட்டோம்"

**ஹவானா, பிப்.8:**

கியூபா அமெரிக்காவுடன் பேச்சு வார்த்தை நடத்த எப்போதும் தயாராகவே உள்ளது. ஆனால் அவர்கள் அச்சுறுத்தல்களை முன்னெடுத்தால் அதற்கு மத்தியில் பேச்சுவார்த்தை நடக்காது என அந்நாட்டு ஜனாதிபதி மிக்வெல் டயஸ்-கானெல் பெரு மிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

செய்தியாளர்களிடம்பேசிய அவர் கியூபா தோல்வியடைந்த நாடு அல்ல. உலகின் மிகப்பெரியநாட்டின் உச்சகட்ட அழுத்தத்தை மிகுந்த உறுதியுடன் எதிர்கொள்ளும் நாடு என்று பெரு மிதத்துடன் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய கியூப தலைமுறை யினர் பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியிலேயே வளர்ந்தவர்கள், தற்போ தைய கடினமான மோசமான சூழலை "படைப்பாற்றல் மிக்க தடுப்பாற்றல்" (CREATIVE RESISTANCE) மூலம் வென்று காட்டுவோம் எனவும் அவர் உறுதியளித்தார்.

வெனிசுலாவுடனான உறவு வெனிசுலாவுடனான உறவானது இரு நாடுகளுக்கு இடையிலான வெறும் பண்டமாற்று முறை மட்டுமல்ல இது ஒற்றுமை மற்றும் ஒருவருக்கொருவர் துணையாக நிற்கும் சகோதரத்துவம். கியூபா தனது மருத்துவச் சேவையை வழங்குகிறது, அதற்கு ஈடாக வெனி சுலா எரிபொருளை வழங்குகிறது. சமீப காலமாக கடல் வழியாக அமெரிக்கா செய்துவரும் முற்றுகையினால் இந்த எரிபொருள் விநியோகம் பாதிக்கப் பட்டுள்ளது.

வெனிசுலா அரசு ஒத்துழைப்பை விரும்பும் வரை, கியூபா என்றும் தோள் கொடுக்கும் என்று அவர் தெரி வித்தார். கியூபா தனித்து விடப்படவில்லை அமெரிக்காவின் எரிசக்தி முற்றுகைக்குப்பிறகு, சர்வதேச அளவில் கியூபா விற்கு ஆதரவு பெருகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

ரஷ்ய ஜனாதிபதி புடின், சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங் ஆகியோர் கியூபா விற்கு தங்களது முழு ஆதரவைத் தொலைபேசி வாயிலாக உறுதிப்படுத்தி யுள்ளனர்.

"எதிரி கியூபாவிற்கான அனை த்து வழிகளையும் அடைக்கப் பார்க்கி றான். ஆனால் நான் பொறுப்புடன் கூறுகிறேன், கியூபா தனித்து விடப்பட வில்லை பல நாடுகள் மற்றும் நிறுவனங் கள் எங்களுடன் இணைந்து செயல்படத் தயாராக உள்ளன" என்றார். பலதரப்பு உறவுகளை பாதுகாக்க வேண்டும் உலகம் அமெரிக்காவின் ஒற்றை ஆதிக்கத்திற்கு (HEGEMONY) அடிபணி யக்கூடாது. இது ஒரு சித்தாந்த மற்றும் கலாச்சாரப் போர்.

மக்கள் தங்கள் அடையாளத்தை மறந்து, அமெரிக்காவின் கலாச்சாரத்தை ஏற்கும் வகையில் இந்தப் போர் நடத்தப்படுகிறது. பிரிக்ஸ், ஜி-77 மற்றும் அணிசேரா நாடுகள் போன்ற அமைப்புகள் ஒன்றிணைந்து அமெரிக்காவின் இந்த "பாசிச" நடவடிக்கைகளை எதிர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.